# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 09 ஞாயிற்றுக்கிழமை (21.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 087


## 13ஆவது திருத்தம் ஏற்கனவே நடைமுறையில்.....

# கூட்டமைப்பினர் பேச விரும்பாவிடின் புதிய தலைவர்களுடன் நான் பேசுவேன்

## 'இந்து' நாளிதழுக்கு ஜனாதிபதி மஹிந்த செவ்வி



கொழும்பு, பெப்ரவரி 21

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடன் பேசுவதற்கு நான் முயற்சித்தேன். ஆனால் அவர்கள் அக்கறை காட்டவில்லை.

எவ்வாறாயினும் பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்னர் அவர்கள் என்னுடன் வந்து பேசமுடியும். அதற்கு அவர்கள் விரும்பாவிடின் புதிய தலைவர்களுடன் நான் பேச்சு நடத்துவேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

13ஆவது திருத்தம் நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறையில் உள்ளது. காணி அதிகாரம் உட்பட்ட பல விடயங்களும் அமுலாகிவருகின்றன. பொலீஸ் அதிகாரம் மட்டுமே மாகாண சபை களுக்கு வழங்கப்படவில்லை. - என்றும் ஜனாதிபதி கூறினார்.

'இந்து' ஆங்கில நாளிதழின் ஆசிரியர் என். ராமுக்கு வெள்ளிக்கிழமை இரவு அலரி மாளிகையில் வைத்து அளித்த விசேட செவ்வியில் ஜனாதிபதி இதனைத் தெரிவித் தார்.

பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்ததும் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

'இந்து' நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்த ஏனைய முக்கிய பகுதிகள் வருமாறு-

2009 ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கமும் வெளியிட்ட கூட்டறிக்கையின்

(23ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சி வேட்பாளராக களத்தில் குதிக்கிறார் தங்கேஸ்வரி

மட்டக்களப்பு, பெப்.21

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வி தங்கேஸ்வரி

(24ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகளை விட்டு வெளியேற முன்னாள் எம்.பிக்களுக்கு உத்தரவு

கொழும்பு,பெப்.21

மிதிவெலவில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தில் இருந்து வெளியேறுமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலருக்கும் நாடாளுமன்றின் பிரதி செயலாளர் நாயகம் டபிள்யூ.பி.டி.தஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

அடுத்த நான்கு வாரங்களுக்குள் வீடுகளை காலி செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (அ-1)

## கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களின் பட்டியல் நாளை வெளியிடப்படும் எனத் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடுபவர்களின் வேட்பாளர் பட்டியல் நாளை வெளியிடப்படும்.

கூட்டமைப்பின் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் இப்படிக்கூறினார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் ஜெயகுலராஜா, மன்னாரில் சூசைதாசன் கூட்டமைப்பில் போட்டி; சிவநாதன் கிஷோர் 'அவுட்'

வவுனியா,பெப்.21

எதிர்வரும் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவு தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு வைத்திய கலாநிதி டபிள்யூ.ஜெயகுலராஜா களம் இறங்குகி றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக அவர் போட்டியிடவிருக்கிறார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி யானைச் சின்னத்தில் போட்டியிடும்

கொழும்பு,பெப்.21

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடளாவிய ரீதியில் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் கிழக்கு மாகாண வேட்பாளர்கள் பட்டியல் தயார்

### ஓரிருவரைத் தவிர ஏனையோர் புதுமுகங்கள்

மட்டக்களப்பு,பெப்.21

கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பல புதுமுகங்கள் களம் இறங்க உள்ளனர்.

கொழும்பில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் நியமனக் குழுவின் கூட்டங்களில் கிழக்கு மாவட்டங்களின் வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலிப் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்க புதிதாக சமூகக் கிராமங்கள் அமைக்கத் திட்டம்

### புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுதந்த தெரிவிப்பு

கொழும்பு, பெப்.21

தமிழீழ விடுதலைப் புலிகளின் 11,000 முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக புதிதாகச் சமூகக் கிராமங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன.

புதிதாக நியமனம் பெற்றுள்ள புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் நடந்த கடைசி மோதல்களின்

(24ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

நீடித்த உத்தரவாதம்

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி மானிப்பாய்

SINGER Plus

MORE BRANDS-MORE CHOICE

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

சுண்ணம்புக்கல் கலவையற்றதால்
நிப்போன் சிமெந்து நன்கு
பற்றிக்கொள்ளும் சக்தி வாய்ந்தது



NIPPON CEMENT

வாழ்வோடு இணைந்தது

SLS 107

TOKYO CEMENT GROUP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.



10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று

Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை

Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 0817 918 981 / 0773 123 523



## ஜேர்மன்- Deutsch, Dutch French மொழி வகுப்புகள்

கொழும்பு விவேகானந்த அக்கடமியின் யாழ். கிளையில் Germany, Netherland Visa பரீட்சைகளுக்கான வகுப்புகளும் French , Italy, Danish வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் German டொச் மொழிப் பரீட்சையில் எமது மாணவர்கள் அனைவரும் சித்தி அடைந்துள்ளனர்.

இல.3, 2nd Lane. (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
பலாலி வீதி, யாழ். 0774842464,
0213216928.


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சுப்ரமணியம் (ஆச்சாரியார்)



அம்மன் வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்ரமணியம் (18.02.2010) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் பாசமிகு கணவரும், விஜிந்தன் (பிரான்ஸ்), தனேசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி (கனடா), வேலாயுதம் (கனடா), சண்முகநாதன் (கனடா), பத் மநாதன் மதிவதனா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம் (கனடா), சோமசுந்தரம் (கனடா), நவரத்தினராசா, குலசிங்கம், செல்வவதி, தவேந்திரராசா (கனடா), இராஜேஸ்வரன் (கனடா), பத்மாவதி, பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பண்டத்தரிப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.*
*தொ.பே.இல 0773886131* (92116) தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி றங்கநாயகி பாலானந்தன்



தும்பளையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பா.றங்கநாயகி நேற்று (20.02.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சி.பாலானந்தனின் அன்பு மனைவியும், வசந்தாதேவி (லண்டன்), தும்பளையைச் சேர்ந்தவர்களான சிவானந்தன் (சிவா நகை மாளிகை, பருத்தித்துறை), சச்சிதானந்தன் , காலஞ்சென்ற பரமானந் தன் (ஜேர்மனி) மற்றும் சதானந்தன் (கொக்குவில்), சகுந்தலாதேவி (கொக்குவில்), பத்மாதேவி (உரும்பிராய்), நித்தியானந்தன் (கனடா), லலிதாதேவி (அச்சுவேலி), சசிகலாதேவி (ஆசிரியர், யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஜெகதாஸ், சிவஞானம், சந்திரசேகரம், ரவீந்திரன், றதிதேவி, றஞ்சிதமலர், சிவமணி (சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர், தொழில் திணைக்களம்), சாந்தினி (வவி) ஆகியோரின் மாமியாரும், சிவதாஸ், பானுமதி, ராம்தாஸ், வளர்மதி, சிவறூபன் (லண்டன்), சோபனா, மேருபரன், தேனுஜா (கொக்குவில்), றஞ்சித் (ஜேர்மனி), பிரவீனா, டனுஷா (கனடா), தர்சன் (அச்சுவேலி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

*சொர்ணவடலி லேன்,* (92106) மகன் சிவானந்தன் (தும்பளை),
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* மருமகன் சிவஞானம் (கொக்குவில்).


## காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு ( K.K.S வீதியிலுள்ள சேச் முன் ஒழுங்கையில்) 1½+1 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு : 0776366308, 0779522027



## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் யாழ்.இந்து கௌரவ குடும்பம் UK Citizen 30, 33, 36, 40 வயது. Canada Citizen 31, 34, 37 வயது, ஜேர்மன் Citizen 30வயது. பிரான்ஸ் Citizen 29 வயது. சுவிஸ் Citizen 33 வயது. அவுஸ்ரேலியா Citizen 36, 39 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். பதிவுக்கட்டணம் இல்லை. 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு:00447508295863, 00447535384166,
Fax; 00442086720673,
E.mail; www.Ayankaran wedding @yahoo.com



## முகாமைத்துவ வேலை வாய்ப்பு

சர்வதேச கனேடிய இணை நிறுவனத்திற்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவை.

* முன் அனுபவம் அவசியமற்றது
* தகைமை G.C.E (O/L)

தொடர்புகட்கு:- 0214900001, 0214900350, 0712088285


## தவறிவிட்டது

தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் வீதி, அல்வாய் கிழக்கு, அல்வாய் எனும் முகவரியைச் சேர்ந்த சிவலிங்கம் சஞ்சீபன், சிவலிங்கம் விதுசன் என்பவர்களுடைய தேசிய அடையாள அட்டைகள் யாழ் வேம்படிச் சந்திக்கு அருகாமை யிலுள்ள மக்கள் கட்சி அலுவலகத்தில் பதிவுக் குச் சென்றபோது தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத் தவர்கள் தயவு செய்து கீழக்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொ. இலக்கம் - 0775397904
சி.சஞ்சீபன் அ.அ.இல - 903600411V
சி. விதுசன் அ.அ.இல -
விலாசம் - தில்லையம்பலப்பிள்ளையார் கோவிலடி, அல்வாய் கிழக்கு, அல்வாய்.

## நாகேஸ்வரத்தில் ஏகாதசித் தீர்த்தம்

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம், ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்த்தானத்தில் எதிர் வரும் வியாழக்கிழமை ஏகாதசித் தீர்த்தம் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வழமைபோல் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசை ஆரம்பமாகும். 9 மணிக்குச் சிறப்புச் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாராயணர் பூமாதேவி, ஸ்ரீதேவி சமேதராக வீதியுலா எழுந்தருள்வார். நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம் பெறும். (1-160)

## சாரணீய நிறுவுநர் தின நிகழ்வு

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சாரணீய நிறுவுநர்தினம் நாளை பி.ப. 3.00 மணியளவில் மாவட்ட சாரணீய ஆணையாளர் திரு.எம் .ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் பருத்தித்துறை முகாமையாளர் திரு. எம்.பரமானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (201-ரி)

## இரத்ததான முகாம்

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் வருடாந்த இரத்ததான முகாம் இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் குருதிக் கொடையாளர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கப் படவுள்ளதாக ஐக்கிய விளையாட்டுக் கழகத் தலைவர் எஸ். பிரசாத் அறிவித்துள்ளார். (201-16)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி எலிசபேத் சின்னம்மா அருளானந்தம்

(இளைப்பாறிய ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, உ/மகளிர் கல்லூரி)

கைதடி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் பேக்கரி லேன், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் சின்னம்மா அருளானந்தம் 19.02.2010 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்து அருளானந்தத்தின் (இளைப்பாறிய ஆசிரியர், உடு.அமெரிக்கன் மிஷன் கல்லூரி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிர்காமர் - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகளும் திருமதி தங்கரத்தினம் (பாக்கியம் அக்கா), காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் மகேஸ்வரி, பரமேஸ்வரி, துரைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை உடுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக உடுப்பிட்டி தென்னிந்திய திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பேக்கரி லேன்,*
*உடுப்பிட்டி.* (92102) தகவல்: குடும்பத்தினர்.

## செல்லையா அழகேஸ்வரசாமி ஞானச்சந்திரன்

(இளைப்பாறிய கிராம சேவையாளர்)



அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செ.அழகேஸ்வரசாமி ஞானச்சந்திரன் நேற்று (20.02.2010) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அழகேஸ்வரசாமியின் அன்பு மகனும் திரு.திருமதி ஜினதாஸவின் மருமகனும் சாந்தரூபியின் (ஆசிரியர், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்) பாசமிகு கணவரும் தேவச்சந்திரன், சரோஜினிதேவி, இலங்காதேவி, ஸ்ரீகரன், றதிதேவி, விஜயா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாக்கியராஜா, இராஜகருணா, ஜீவராஜா, தேவராஜா (C.T.B, வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் மகிந்தன் (லண்டன்), பிரகாஸ் (மந்திகை ஆதார வைத்தியசாலை), பிரசாந் (கனடா), பிரபாஜினி, மதனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மினி, பத்மமலர், ஜீவிதா, டேவிற்ராஜ் ஆகியோரின் மாமனாரும் அக்ஷயன், நிஷான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.* (99160) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி சகுந்தலாதேவி கருணாநிதி



கோப்பாய் வடக்கு, கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி கருணாநிதி 18.02.2010 புதன்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கனடா கந்தசாமி கோயில் அறங்காவல் சபை உறுப்பினர் இரத்தினம் கருணாநிதி அவர்களின் அருமை மனைவியும் காந்தரூபன், ஜனதா, கஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிறிபவனின் (கனடா) அன்பு மாமியாரும் மகாலிங்கம் (கோப்பாய்), இந்திராதேவி (கனடா), தவலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயபரன் (இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில்), தயாபரன் (கனடா), வசந்ததேவி (ஜேர்மனி), கோமளாதேவி (கோப்பாய்), யோகதேஸ்வரன் (அப்பன்-பிரான்ஸ்), இராதாதேவி (கோப்பாய்), காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் சுபத்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் திலகவதி (கோப்பாய்), புஸ்பாதேவி (கனடா), வதனதேவி (பிரான்ஸ்), புவனேந்திரன் (ஜேர்மனி), விநாயகலிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 8 மணிவரை 1591 ELGINMILLS இல் பார்வைக்கு வைக்கப்பட்டு 22.02.2010 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் கிரியைகள் நடைபெற்று ஒரு மணியளவில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- கருணா (905 756 4107)
தவம் (416 818 3196)
சீலன் (647 262 6027

*கந்தசாமி கோயிலடி,*
*கோப்பாய் வடக்கு.* (95280)

தகவல்: இ.உ.தயாபரன் (மைத்துனர்).


TCN EXPRESS INTERNATIONAL

உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிக்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)

குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா வீதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்

TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆறுதல் தரும் 'ஆறுதல்' அமைப்பு

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் முக்கியமான செல்வம் கல்விதான். நமது தமிழர் தேசத்தின் - தேசியத்தின் - பல்வேறு அடிப்படைப் பண்பியல்புகளைப் பெரும்பான்மை மேலாதிக்கம் இலக்கு வைத்து அழிக்கத் தொடங்கிய காலகட்டத்தின் ஆரம்பத்திலேயே கல்வித்துறையின் சிதைவும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இலங்கைத் தீவில் தமிழர்களுடைய தேசியத் தனித்துவத்தை அடையாளப்படுத்தி நின்ற அவர்களின் மொழி, தாயக நிலம், பண்பாடு போன்ற அடிப்படைகளைத் தனது மேலாண்மை ஆக்கிரமிப்பு மூலம் அழிக்க எத்தனித்த பேரினவாதம், தமிழர்களின் பெரும் சொத்தாகவும், வலிமையாகவும், வளமாகவும் இருந்த கல்வித்துறையையும் விட்டுவைக்கவில்லை. மிக நுணுக்கமாக - நுட்பமாக - திட்டமிடப்பட்ட கைங்கரியங்கள் மூலம் தமிழர்களின் கல்விச் செல்வத்தைச் சிதறடிக்கும் நாசவேலை இங்கு கட்டவிழ்ந்தது.

பேரினவாதத்தின் இந்தத் தந்திரோபாயத் திட்டத்தின் உச்சமாக எழுபதுகளின் ஆரம்பித்தில் கொண்டு வரப்பட்ட உயர் கல்விக்கான தரப்படுத்தல் அமைந்தது.

மொழி, அரசியல் உரிமைகள் தாயக மண் ஆகியவை மீது கண்வைத்த அடக்குமுறைப் பேரினவாதம், தமிழர்களின் கல்வி மீதும் தனது ஒடுக்குமுறைக் கைவரிசையைக் காட்ட முற்பட்டபோதே நீதி, நியாயம், கௌரவ வாழ்வு ஆகியவை வேண்டித் தமிழர்கள் அதுவரை நடத்தி வந்த அஹிம்சை ரீதியான அரசியல் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பியது என்பது வரலாறு.

தமது கல்வித்துறை வாய்ப்புகளும்-உரிமைகளும்-தாங்கள் தமிழர்கள் மற்றும் சிறுபான்மையினர் என்ற காரணத்தால் பாகுபாடு காட்டப்பட்டு, மறுக்கப்பட்டமையால் கடும் விரக்தியும், விசனமுமுற்ற தமிழ் இளைஞர்கள் தங்கள் பிறப்புரிமைகளை மீட்பதற்காக ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டார்கள்; தள்ளப்பட்டார்கள்.

அதன் பெறுபேறாகவே இலங்கையில் இன யுத்தம் கடந்த மூன்று தசாப்தங்களாகக் கோரமாக - கொடூரமாக - அரங்கேறியது. உயிரிழப்புகளும், உடைமை அழிவுகளும், சொத்து இழப்புகளுமாகப் பெரும் வன்முறைப் புயல் வீசியது.

நீதி, நியாயம் தேடி சிறுபான்மையினரான தமிழர்கள் நடத்திய ஆயுதப் போராட்டத்தைத் தனது இராணுவ மேலாதிக்கம் கொண்டு அடக்கி ஒடுக்குவதற்குத் தென்னிலங்கை மேற்கொண்ட - தொடுத்த - குரூர யுத்தம் காரணமாகத் தமிழரின் தாயகம் இன்று ஒரு தலைமுறையின் முழு அழிவைத் தரிசித்துத் துவண்டு கிடக்கின்றது.

உயிரழிவுகள், பௌதிகவள அழிவுகள் சொத்து இழப்புகள் ஒருபுறம் இருக்க, தமிழர்களின் பெரும் செல்வமான கல்வித்துறைக்கு ஏற்பட்ட அழிவுகள் தாம் அலகுகளினால் கணக்கிட முடியாதவாறு மலைப்பை ஏற்படுத்துவனவாக உள்ளன.

கல்வித்துறையைப் பொறுத்தவரை அதன் பௌதிக வளங்களுக்கு யுத்தப் பேரரக்கன் ஏற்படுத்திய அழிவுகள் அளவிட முடியாதவையாக இருக்கின்றமை ஒருபுறம். பாடசாலைகள், அலுவலகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன அழிந்துபோயுள்ளன. போரினால் சிதறுண்ட குடும்ப வாழ்க்கை காரணமாக கல்வி வாய்ப்பைத் தொலைத்த சிறார்களின் எண்ணிக்கை பல்லாயிரம்.

இவற்றுக்கு அப்பால் மறுபுறம் இத்துறையில் நுணுக்கமாக அவதானிக்கப்பட முடியாத - மற்றொரு பாதிப்பும் ஆழமாகத் தாக்கி நிற்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

தமிழர் தாயகத்தில் பல வருடங்களாக நீடித்த போர் மற்றும் ஆழிப்பேரலை இயற்கை அனர்த்தம் போன்ற பேரழிவுகள் காரணமாக கல்வித்துறையுடன் சம்பந்தப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்ற தரப்பினர் பெரும் உளவியல் மற்றும் சமூக நிலைத் தாக்கங்களுக்கும் உள்ளாகிப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள நமது கல்வித்துறையை மீட்டெடுக்கும் எத்தனத்தில் இந்த உளவியல் பாதிப்பிலிருந்த கல்வித்துறையை விடுவித்து, மேம்படுத்தி வழமைக்குக் கொண்டு வரும் முயற்சியும் முக்கியமானதாகும், அவசியமானதாகும்.

சமூகத்தில் இயல்பு வாழ்க்கை முறைக்கு முரணான சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறைகள், குடும்ப வன்முறைகள், தற்கொலைகள், குடிபோதைப் பழக்க வழக்கங்கள் போன்ற சமகால செல்நிலைப் போக்கும் நமது கல்வித் துறையை வழமைக்கு மீட்டெடுக்கும் முயற்சியில் இடையூறாக உள்ளன.

இத்தகைய பாதிப்புகளில் இருந்து கல்வித்துறையை மீட்கும் முயற்சியில் உளவளச் சிந்தனையின் அடிப்படையிலான வழிகாட்டல் முக்கியத்துவம் பெறுகின்றது.

போரழிவு உட்பட்ட இன்னோரன்ன பாதிப்புகளினால் பின்னடைவு கண்டுள்ள நமது கல்வித் துறையை மீட்டெடுக்கும் முயற்சியின்போது உளவளத் துணையாளர்களின் அரியசேவையை ஆய்வு அடிப்படையில் உட்படுத்தி, முறையாகப் பயன்படுத்தும் நடவடிக்கைத் திடடம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் வடக்கு, கிழக்கில் செம்மையான முறையில் இயங்கிவரும் 'ஆறுதல்' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் பங்கு பணி கல்வியியலாளர்களினால் மெச்சிப் போற்றப்படுகின்றது. துன்றசார்ந்த பல்வேறு பேராசிரியர்களின் வழிகாட்டலில் சத்தம், சந்தடியின்றி அமைதியாகவும், அதேசமயம் சமூகப் பிரக்ஞை மற்றும் கல்வி மேம்பாடு தொடர்பாகத் துல்லியமான திட்டங்கள், இலக்குகள், வரையறைகளோடும் இயங்கி வரும் 'ஆறுதல்' நிறுவனம், இன்று திருகோணமலையில் 'ஆறுதல்' என்ற பெயரிலேயே உளவியல், சமூக காலாண்டு இதழை வெளியிடுகின்றது.

இன்றைய சமூக உளவளக் கல்வித் தேவைகளை நோக்கிய விழிப்புணர்வையும் செயற்திடடங்களையும் வடக்கு-கிழக்கு கல்விப்புலம் எங்கும் விரிவுபடுத்தி நிற்கும் இந்த அமைப்பை நமது கல்வித்துறை நிர்வாகிகள் நன்கு பயன்படுத்திக்கொள்ள முன்வரவேண்டும்.

# கச்சதீவு, பாலைதீவு தேவாலய உற்சவங்கள்; பக்தர்களுக்கான பயண ஏற்பாடுகள் பூர்த்தி

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதியும் கிடைத்துவிட்டது

யாழ்ப்பாணம், பெப்.21

கச்சதீவு புனித அந்தோனியார், பாலைதீவு புனித அந்தோனியார் ஆகிய இரு தேவாலயங்களின் இந்த வருட உற்சவங்களுக்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்துள்ளதாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த இரு புனித அந்தோனியார் தேவாலயங்களின் உற்சவங்கள் தொடர்பாகக் கடந்த 17ஆம் திகதி அரச அதிபர் தலைமையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் -

* இந்த உற்சவங்களுக்குச் செல்லும் பக்தர்கள் தங்களுக்குத் தேவையான குடிதண்ணீர், உணவு மற்றும் தேவையான பொருள்களை எடுத்துச் செல்லவேண்டும்.

* எதிர்வரும் 27ஆம் திகதி காலை 5 மணிக்குக் குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்தும் நெடுந்தீவு இறங்குதுறையில் இருந்தும் படகுகளில் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

* 28ஆம் திகதி மாலை 6 மணியுடன் சகல அடியார்களும் அந்தந்தப் பகுதிகளில் இருந்து திரும்பிவிட வேண்டும். அத்துடன் இந்த உற்சவங்களை சிறப்பாக நடத்துவதற்கு அனைவரும் தங்களது பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும்

இதனிடையில் இவ்வருடம் மாசி மாதம் 25ஆம் திகதிமுதல் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் பங்குனி மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ள பாலைதீவு புனித அந்தோனியார் தேவாலயம் ஆகியவற்றின் வருடாந்த உற்சவங்களில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.(ஒ-16)

'நீரிழிவை வெற்றிகொள்வோம்'

# யாழ்.பல்கலை மருத்துவபீடத்தில் இன்று கண்காட்சி கலைநிகழ்வுகளுடன் ஆரம்பம்

## வைத்தியநிபுணர்களின் விவாத அரங்கு; மாணவர், தாதியரின் நடனம், நாடகங்கள்

யாழ்ப்பாணம், பெப்.21

'நீரிழிவை வெற்றிகொள்வோம்' என்ற தொனிப்பொருளுடனான விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஆரம்பமாகின்றன.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் இந்த நிகழ்வுகளை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கவிருக்கிறார்.

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்.மருத்துவபீடம், யாழ்.பொது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து இந்தக் கண்காட்சியை மிகவும் விரிவான முறையில் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் ஏற்பாடு செய்துள்ளது. இன்று ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி எதிர்வரும் 27ஆம் திகதி வரை - தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நடைபெறும்.

இன்று பிற்பகல் 2மணிக்கு பல்வேறு கலை நிகழ்வுகளுடன் கண்காட்சி ஆரம்பமாகிறது. அந்த நிகழ்வில் "நீரிழிவை வெற்றிகொள்வோம்" என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்படும்.

இன்றைய கலை நிகழ்வுகள் வருமாறு-

வைத்தியர்களும் மருத்துவமாணவர்களும் பங்கெடுக்கும் நாடகங்கள், மருத்துவ மாணவர்களும் தாதியர்களும் தாதிய மாணவர்களும் பங்கெடுக்கும் நடனம், வைத்திய நிபுணர்கள் பங்குகொள்ளும் விவாத அரங்கு, வைத்தியர்களும் தாதியர்களும் தாதிய மாணவர்களும் பங்கெடுக்கும் நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள், நூல் இசைத்தட்டு வெளியீடு, பாடல்களும் கவிதைகளும்.

நீரிழிவுநோய்க்கு உட்பட்டவர்கள், பொதுமக்கள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரையும் இன்று நடைபெறும் கலைநிகழ்ச்சிகளை கண்டுகளிக்க வருமாறு அழைக்கின்றனர் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள்.

(ஒ-1)

# திருடப்பட்ட பொருள்கள் யாழ். பஸ் நிலையத்தில்

தென்மராட்சிகிழக்கு,பெப்.21.

குடாநாட்டில் பஸ் பயணங்களின் போது முடிச்சுமாறிகளினால் திருடப்பட்ட அடையாள அட்டைகள், வங்கிப் புத்தகங்கள், கடவுச் சீட்டுக்கள் போன்றவை நகர மத்தியில் அமைந்துள்ள போக்குவரத் துச் சபையின் காரியாலயத்தில் உள்ளன.

இவ்வாறு திருடப்பட்ட ஆவணங்களிலுள்ள பணத்தை மட்டும் அவர்கள் எடுத்துவிட்டு மற்ற ஆவணங்களை உரிய வாகனங்களிலேயே எறிந்து விட்டு தப்பித்து விடுகின்றனர்.

இவ்வாறு பணம், அடையாள அட்டை போன்றவற்றை பறிகொடுத்த நபர் ஒருவர்-அங்கு சென்று பணம் தவிர்ந்த அடையாள அட்டை மற்றும் சில ஆவணங்களைப் பெற்ற சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

போக்குவரத்துச்சபையினர் இவ்வாறு பெறப்பட்ட ஆவணங்களின் உரிமையாளர்களின் பெயர் பதிந்த புத்தகம் ஒன்றைப் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (1-122)

## நாளை

| | |
|---|---|
| மாசி 10 | 22.02.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.ப. 1.23 வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி . |
| | பி.இ. 2.57 வரை |
| சுபநேரம்: | 12.31-02.01 வரை |
| ராகுகாலம்: | 08.01-09.31 வரை |

# யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகளுடன் தொல்பொருள் காட்சியகம் அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், பெப்.21

நவீன வசதிகளுடன் கூடிய தொல்பொருள் அருங்காட்சியகம் ஒன்றை யாழ்.மாவட்டத்தில் அமைப்பதற்குரிய திட்டம் ஒன்று வடமாகாணத் தொல்பொருள் திணைக்களத்திடம் உள்ளதாக அதன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஜெயந்த விஜயவர்த்தன தெரிவித்தார்.

இதுகுறித்து உதயனுக்கு அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

வடமாகாணத்திலுள்ள புராதன வரலாற்றுப் பொக்கிஷங்கள் மற்றும் மரபுரிமைச் சொத்துக்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எமது திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக யாழ்.மாவட்டத்தில் நவீன வசதிகளுடன் கூடிய தொல்பொருள் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்கும் திட்டம் எம்மிடமுள்ளது. அதனை யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்னால் உள்ள காணியிலேயே அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த இடத்திலேயே யாழ்.மாவட்டச் செயலகம் முன்னர் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நவீன வசதிகளுடன் கூடிய தொல்பொருள் காட்சியகத்தை அமைப்பதற்குரிய நிதியை இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். தேவையான நிதி கிடைக்கும் பட்சத்தில் தொல்பொருள் காட்சியகம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும்.

அத்துடன், யாழ் நகரிலுள்ள ஒல்லாந்தர் காலத்துக் கோட்டை தற்போது துப்புரவு செய்யப்பட்டு - அதனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கோட்டையைப் பாதுகாப்பதற்கென நெதர்லாந்து அரசாங்கம் பல மில்லியன் ரூபாவினை தொல்லியல் திணைக்களத்துக்கு வழங்கியுள்ளது-என்றார். (04-14)

# முகாம்களில் இருந்த 31 குடும்பங்கள் பூநகரியில் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.21

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள இரு நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த 31 குடும்பங்களைச் சேர்ந்த 103 பேர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சொந்த இடமான பூநகரிக்கு மீள்குடியமர்வுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்திலிருந்து 28 குடும்பங்களைச் சேர்ந்த 95 பேரும் கைதடி பனை ஆராய்ச்சி நிலைய நலன்புரி நிலையத்திலிருந்து 3 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேரும் நேற்று முன்தினம் நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்.செயலகத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

(ஒ-1-207)

# காவலூர் நீதிமன்ற அமைவிடத்தை நீதி அமைச்சு அதிகாரிகள் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப்.21

ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பது தொடர்பாக நீதி அமைச்சு அதிகாரி கள் குழு நேற்றுமுன்தினம் நேரில் ஆராய்ந்தது.

நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.சேனரத்ன தலைமையில் வருகை தந்த குழுவில்பொறியியலாளர்கள், மண் பரிசோதனை செய்யும் நிபுணர்கள், நீதி அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

நீதிமன்றம் அமையவிருக்கும் பிரதேசத்தின் பௌதீகவள நிலைகளையும், மண் வளத்தையும் குழுவினர் ஆராய்ந்தனர்.

அதன்பின் நெடுந்தீவுக்குச் சென்ற குழுவினர் அங்கு ஆரம்ப நீதிவான் நீதிமன்றத்தை அமைப்பதற்காக இடங்களைப் பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து வன்னிக்குச் சென்ற குழுவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் நீதிமன்றச் செயற்பாடுகளை முன்னெடுப்பது குறித்து ஆராய்ந்தனர்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இயங்கவிருக்கும் கிளிநொச்சி நீதிமன்றக் கட்டடத்தையும் குழுவினர் பார்வையிட்டனர்.

(1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

நான்காம் ஆண்டு | இருபத்தைந்தாம் ஆண்டு



சின்னையா
சின்னத்தம்பி

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம் துயர்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும் அப்பா
உங்களுக்கு - ஈடாகுமா
வாடியே வருபவரை நாடியே
நலமாக்கிவிட்டு
அவனியில் நாம் சிறப்புடன் வாழ
அரவணைத்து வழிகாட்டினீர்கள்
ஆலமரம் சாய்ந்து போனதே ஆனாலும்
விழுதுகளின்
விழிகளில் ஈரம் இன்னமும்
காயவில்லை
மோட்சவழி நீங்கள் சென்று நலம்
பெறுவீர்கள் எந்நாளும்.



சின்னத்தம்பி
ரவிச்சந்திரன்

| | |
|---|---|
| 05.01.1932 மண்ணுலக | முத்தெனவே 01.03.1969 |
| 06.03.2006 விண்ணுலக | வித்தெனவே 21.03.1985 |

ஆண்டுகள் நான்கு அகன்றாலும் அகலாத நினைவோடு
உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம்.

(C/565029)

# "pastors'Conference போதகர் மாநாடு"
## "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" நெகே 2:18

காலம் :-23.02.2010 செவ்வாய்க்கிழமை

இடம் :-கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்,
இல.89, பிறவுண் வீதி, கொக்குவில்.

நேரம்:- காலை 8.30 முதல் பிற்பகல் 2மணிவரை,

பதிவுக் கட்டணம் ரூபா 100/= (மதிய போசனம் வழங்கப்படும்)

பேச்சாளர்கள்:-
Rev.Bill Rice. King's Church, Polle,UK.
Bro. Davis George King's Church, Swanage, UK.

ஆலயத்தில் நடைபெறவிருக்கும், "எழுந்து கட்டுவோம்" போதகர் மாநாட்டிற்கு தங்களையும், தங்கள் சபையின் ஊழியர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இம் மாநாட்டில் கலந்து கொள்கின்ற போதகர்களுக்கு இலவசமாக கிறிஸ்தவ நிகழ்ச்சியை பார்ப்பதற்கான செய்மதி இணைப்புப் பெறுவதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தங்களை அன்புடன் எதிர்பார்க்கும்:
கல்வாரி குடும்பம்.

(சி/565020)

## ஜெயந்தி தின நிகழ்வு

வலிவடக்கு, பெப்.21

கொக்குவில் தாவடி மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சமதியினால் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 175 வது ஜெயந்தி விழா நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் த.முருகானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குருதேவரின் அமுத மொழிகள் வாசிக்கப்படுவதுடன் வரவேற்புரையை திருமதி கலாறஜனி கபிலன் ஆற்றவுள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலை பொது வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி க.சிவனேசனும் சிறப்பு விருந்தினராக இணுவில் திருநெறி தமிழ் மறைக் கழகத் தலைவர் ச.முகுந்தனும் கலந்து கொள்ளவுள்ளார்.

சமிதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறுவதுடன் 'உண்மை எங்கே உண்டு', 'டெங்கு கொல்லுதே' ஆகிய நாடகங்களும் இடம்பெறவுள்ளன.

(201-86)

## வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய் சந்திக்கு அருகில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள 3½ பரப்பு சுற்று மதிலுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட அழகிய இல்லம் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களிலும் மற்றும் வார நாள்களில் பி.ப. 3 மணிக்குப் பின்னரும் பார்வையிடலாம். தொடர்பு: 077 6184630

ஓம் சக்தி
ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

யாழ்ப்பாணம் திருவண்ணை கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற தேர் நிலைய
மண்டபத்தில்

## சித்திரத்தேர் வடம்பிடித்திழுத்து விடும் நிகழ்வு



அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் மாசித் திங்கள் 9ஆம் நாள் (21-02-2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9.31 முதல் 11.01 மணிவரையில் வரும் சுபவேளையில், புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற தேர் நிலைய மண்டபத்தில் சித்திரத்தேர் வடம் பிடித்திழுத்து விடும் நிகழ்வு நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அம்பாள் அடியார்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு, ஸ்ரீ காளிஹ பரமேஸ்வரி அம்பாளின் அநுக்கிரகம் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

புதிய தேர் நிலைய மண்டப நிர்மாணத் திருப்பணிக்கு பெருநிதி உவந்தளித்தோருக்கும், சிமென்ட் முதலான பொருள்களாக வழங்கியோருக்கும், வர்ண வேலைகளுக்கு தீந்தையும், கூரைவேலைகளுக்கு பொருள் வழங்கியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத் துழைப்பு நல்கியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(95298) தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
வேலுப்பிள்ளை பரமசாமி

காலையில் வாஎன்று சொல்லி
காற்றாய் மறைந்ததேனோ?
மீளா நெடும் பயணம்
விரைந்து சென்றதேனோ?
நினைவுத் துயர் சுமந்து
நித்தமும் வாடுகின்றோம்



தோற்றம்:
07.10.1936

மறைவு:
22.01.2010

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை எமது
இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து
நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] அளவெட்டி,
தொ.பே: 0214902434

(95299)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் தலைமைத்துவத்துக்கு வழி விடுங்கள்!

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த சூட்டுடன் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ள இவ்வேளையில் தமிழர் முன்னால் மாபெரும் சவால் இருக்கின்றது. தமிழருக்கு இன்று உடனடித் தேவையாக இருப்பது அறிவொளி படைத்த, வேகம் கொண்ட புதியதோர் தலைமைத்துவமே. இதனைத் தோற்றுவித்தல் மக்களது தலையாய கடமையாகின்றது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நன்குணர்ந்து அவற்றைப் பிரதிபலிப்பது இத்தலைமையின் பணியாக அமையவேண்டும்.

முன்னெப்போதும் இல்லாத ஒரு சூழலில் தமிழினம் இப்போது சிக்கியுள்ளது. கடந்த காலத்தை விட எதிர்காலம் முற்றுமுழுதாக மாறுபட்டதாக அமையும் நிலைமை உள்ளது. 30 ஆண்டுகால போர் முடிந்த சூழலிலும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த நிலையிலும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் தேவைகளுக்கும் அவர்கள் முன்நிற்கும் சவால்களுக்கும் சிறந்த வழியை ஏற்படுத்தும் தகைமை உடைய தலைமை ஒன்று அவசியமானது.

எட்டுத் தசாப்தங்களாக அதாவது 1931 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை தமிழர்கள் தமது அரசியல் நிலைப்பாடுகளுக்கு ஏற்ப பல்வேறுபட்ட வழிமுறைகளை முன்னெடுத்துள்ளனர். சில சமயங்களில் அவை முட்டி மோதும் முரண்பாடுகள், வேறு வேளையில் சமாதான அணுகுமுறைகள், பகிஷ்கரிப்பு அரசியல், அரைமனதான ஒத்துழைப்பு, வன்முறையற்ற ஒத்துழையாமை மற்றும் வன்முறை சாரா நேரடி நடவடிக்கை போன்ற உத்திகள் கையாளப்பட்டன. எமது எதிர்பார்ப்புகள் பிழைபட்டும், நோக்கங்கள் நிறைவு பெறாதும் உள்ள நிலையில் எமக்குள்ள வழி ஒன்று மட்டுமே. யதார்த்த நிலையை முழுமையாக உணர்ந்து வெற்றிக்குச் சாதகமான வழிமுறைகளைக் கையாளுதலே இன்றைய சூழ்நிலைக்கு வாய்ப்பான ஒரேயொரு மார்க்கமாகும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு பல வகைப்பட்ட அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓரணியாகச் செயற்பட முன்வந்தன. இது ஒரு வியப்புக்குரிய கூட்டாகும். நம்பு வதற்கு அரிதொன்றான ஓர் அமைப்பாக அவை காட்சியளித்தன. அவை மேலும் வலுப்பெறும் சாத்தியக்கூறுகளை நாடு காணக்கூடும். இத்தகைய சூழலிலேயே தமிழரின் தலைமை தனது உத்திகளைச் சீர்தூக்கிப் பார்த்து தந்திரோபாயமாகச் செயற்பட வேண்டும். புதிய சவாலை எதிர்கொள்ளும் சிறப்பான தலைமை மற்றைய அரசியல் ஆக்கங் களோடு சரிநிகர் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

இதன் அடிப்படைக் கருத்தானது தமிழரை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் தலைவர்கள் விவேகத்திலும் ஆழ்ந்த அறிவிலும் மற்றவர்களை விஞ்சி இருக்க வேண்டும் என்பதாகும். தமிழரின் வேறு குழுக்களோடும் தென்னிலங்கைக் கட்சிகளோடும் ஒப்பிடும்போது இவர்கள் எல்லோர் நிலையிலும் மேலாக இருக்கின்றமையையே மக்கள் பெரிதும் விரும்புவர்.

இவர்களின் அறிவுத்திறன், இவர்களின் தன்னம்பிக்கையை மேலும் வலுவூட்டும். இவர்களின் தகைமைகள் எல்லோரின் கவனத்தையும் கவர்ந்து இழுத்து வாக்காளரின் செல்வாக்கைச் சம்பாதிக்கும். இந்தக் கோட்பாடுகளுக்கு அமைய திறமைசார் தலைவர்களைத் தெரிவு செய்தல் இன்றைய தலைமையின் மிக முக்கிய பொறுப்பாகும்.

இலங்கையின் சரித்திரத்தில் 2009 ஆம் ஆண்டு வைகாசி 18ஆம் திகதி ஒரு திருப்புமுனையான தினமாகும். சென்ற கால அரசியல் இன்றைய நிலைமைக்கோ வருங்காலப் போக்கிற்கோ முற்று முழுதாக ஒவ்வாததாகும். தமிழர் தம் விதியை நிர்ண யிக்கும் சக்தியும் அதிகாரமும் தமிழரிடம் இருக்க வேண்டும். இப் பொறுப்பைத் தாங்குவதற்கு மக்கள் பிரதிநிதிகள் முன்னிலைக்கு வருதல் அத்தியாவசியமாகும்.

சேர்ச்சில் , 1945 ஆம் ஆண்டு இங்கிலாந்து தேசத்துக்கு இரண்டாம் உலக யுத்த வெற்றியை ஈட்டிக் கொடுத்தார். ஆனால், அதன்பின் வந்த பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்தார். பிரித்தானிய மக்களின் செய்நன்றி மறத்தல் அல்ல இது. அவர்களுடைய அரசியல் முதிர்ச்சியே அது. போர்க்கால நடவடிக்கைகள் வேறு, ஆனால் போருக்குப் பின் செய்ய வேண்டிய புனர மைப்பு வேலைகள் வேறு என்ற அறிவுடை மையால் பிரித்தானிய வாக்காளர்கள் புதிய தோர் தலைமையைத் தெரிவு செய்தனர்.

**சு.சிவதாசன்**
**(ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர்)**

இது போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் இன்றைய தமிழ்ச் சமுதாயம் இருக்கின்றது. பல ஆண்டுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய மீள் அபிவிருத்தி வேலைகள் பாரிய அளவில் இருக்கின்றன. இன ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் உள்ள தொடர்புகளையும் ஈடுபாடுகளையும் கட்டி எழுப்புதலும் மிக முக்கியம். இப் பொறுப் புகளை மேற்கொள்ளும் ஆற்றல் படைத்த தலைமைகளைத் தெரிவு செய்ய மக்கள் முன்வருவர். முரண்பாடுகள் நிறைந்த ஒரு வேளையில் ஒரு ஆக்கத்தின் குரலை எதிரொலி செய்த நிலைமை மாறிவிட்டது. இன்றைய தேவைகள் முழுமை யாக மாறு பட்டவை. எனவே தமது பிரதிநிதி களிடம் இருந்து மக்கள் எதிர்பார்ப்பது அரசியலை சிரத்தையோடு ஆழமாகக் கற்பது, பொரு ளாதார விடயங்களை ஆராய்ந்து அறிவது, சமூக நிர்ப்பந்தங்களை உணர்வது மற்றும் இன ரீதியான கட்டாயங் களுக்கு ஏற்ற வழிகளை வகுப்பது போன்றவையாகும்.

இன்று இலங்கையில் உள்ள பொருளாதார, சமூக உட்கட்டமைப்போடு வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சமச்சீராக்குவதற்கு அடுத்த 10 வருட காலத்தில் 6 பில்லி யன் அதாவது 600 கோடி ரூபா முதலீடு செய்யப்பட வேண்டும். இத் தொகை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வெளி நிறுவனங்களில் இருந்து பெற முடிந்தால் துரித வேகத்தில் அடுத்த 10 வருடங்களில் வடக்கு - கிழக்கில் அபிவிருத்திகளை சிறப்பாக ஆற்றமுடியும். அவ்வாறு செய்தால் 2020இல் இலங்கை 2010 இற்குரிய நிலையையாவது அடை யலாம். இப்படிப்பட்ட அபரிமித வளர்ச் சிக்குத் தகுந்த நெறிமுறைகளைத் தமிழ ரின் தலைமைத்துவம் வழங்கவேண்டும்.

**உரைகல்**

'இதற்கேற்ற வல்லமையையும் செயல்திறனையும் வெளிப்படுத்துவதன் மூலம் அரசியல் தலைமை மக்களின் ஆதரவைக் கவரவேண்டியது அவசியம். தமிழ் வாக்காளர்களும், அரசும் விசுவாசம் வைக்கக்கூடிய அளவுக்கு சிறந்த தொரு தலைமை தேவைப்படுகின்றது. அப்படிப்பட்ட தலைமையே வாக்காளரின் ஆணையைப் பெறுவதற்குப் பாத்திரமாய் உள்ளது.

வருங்கால தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்களை மக்கள் ஏற்றுக்கொள்வதற்கும் நம்பிக்கை வைப்பதற்கும் அவர்களிடம் பல குணாதிசயங்கள் பொதிந்து கிடத்தல் வேண்டும். 'ஊழி பெயரினும் தாம் பெயரார்' என்ற சான்றாண்மை முதன்மையான குணம். சந்தேகத்துக்கே இடமில்லாத நிகரற்ற நேர்மை. என் நெஞ்சு அறிவது பொய்க்கமாட்டேன் என்று கூறக்கூடிய உண்மைக்கு உறைவிடம். எதையும் சுதந்திரத்தோடு ஆராயும் மனோ பக்குவம். தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த பேச்சுவன்மை. ஓரளவென்றாலும் சிங்கள அறிவு. அபிவிருத்தியின் சவால்களை நன்கு அறிந்திருத்தல். எல்லாவற்றுக்கும் மேலாக மக்களின் உணர்வுகளிலும் சிந்தனைகளிலும் அபிலாஷைகளிலும் உண்மையான நாட்டம். இத்தகைய குணங்கள் பலவற்றையும் அவர்கள் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறானவர்களே மக்களின் செல்வாக்கைப் பெறுவார்கள். இவை தான் இன்றைய தேவை. இன்றைய தமிழ் நாடாளுமன்ற அங்கத்தவர்கள் இத்தகைய இயல்புகளைப் பெற்றிருக்கின்றனரா? நன்னூல் தமிழ் இலக்கணத்துக்கு கூறுவது எமது அரசியலுக்கு சாலப் பொருந்தும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினாறே.' இலங்கைத் தமிழரும் அவர் தம் அரசியல் மாற்றங்களும் இவ்வாறே அமையவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் சில உண்மைகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளது. தமிழர் தமது உட்பகையை அழித்து, நாசகாரப் பாதையில் இருந்து தப் பியுள்ளனர். எவை அந்த அழிவுப் பாதை? கருத்துக்கெட்ட பகிஷ்கரிப்பு, பொறுப்பற்ற முறையில் தேர்தலுக்கு நிற்றல், வாக்கைப் பழுதாக்குதல் மற்றும் உருவற்ற இடதுசாரிப் பக்கத்துக்கு வாக்களித்தல் என்பன. போரினால் அளப்பரிய இழப்புகளுக்கு ஆளான தமிழர்கள் புனரமைப்பு வேலைகளில் பாரிய பங்கினைக் கொண்டுள்ளனர். இப் பொறுப்பை அயராது செய்து முடிக்க வேகமும் வி[illegible]மும் உள்ள தமிழர்கள் முன்வரவேண்டும்.

முழு உலகத்திலும் இலங்கையிலும் இளைஞர் உலகம் வெகுவாகப் பெருத்துள்ளது. சனத்தொகையில் [illegible] பகுதி அவர்களே. ஆனால் நாடாளுமன்றத்தில் அது பிரதிபலிக்கவில்லை. தமிழரின் நிலைமை மேலும் மோசமாக இருக்கின்றது. சந்ததிகளுக்கு இடையே உள்ள சமன்பாடு சரி செய்யப்பட்டு இளைய அறிவாளிகளின் பங்கு அதிகரிக்க வேண்டும். 'காமராஜ் திட்டத்தை செயற்படுத்தினால் ஒரு புதிய சந்ததி தலைமைத்துவத்துக்கு வருவது திடம்.

நேரு 1947ஆம் ஆண்டு உருவாக்கிய மந்திரிசபையில் காங்கிரஸில் இல்லாத அறிவாளிகளும் இடம்பெற்றனர். பல நாடுகளுக்கும் இது ஒரு முன்மாதிரியான எடுத்துக்காட்டு. 220 வருடங்களுக்கு முன்னர் பிரான்ஸ் புரட்சிக்குப் பின் புதிய அரச சாசனத்தை வகுத்த இலட்சியவாதிகள் புதிய அரசில் தாம் அங்கம் வகிப்பதில்லை என்று அர்ப்பணம் செய்தார்கள். இன்றைய சந்தர்ப்பத்திலே தமிழரின் பிரதிநிதிகளில் 75 வீதமானோர் மகிழ்ச்சியோடும் அர்ப்பணிப்போடும் தமது பதவிகளில் இருந்து விலகினால், புதிய இளைய சமுதாயம் தலைமைதாங்க, அவர்கள் வழிவகுப்பார்கள். ஒரு புதிய யுகத்தைத் தமிழர்கள் எதிர்நோக்க இச் செயல் வழிவகுக்கும். ★★★


# சோதனை மேல் சோதனை

கென்ரகீ பிறைட் சிக்கின் (KFC) என்பது இன்று உலகமெங்கும் பரவலாக அறியப்பட்டிருக்கும் ஒரு பல் தேசிய நிறுவனம். இது சிறுபிள்ளைகளை மிகவும் கவரும் மொறுமொறுப்பான ஒரு வித கோழி இறைச்சிப் பொரியலை விற்பனை செய்கின்றது. இன்று பெரும் வளர்ச்சி கண்டிருக்கும் இந்நிறுவனத்தின் ஆரம்பம் மிகவும் சுவாரசியமானது.

கென்ரகீ எனப் பெயர் கொண்ட ஓர் இராணுவ அதிகாரி தனது ஒய்வு காலத்தில் ஏதும் பயன்தரும் காரியங்களில் ஈடுபட விரும்பினார். அப்போது அவர் இராணுவத்தில் தான் இருந்தபோது கற்றுக் கொண்ட ஒரு சுவையான இறைச்சிப் பொரியல் முறையைச் சந்தையில் அறிமுகப்படுத்தினால் என்ன என்று சிந்தித் தார். குறிப்பிட்ட பொரியலைத் தயாரித்துக் கொண்டு அவர் சந்தைப்படுத்துநர்களை நாடிச் செல்லத் தொடங்கினார். ஆயினும் அவர் எதிர்பார்த்த வரவேற்பு அவர்களிடம் கிடைக்கவில்லை. இவரோ தளரா மனதினராய் வெவ்வேறு சந்தையாளர்களைத் தேடிச் சென்றார். அவர் தேடிச்சென்ற நூற்றி ஆறாவது சந்தையாளர்தான் அவரது எண்ணத்தைப் பரீட்சித்துப் பார்க்க சம்மதம் தெரிவித்தார். விளைவு இதோ இன்று இது ஒரு பிரபல லாபமீட்டும் சர்வதேச நிறுவனம்.

தனது முயற்சியில் அவர் காட்டிய தளரா உறுதி இன்று முன்னுதாரணமாகப் பேசப்படுகின்றது. ஆனால் அந்த நூற்றி ஆறு தடவைகளுக்குள் எத்தனை முறை அவருக்கு தனது முயற்சியைக் கைவிட்டு விடும் சோதனை வந்திருக்கும்? எத்தனைபேர் ஏன் வீணாய் அலைகிறாய்? ஓய்வு காலத்தை வீட்டில் நிம்மதியாக செலவிட்டால் என்ன? என்று ஆலோசனை கூறி அவரது முயற்சியை முடக்க முயன்றிருப்பர்? இருந்தும் அவர் தனக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய சோதனைகளை வெற்றி கொண்டு தனது இலக்கை அடைந்தார்.

எங்களுடைய வாழ்விலும் இத்தகைய சோதனைகள் ஓராயிரம் ஏற்படும். நல்ல காரியம் ஒன்றை செய்ய முனையும் போதுதான் தடைகள் வரிசையாக வந்து நிற்கும். நமக்கு மிக நெருக்கமானவர்களே பலவற்றைக் கூறி எம்மைத் தடுக்கப்பார்ப்பார்கள். உனது நன்மைக்குத்தான் சொல்கின்றேன், உனக்கு ஏன் வீண் வேலை என்று விவாதிப்பர். இவ்வாறெல்லாம் கூறி எம்மை பின் வாங்க வைத்து விட்டால் அவர்களுக்குப் பெரிய நிம்மதி. ஆனால் நாமோ சோதனையில் வீழ்ச்சியடைந்தவர்களாக நிம்மதி அற்றிருப்போம்.




இயேசுவின் வாழ்வில் ஆரம்பத்திலேயே அவரது வாழ்வு முழுவதும் இடம்பெற்ற சோதனைகள் அடையாளமாகத் தரப்படுகின்றன. இறையாட்சி என்னும் பிறரன்பு வாழ்வு முறையை அவர் முன்னெடுக்க முயன்றபோது தீயவன் பல சோதனைகளை அவருக்கு முன்வைக்கின்றான். பசியிருந்த அவரது பலவீனத்தைப் பயன்படுத்தி அவரது ஆற்றல்களை சுயநலம் நோக்கி திருப்பி விட முனைகின்றான். அதிகார ஆசையையும், பெயரும், புகழும் பெறும் ஆசையையும் அவரில் தூண்டி விட்டு இலட்சியப் பயணத்திலிருந்து அவரை விலக்க முனைகின்றான். ஆனால் யேசுவோ தளரா மனத்துடன் அச்சோதனைகளை முறியடிக்கின்றார்.

இயேசுவின் மனநிலையோடு நாமும் இத்தவக்காலத்திலும் எமது வாழ்விலும் வரக்கூடிய சோதனைகளை எதிர்கொள்வோம். தனிப்பட்ட வாழ்விலும் பொதுவாழ்விலும் தளர்ச்சிக்கும் பின்னடைவுக்குமென சோதனைகள் வரும் போது உறுதியோடு அவற்றை எதிர்கொள்வோம். சோதனைகளை வென்று இலட்சியத்தை நோக்கி நடைபோடுபவர்களாக வாழ முயல்வோம்.

அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்.

# யாழ்ப்பாணத்திலும் ஒரு தேர்தலாம்

ஒப்பரும் இத்தேர்தல் தன்னில்
ஒன்பது கட்சி வேறாய்
தப்பாது மோத என்றே
தயாராகி வருகின்றார்கள்

அப்பனே சிவனே நின்தன்
ஆலயப் பீடம் ஒன்றில்
செப்பரும் நவக்கிரகங்கள் கூடி
சேர்ந்தொன்றாய் இருந்த.போதும்

எப்படிப் பூசித்த போதும்
இவை ஒன்றை ஒன்று
தப்பாது பார்த்திடாது
தனித்தனி எண்திசையை நோக்கும்

ஒப்பரும் திருநீராட்ட
ஓயாது மந்திரத்தை ஓத
தப்பிலா மந்திரத்தைக் கேட்டும்
தனிவழி செல்லுமன்றோ

இப்படி நிலமை ஒன்று
இத்தேர்தலில் வந்து சேரில்
எப்படி இவர்கள் ஒன்றாய்
எம் இனத்தினைக் காத்து நிற்பர்

சூரியன் புதனை நோக்கான்
சுக்கிரன் குருவை நோக்கான்
செவ்வாயுமோ சனியை நோக்கான்
சந்திரன் கேதுவை நோக்கான்

இத்தனை கிரகம் ஒன்றாய்
இருப்பதோ ஒரு கூட்டிலாகும்
அத்தனை மந்திரத்தைக் கேட்டும்
அவை மனம் மாறக் காணோம்.

அப்பனே சிவனே ஈசா!
ஆலாவாய் அமர்ந்தவனே
இத்தனை கிரகமும் ஒன்று சேரின்
எனக்கென்ன வேலையென்றோ
நித்தமும் நடனமாடி
நீள்புவி ஆளுகின்றாய்

முத்தனே! முதல்வா! போற்றி
முழுதுமாய் உலகை ஆளும்
அத்தனே! சிவனே! உந்தன்
அடியினைப் பணிந்து கேட்பேன்
உத்தமா! எம் இனத்தைக் காத்து
உதவுதல் உன் கடனே அன்றோ

ஒன்பது கட்சியும் ஒன்றாய்
ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்து
ஒன்பதும் ஒரு கொடிகீழ்
ஒரு முகமாக நின்றால்
எண்ணரும் உலகத்தோரும்
எம்மை எள்ளி நகையாடமாட்டார்.

-விகடகவி-

([illegible] அன்பர் ஒருவருக்கு சிவயோக சுவாமிகள் [illegible] சொன்ன "யாழ்ப்பாணத்தான் நாசமாய்ப் போவான்" என்ற திருவாக்கே (திருவாசகமே) இக்கவிதையின் கருவூலம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய
முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள
**உயர்திரு.திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்**
அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சகல
சௌபாக்கியங்களுடனும் தமது குடும்பத்தினருடன் நீடூழி வாழ
இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதான வீதி, பருத்தித்துறை (92159) ராஜா சுவைச்சோலை பருத்தித்துறை.


# சட்டவிரோத மின் இணைப்பு; இருவருக்கு அபராதம்

சங்கானை,பெப்.21

பொன்னாலை, சித்தங்கேணி ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக மின் இணைப்புப் பெற்ற இருவர் கைது செய்யப்பட்டனர்.

மின்சாரசபை அதிகாரிகள் வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப நபர்கள் இருவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இருவருக்கும் முறையே 27ஆயிரத்து 376 ரூபாவும் 27ஆயிரத்து 37 ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (1-29)


World's No 1

**Intel2.7GHZ Dual Core Computer System**

| | |
|---|---|
| Processor | Intel 2.7GHZ Dual Core |
| Mother Board | LGA Main board |
| Hard Drive | 250GB SATA 7200rpm |
| Memory | 1 GB DDR2 RAM |
| Graphics | On Board |
| Monitor | 16' LG LCD |
| Casing | ATX Tower 500w |
| Optical Disk Drive | HP DVD Writer 24X SATA |
| Network Controller | On Board |
| Multimedia Key Board & optical mouse | |
| Speaker | 450W |
| Ups | PROLINK 650VA |

3 Years Warranty 48500/=

**Intel2.93GHZ Core 2 Duo Computer System**

| | |
|---|---|
| Processor | Intel 2.93 GHZ Core 2 Duo |
| Mother Board | LGA Main board |
| Hard Drive | 250GB SATA 7200rpm |
| Memory | 1 GB DDR2 RAM |
| Graphics | on Board |
| Monitor | 16' LG LCD |
| Casing | ATX Tower 500w |
| Optical Disk Drive | DVD Writer |
| Network controller | On Board |
| Multimedia Key board & Optical Mouse | |
| Speaker | 450W |
| Ups | PROLINK 650VA |

3 Years Warranty 55500/=

*Optional*

| | |
|---|---|
| 16"LCD Monitor | 13,500/- |
| 19"LCD Monitor | 16,000/- |
| 22"LCD Monitor | 22,900/- |

3 Years Warranty

ADTECH Webcam 5.0mp 1800/-

ADTECH Webcam ultra H.D 5.5 - 2750/-

**Abans** நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோகசேவையைப் பெற்றிட

**Midea Electro Mart**

Authorized Dealer for **Abans** Ltd.

No: 1-I, 1-H, Stanley Road, Jaffna, Sri Lanka.

e-mail: midea21@gmail.com

Tel: 021-2224566 Fax: 021-2224566



# இதயபூர்வமான வாழ்த்துக்கள்

உயர்திரு.

## திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்

(சிரேஷ்ட முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திருநகரில் பதினாறு ஆண்டுகளாக ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளராக தனது பதவியை அலங்கரித்து வடபிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெறுகின்ற திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம் அவர்கள் தனது வாழ்நாளில் கூடிய நேரத்தை வங்கியிலேயே செலவழித்து மக்களுக்காக மகத்தான சேவையாற்றியுள்ளார்.


சேவைக்கும் அவரது தகுதிக்கும் கிடைத்த பரிசு பதவிஉயர்வு. இன்னும் பல பதவி உயர்வுகள் பெற்று மேலும் மக்களுக்கு சேவையாற்ற வாழ்த்துகின்றோம். எல்லா நலன்களையும் இறைவன் அவருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் வழங்கப் பிரார்த்திக்கின்றோம்.

**தங்கள் பதவி உயர்வினை வாழ்த்துபவர்கள்:**

**அம்பிகை களஞ்சியம்**
304, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222511

**ராம் சுப்பர் சிற்றி**
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 1252

**சன்றைஸ்**
306, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 321 5206




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறை வளர்ச்சிக்கு கவிதை, நாடகம், மெல்லிசைப் பாடல், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்ற துறைகளில் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ள - வழங்கிவரும் கலாநிதி துரை மனோகரன் ஈழத்துத் தமிழ் நாவல்துறை மற்றும் சிறுகதைத் துறையிலும் முத்திரை பதித்தவர்.

யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைராஜா மனோகரன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணிப் பட்டத்தையும் யாழ்.பல்கலைக்கழகத்தில் தனது முது கலைமாணிப்பட்டத்தையும் பெற்றவர்.

தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகின்றார்.

தனது மாணவப் பருவத்திலேயே 'பாவையின் பரிசு' என்ற நாவலை எழுதி வெளியிட்டவர். ஈழத்தின் பிரபல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள், கட்டுரைகள் வெளியாகியுள்ளன. வெளியாகி வருகின்றன.

இவர் எழுதிய சிறுகதைகளில் குறிப்பிட்டுக்கூறத்தக்கதும், 'மல்லிகைச் சிறுகதைகள்' தொகுப்பில் இடம்பெற்றுள்ளதுமான 'சிறை' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

# சிறை

## சிறுகதை

'வீட்டுக்காரர்.....!'

வீட்டு நாய் 'ளொள்... ளொள்' என்றது.

'வீட்டுக்காரர்.......!'

மீண்டும் வீட்டு நாய் தான் 'ளொள்...ளொள்...' என்று குரல் காட்டியதே தவிர வீட்டுக்காரரைக் காணோம்.

வீட்டு நாயின் முன்னைய சத்தத் துடன், வீட்டினுள்ளேயிருந்து 'ஆரது?' என்ற குரல் கேட்டது. அந்தக் குரலுக்குரிய உருவம் ஒரு பெண்மணியாகத்தான் இருக்க வேண்டும். கொஞ்சம் மென்மையான குரல்.

'அது..... நாங்கள். அ...... எழுத்தாளர் ஐயாவைத் தேடி வந்திருக்கிறம்.' வந்த இருவரில் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

'அ... நில்லுங்கோ. அவர் வந்திடுவார்.'

அவர்கள் வாசலில் நிற்கிறார்கள்.

'இஞ்சேருங்கோ!' வீட்டினுள்ளே எழுத்தாளன் பேரின்பநாதனது மனைவியின் குரல்.

'என்னது?' என்று எழுத் தாளன் பேரின்பநாதன் மனைவியை விசாரித்துக் கொண்டு வந்தான்.

'ஆரோ ரண்டு பேர் உங்களைத் தேடிக் கொண்டு வந்து நிக்குதுகள். போய் என்னண்டு கேளுங்கோ.'

பேரின்பநாதன் தான் கையில் வைத்திருந்த கைக் குழந்தையையும் கொண்டு வெளியே போக ஆயத்த மானான். 'குழந்தையை இஞ்சை தந்திட்டுப் போங்கோ, இதென்ன, மேலிலை ஒரு பெனியனும் போடாமல்?' மனைவி கதைத்துக் கொண்டே குழந்தையைக் கையில் வாங்கினாள்.

பேரின்பநாதன் வேகமாக அறைக்குச் சென்று ஒரு பெனியனை எடுத்து அணிந்து கொண்டே வெளியே சென்று, வந்தவர்களை வரவேற்றான்.

'வாருங்கோ.......! வாருங்கோ..... உள்ளுக்கு வாருங்கோ.... இப்படி இந்தக் கதிரையளிலை இருங்கோ.'

வரவேற்புபசாரம் முடிந்ததும், தானும் கதிரையை இழுத்து வந்து அமர்ந்து கொண்டான்.

வந்தவர்கள் எங்கெல்லாமோ போய்ச் சுற்றி வளைத்து பேரின்பநாதனின் மாமன், மச்சான், அண்ணன், தம்பி பற்றியெல்லாம் கதைகொடுத்து, இறுதியாக விஷயத்திற்கு வந்தபோது-

பேரின்பநாதனின் இரண்டாவது மகள் ராணி ஒரு சிறு தட்டில் தேநீர் கொண்டுவந்து இருவரிடமும் நீட்டினாள். 'தங்கச்சி, எத்தினையாம் வகுப்புப் படிக்கிறாள்?' என்று கேட்டுக் கொண்டே இருவரும் தேநீர்க் குவளைகளை எடுக்க, 'மூண்டாம் வகுப்பு' என்று சொல்லிவிட்டு ஏதோ பருவமடைந்த பெரிய பெண் வெட்கப்படுவதைப் போல, தட்டுடன் வீட்டினுள் ஓடினாள்.

தேநீரைச் சுவைத்து முடிந்ததும் அவர்கள் 'விஷய'த்திற்கு வந்தார்கள்.

'நாங்கள் பாருங்கோ, வாற மாசம் பதினொராந் திகதி-அண்டைக்குப் பிறிப்போயா நாள்? ஒரு கலை விழா ஒண்டு பள்ளிக்கூடத்தில் நடத்த இருக்கிறம்-'

'அ.... மிச்சம் நல்லது'

எழுத்தாளன் அனுமதித்தான்.

'அது மிச்சம் கலாதியாய்த் தான் நடக்கும். யுனிவர்சிற்றியிலை இருந்துதான் ஒரு லெக்சரரைத் தலைமை வகிக்கக் கூப்பிடுறம். அதிலை......., நீங்களும் எழுத்தாளர் எண்ட முறையிலை ரண்டொரு சொல்லுப் பேசினால் நல்லது'

வந்தவர்கள் தம் விஷயத்திற்கு முற்றுப் புள்ளி கொடுத்துவிட்டு, அவனின் உதடுகளை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

'பேசுறத்துக்கு......'

பேரின்பநாதன் திடீரென்று முகத்தைச் சுழித்துக் கொண்டு கதிரையின் பின்னற் பகுதியை நோட்டமிட்டான். வந்தவர்கள் 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டிருந்தனர்.

'உவங்கள் உந்த டீ.டீ.ரி.யை அடிக்கத் துவங்கின பிறகு வீடெல்லாம் ஒரே மூட்டை. கதிரை கட்டில் ஒண்டும் உதவாது.'

இப்போது தான் வந்தவர்களுக்கும் பேரின்பநாதனின் முகச் சுழியலுக்கான காரணம் விளங்கியது. பேரின்பநாதன் மீண்டும் தொடர்ந்தான்.

'அ.......பேசுறத்துக்கு ஒண்டு மில்லை, பாருங்கோ, ஆனா, இப்ப உதுகள் ஒண்டுக்கும் எனக்கு நேரமில்லை. கலியாணம் முடிக்கக்கு முந்தியெண்டா, நீங்கள் கூப்பிடக்கு முதல், நான் வந்திடுவன். இப்ப பாருங்கோ, எனக்கு எழுதுறதுக்கே நேரம் கிடைக்கிறேலை.'

'எண்டாலும், தெண்டிச்சு.... நீங்கள் ஒருக்கால் வந்து அதிலை கலந்து கொண்டியள் எண்டா, உங்களுக்கு, எங்களுக்கு, ஊருக்குகெல்லாம் நல்ல மதிப்பு.

'உண்மைதான் பாருங்கோ, ஆனா என்ன செய்யிறது? வரலாமெண்டால் நான் கட்டாயம் வாறதெண்டு சொல்லியிருப்பன் தானே. எனக்குப் பேச விருப்பம் இருந்தாலும்-'

'அப்பா, நாளைக்கு வாத்தியார் அடிக்கப் போறார். இந்தக் கணக்குகளைச் சொல்லித் தாங்கோ' என்று சொல்லிக் கொண்டே ஐந்தாம் வகுப்புப் படிக்கும் மூத்த 'பெடியன்' புத்தகம், கொப்பியுடன் வந்தான்.

'ஏன், கொம்மா இல்லையே? கொம்மாவைப் போய்க் கேட்டுச் செய்யன்' என்று பேரின்பநாதன் அதட்டினான்.

'அம்மா குசினிக்குள் உழுந்தரைச்சுக் கொண்டிருக்கிறா'.

'அதுக்க.....? ஆக்கள் கதைச்சுக்கொண்டிருக்கேக்கையே உதெல்லாம் வந்து கேட்கிறது?' என்று அடிக்க ஓங்கிவிட்டுக் கையை எடுத்தான், பேரின்பநாதன். பையன் பயத்தில் வந்தவாறே திரும்பிச் சென்று விட்டான்.

பிறகும் பிறகும் வந்தவர்கள் எல்லோரும் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப் பார்த்தார்கள். ஆனால் பேரின்பநாதன் மறுத்து விட்டான்.

'தயவு செய்து குறை நினைக்காதையுங்கோ. உண்மையில் எனக்கு நேரமில்லை. அல்லாட்டில், ஒரு விழாவில் வந்து பேசுறது பெரிய ஒரு வேலையே.'

வந்தவர்கள் இதற்கு மேலும் கெஞ்சுறதிலை பயனில்லை என்றுணர்ந்து திரும்பிச் சென்றார்கள். நாய் பழையபடி தனது 'குண'த்தைக் காட்டியது. 'அது கடிக்காது பாருங்கோ. சும்மா குலைக்கிறது தான்.' என்று விடை கொடுத்து அவர்களை அனுப்பி விட்டு வீட்டினுள் நுழைந்தான் பேரின்பநாதன்.

உள்ளே நுழையும் போது தொட்டிலிற் கிடந்த குழந்தை சிணுங்கியது. 'டேய் சந்திரன், அப்பாவிட்டைச் சொல்லு, குழந்தையைக் கொஞ்ச நேரம் தூக்கி வைச்சிருக்கச் சொல்லி.' என்ற மனைவியின் குரல் அவன் காதிற்பட்டது. உடனே சென்று அழுத குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு உழுந்தரைக்கும் மனைவிக்குச் சற்றுச் சமீபத்தில் போய் நின்றபடி 'ரரரரர.......ச்சச்ச்ச......அ........ அழாதை' தாலாட்டிக் கொண்டிருந்தான்.

'இஞ்சேருங்கோ, ஆர் வந்தது?' மனைவி விமலா பாத்திரத்திலிருந்த உழுந்தை ஆட்டுக்கல்லுக்குள் எடுத்துப் போட்டவாறே கேட்டாள்.

'அது....... ஏதோ கலைவிழாவொண்டு வாற மாசம் வைக்கப் போயினமாம். அதிலை என்னையும் பேசச் சொல்லிக் கேக்க வந்திருக்கினம்.'

விமலா முன்னர் போட்ட உழுந்தை அரைத்தவாறே 'ஓ ஓ! அவைக்கென்ன! கலைவிழாவும் கண்டறியாததும் வைப்பினம்! இங்க ஊர்ச்சனம் படுகிறபாடு கடவுளுக்குத் தான் தெரியும்' என்றாள்.

'இல்லை விமலா. கலைவிழா அது இது எண்டு வைக்கவும் தான் வேணும். அது எவ்வளவு நல்லது சொல்லும் பாப்பம்.' குழந்தையைக் கைகளில் தாலாட்டியவாறே எழுத்தாளன் கூறினான்.

'ஓ! இவர் ஓமெண்டு சொல்லிப்போட்டாராக்கும், அதுதான் இப்படிக் கதைக்கிறார்' அவளது வாய் வேலைசெய்வதைப் போன்றே, கைகளும் வேகமாக வேலை செய்துகொண்டிருந்தன.

குழந்தை மீண்டும் அழ ஆரம்பித்தது.

'ஓ......ரரரரரர........ஓ.......ரரரர.......அப்பு அழதையணை' என்று குழந்தையைச் சமாதானப் படுத்தியவாறே 'இஞ்சை பாக்கத் தெரியெல்லையே? எனக்கெங்கை நேரம்? நான் வர வசதியில்லையெண்டு சொல்லிப் போட்டன்' என்றான் பேரின்பநாதன்.

குழந்தையின் அழுகுரல் இப்போ இல்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 138

## அர்த்தங்கள் பல உள்ளடக்கம்

வார்த்தைகள் மடக்கி
அடுக்கப்பட்டிருக்கலாம்
வடிவாகப் பார்த்தால்
வரைந்த ஓவியம்
அதற்குள் தெரியும்! அர்த்தங்கள் பல
புறக்கண்களுக்குத் தெரியாத
அவைதாம்
அகக்கண்களுக்கு மட்டுமே புரியும்!

வியர்வையால் வரைந்தவை
யாக இருக்கலாம்!
கண்ணீரால் வரைந்தவை
யாக இருக்கலாம்!
குருதியால் வரைந்தவை
யாக இருக்கலாம்!
காதல் உணர்வுகளால்
கூட வரைந்தவையாகலாம்!

வர்ணம் தீட்டிக்கொள்ளுங்கள் —
புறக்கண்களுக்கு
தெரியும்படிக்கு!
கலைஞர்களின் கருவூலங்களை
அலங்கரிப்பதற்கு!

—இ.ஜெயபாலன், சங்கானை.

# நீதிவழிநின்று நேர்மை தவறாத ஆட்சியாளனே தலைவன் என்று சொல்லத் தகுதியுடையவன்

## செந்தமிழ்ப் புலவரின் தீர்க்க தரிசனம்

### இலக்கியக் காட்சி 29

பல்லின மக்கள் செறிந்து, இணைந்து வாழும் ஒரு நாட்டை, ஆட்சியாளன் எவ்வாறு பரிபாலிக்கவேண்டும் என்பதைப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கின்றார் காளமேகப் புலவர். இது எங்கள் நாட்டுக்கும் சாலப் பொருந்தும். இன்று ஈழத்தமிழர்கள் உலகின் ஐந்து கண்டங்களிலும் சென்று, செறிந்து வாழ்கின்றார்கள். ஆனால் போக்குவரத்துச் சாதனங்களும் பல்வேறு தொடர்பு சாதனங்களும் மிக அருகியிருந்த பண்டைய காலத்தில் ஒரு நாட்டின் ஒரு இன மக்கள், இன்னொரு இன மக்கள் வாழும் பிறிதொரு நாட்டிலே சென்று குடியேறிவாழும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்பட்டன. அதனால் பல்லின மக்கள் வாழும் நாட்டை எவ்வாறு பரிபாலிக்க வேண்டும் என்ற சிந்தனை எழவில்லை; தேவைப்படவுமில்லை என்று கூறலாம். இருப்பினும் உலகம் மாற்றமடையும். பின்னர் அத்தகைய ஆட்சிமுறை பற்றிய அறிவுரை தேவைப் படும் என்ற தீர்க்க தரிசனத்தோடு சொல்லப்பட்டதாக அமைந்துள்ளது இந்தப் பாடல். தனிப் பாடல்களும் ஒன்றாக விளங்கும் இப்பாடல் அத்தகைய நல்ல தத்துவத் தைச் சொல்கிறது. ககர வர்க்க எழுத்துக்களாலான இந்தப் பாடல், மேலோட்டமாகப் பார்க்கும்போது, பொருளற்ற எழுத்துக்களின் கூட்டம் போலத் தோன்றும். உள்ளார்ந்து நோக்கும் போதுதான் இதன் பொருள் நன்கு புலப்படும்.

மொழி, பண்பாடு, கலை, கலாசாரம், சமயம், பழக்க வழக்கங்கள் என்பவற்றால் வேறுபட்டுள்ள பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டிலே ஆட்சியாளன் ஒருசாராரை உயர்த்தியும் மறுசாராரைத் தாழ்த்தியும் ஆளக்கூடாது. ஒரு நாட்டிலே காக்கையைப் போன்றவர்களும் இருப்பார்கள். கூகையைப் போன்றவர்களும் இருப்பார்கள். இரண்டும் ஒன்றுக்கொன்று பகையான பறவைகள். காக்கைக்காக கூகை. காக்கைக்கு ஆகா கூகை. காக்கையைப் போன்றவர்களுக்குக் கூகையைப் போன்றவர்களைப் பிடிக்காது. அதுபோலவே கூகைக் காகா காக்கை. கூகைக்கு ஆகா காக்கை. கூகையைப் போன்றவர்களுக்குக் காக்கையைப் போன்றவர்களைப் பிடிக்காது. எனவே, கோக்கு - அரசனுக்கு, ஆட்சியாளனுக்கு, கூ காக்கை - பூமியைப் பரிபாலித்தல், கொக்கொக்க, கொக்கு ஒக்க - "கொக்கைப் போலப் பக்கஞ் சாராது நடுநிலைமை வகித்தலாகும். இது அந்தப் பாடலின் பொருள். அந்தப் பாடலை முழுமையாகப் பார்க்கலாம்.

காக்கைக் காகா கூகை
கூகைக் காகா காக்கை
கோக்குக் கூ காக்கை
கொக்கொக்க.

இலங்கையிலே பெரும்பாலாக, வெவ்வேறு இன, மத, மொழி, கலை, கலாசார, பண்பாடுகளைக் கொண்ட சிங்களவர், தமிழர், முஸ்லீம் ஆகிய இனத்தவர்கள் வாழ்கின்றார்கள். வரிசையாக வந்த ஆட்சியாளர்கள், ஒரு சாராரை உயர்த்தியும் மறுசாராரைத் தாழ்த்தியும் துவேஷ உணர்வை வளர்த்து வந்ததாலேயே இன்று பாரிய பல அனர்த்தங்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையாகும். இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்டதெனக் கூறப்படும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில்கூட இந்த ஏற்ற, இறக்க எண்ணம் இழையோடி இருப்பதைக் காணலாம். மொழிபற்றிச் சொல்லப்பட்டதை எடுத்துக்கொண்டால் அதிலே "சிங்களம் இலங்கையின் அரசகரும மொழியாகும்; தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளும் அரச கரும மொழிகளாக அமையலாம்" என உறுதியற்ற கூற்றாக வெளிப்படுத்தித் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதைக் காணலாம். [Sinhala is the State Language of Sri Lanka. Tamil and English may also be the State Languages....] ஒரே வாக்கியமாக, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் இலங்கையின் அரசகரும மொழிகளாகும் என்று நடுவு நிலைமை வகிக்கப்படவில்லை. அந்த ஒப்பந்தத்தில் காணப்படும் பல குறைபாடுகளுள் இதுவும் ஒன்றாகும். இங்கே 'கோக்குக் கூ காக்கை கொக்கொக்க' என்ற கொள்கை பேணப்பட்டிருந்தால் இந்நாடே சொர்க்கபுரியாகியிருக்கும் என்பது கண்கூடு.

நளமகாராசன் நடுவு நிலைமை தவறாது அறநெறியிலே தனது நாட்டை எவ்வாறு பாதுகாத்து வந்தான் என்பதைப் புகழேந்திப் புலவர் சொல்லியிருக்கும் விதம் அற்புதமானது. "மாதர் அருகு இருந்து ஊட்டி வளர்க்கும் மென்மையான பசுங்கிளி இருக்கின்றது. அதன் பகைப்பிராணியாகிய வலிய பருந்து - ஆடல் பருந்தும் இருக்கின்றது. இவை இரண்டும் ஒன்றையொன்று தீண்டாது ஒற்றுமையாக ஒரே கூட்டில் வாழக்கூடியதாக, குளிர்ச்சி பொருந்திய சந்திரன் போன்ற வெண்கொற்றக் குடையின்கீழ், தேன் பாய்கின்ற மலர்களையுடைய மாலையணிந்த நளமகாராசன் ஆட்சி புரிந்தான்" என்பது அவர் கூற்று.

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை அறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான் - மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடல் பருந்தும்
ஒரு கூட்டில் வாழ உலகு.

நீதி வழிநின்று நேர்மை தவறாமல் தன் குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களின் தலைவன் என்று மதித்துப் போற்றப்படுவான் என்பது தெய்வப் புலவரின் திருவாய் மொழியாகும்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்.

அத்தகைய ஒரு ஆட்சியாளன், இறைவன் என்று கூட எல்லா மக்களாலும் வைத்துப் போற்றப்படுவான் என்ற கருத்தும் தொனிக்க 'இறை என்று வைக்கப்படும்' என்று மிக அழகாகக் குறிப்பிட்டார் அந்தப் பொதுமறைப் புலவர். ★★★

- தலங்களப்பு வ.சின்னப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி தர்மரட்ணம்



**(ஓய்வுபெற்ற உதவி தபால் அதிபர்)**

திருநெல்வேலி கிழக்கு, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மரட்ணம் நேற்று (20.02.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற டக்கிரி பண்டா மற்றும் நல்லநாயகி தம்பதியரின் மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் இளந்திரையன் (பொறியியலாளர் அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி இளந்திரையனின் அன்பு மாமனாரும் யோகரட்ணம், நடராமநாதன், காலஞ்சென்ற நாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*94, பருத்தித்துறை வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* T.P:021 3218339 (95293)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி மகேந்திரலிங்கம் மகேந்திரராணி



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரலிங்கம் மகேந்திரராணி 19.02.2010 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேந்திரலிங்கத்தின் அன்பு மனைவியும் நிலக்ஷன், தவரூபன் ஆகியோரின் அன்புத்தாயும் அரியநாயகம் (வவுனியா),யோகராணி(கனடா), புஸ்பராணி, தருமராசா, சிவராசா (ஜேர்மனி), இந்திராணி, தேவராசா, கமலராசா (இத்தாலி), காலஞ்சென்ற தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரி பொன்னம்பலம், தயாநந்தன் மனோன்மணி, மகேஸ்வரி அம்பிகைபாகன் ஜெகதீஸ்வரி, விஜயலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தட்டுமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (95297)

தகவல்:
சகோதரர்கள்.


### பயிற்சி நெறி

ஆசிய பிராந்திய சமூக ஒன்றியத்தினால் (Asian Regional Community Consortium) நடாத்தப்படும் பின்வரும் தொலைக் கல்வி பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**Diploma in Project Management**
**Diploma in Community Mobilization**
**Diploma in Financial Management**

விண்ணப்பிக்க விரும்புவோர் சுயமுகவரி எழுதப்பட்டு 15 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட "9x4" அளவுடைய கடிதவுறை சகிதம் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிப்பதன் மூலம் விண்ணப்பப்படிவத்தையும் ஏனைய விபரங்களையும் பெற்றுக் கொள்ளமுடியும். விண்ணப்பிக்கும் பயிற்சி நெறியின் பெயரைத் தவறாது குறிப்பிடவும்.

**Programme Coordinator,**
**ARCC,**
**No. 214, Nawalapitiya Road,**
**Ulapana. (Kandy)**

### வீடு, காணி விற்பனைக்கு

கரவெட்டி, சரஸ்வதி வித்தியாலய வீதியில் வீட்டுடன் சேர்ந்த 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: சி.புனிதவதி
077 3013648 (சி/565218)

### தவறிவிட்டது

பொ.கணேசலிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. (373221872V) மற்றும் எனக்குரிய பென்சன் காட் என்பன சுன்னாகம் இலங்கை வங்கிக்கும் உடுவிலுக்கும் இடையே தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் எனது விலாசத்தில் தந்துதவுமாறு தயவாய் கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் தரப்படும்.லவ்லேன், உடுவில், சுன்னாகம். (95300)

### வீடு, காணி விற்பனைக்கு

இல.44,அயித்தாம்புலம் வீதி, கரம்பனில் 7 பரப்பில் வீடும் காணியும் உடனடியாக விற்பனைக்கு உள்ளது. (Bala Brothers /Sivam Textiles வீடு)
தொடர்பு: குலசிங்கம் (கோண்டாவில்)
T.P.NO: 0213219079
சுந்தரலிங்கம் (கொட்டாஞ்சேனை)
T.P.NO: 0112335330
(c/565220)


# வரணி தேவாலயப்பகுதியில் மிதி வெடி அகற்றும் பணி

தென்மராட்சி கிழக்கு,பெப்.21

வரணி -தென்னிந்திய திருச்சபையின் தேவாலயம் அமைந்துள்ள பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி தற்சமயம் இடம்பெற்று வருகின்றது.

சுமார் 15 வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இப்பகுதி பலகாலம் மக்கள் நடமாட்டம் இல்லாத பிரதேசமாக இருந்தது. இப்பகுதியில் சுமார் 450 மிதி வெடிகள் இதுவரை மீட்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பெண்பணியாளர்கள் உட்பட பலர் தினமும் இப்பணியில் ஈடுபடுகின்றனர். (1-122)


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19

தபால் மூலம்
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2010



சர்வதேச தரத்திலான

**SATURDAY அல்லது SUNDAY PRE SCHOOL**

ENGLISH MEDIUM
[4+ To 6+ மாணவர்கட்கு]
International Syllabus



- ✔ முதலாம் ஆண்டில் ஆங்கில மொழியில் கற்க விரும்பும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
- ✔ BBS இன் பிரபல பாலர் பாடத்திட்டத்தை சனி அல்லது ஞாயிறு தினங்களில் தொடரமுடியும்.
- ✔ வயது 4+ முதல் 6+ வரை
- ✔ பாடவிதானங்கள்:
  - ஆங்கிலம் எழுத வாசிக்க பேச.[Songs & Poems]
  - தமிழ்.
  - கணிதம்.
  - சுற்றாடல்.
  - சித்திரம், கைவேலை.
- ✔ BBS இன் அனைத்து கிளைகளிலும்.......

நேரம் காலை 8 மணிமுதல் 1 மணி வரை.



PRE-FOUNDATION
1 YEAR ENGLISH COURSE
ஆண்டு 1, ஆண்டு 2 இற்கான விசே ஆங்கில பாடநெறிகள்.

LEVEL 1-2-3-4.
பாடசாலை syllabus உடன்
உயர்தர ஆங்கில பாடநெறிகள்
ஆண்டு 3 முதல் ஆண்டு 9 வரை.

8th
Contact : 021 2225796, 0773627055, 0776646357.

**BRITISH BUSINESS SCHOOL**

| | |
|---|---|
| நல்லூர் | : NO: 140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222-4060 |
| கோப்பாய் | : பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி (எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில்). |
| சுன்னாகம் | : Lakshmi Cottage ( Near the New Court), கே.கே.எஸ் வீதி, மல்லாகம். |
| மானிப்பாய் | :252, ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய். |
| புலோலி | : ஸ்ரீ பத்மநாதன் இல்லம், [illegible] |

எமது நிறுவனத்திற்கு வேறு எந்தப் பெயரிலும் கிளைகள் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



MD

# REGIONAL SALES MANAGER

(Northern Province)

Lanka Canneries Limited the market leader in food products under the brand name of MD is seeking a dynamic, result-oriented Regional Sales Manager with the following requirements:

I. Age below 35 years.

II. Good Secondary Education with minimum G.C.E. (A-level) qualifications.

III. Good communication skills in Sinhala & English Knowledge of Tamil will be an advantage.

IV. Experience in selling fast moving consumer products and dealing with an islandwide distribution network of distributors, retailers, wholesalers and instruction.

2-3 years experience in Regional Sales Management.

Successful candidate will be required to train, guide, motivate and lead a strong team of Sales Representatives to actives company objectives and Sales targets and ensure effective Regional Sales Management.

**Salary is negotiable based on the experience of the applicant and achievements in previous roles. Other pre-requisites comprise a company maintained vehicle, medical insurance scheme and incentives.**

Candidates should forward their complete curriculum vitae, contact telephone number and names and addresses of two non-related referees within 7 days of this advertisement to:

Head of Marketing & Sales
**LANKA CANNERIES LIMITED**
P. O. Box 341, 45/75 Narahenpita Road, Colombo- 5.
Tel : 2586622. Fax : 2368480.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாதக் குழந்தைக்கும் மாம்பழச்சாறு உகந்ததே

## குழந்தைகள் நலம் காக்கும் மூலிகைகளும் கனி வகைகளும்




**01. கர்ப்பூரவள்ளி (கர்ப்பூரவல்லி)**

தாவரவியற் பெயர்- **Anisochilus carnosus Linn/ Coleus ambonicus Lour.**

குடும்பம் - **Labiatae**

குழந்தை மருத்துவத்தில் முக்கியமான ஒரு மூலிகை கர்ப்பூரவள்ளியாகும். வல்லி என்றால் கொடி. இதன் இலை கர்ப்பூரமணமுடையதால் கர்ப்பூரவல்லி என்ற பெயர் வைத்துள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் வீடுகளில் மிகவும் மறைவாக வளர்க்கப்படும் தெய்வீக மூலிகை இதுவாகும். வீட்டிலுள்ளவர்களைத் தவிர மற்றவர்கள் தன்னிச்சையாக இதன் இலைகளைப் பறிப்பதைக்கூட அனுமதிப்பதில்லை. அதுமட்டுமன்றி மாதவிடாயுற்ற பெண்களையும் இதன் அருகே செல்லவிட மாட்டார்கள். அப்படியொரு தெய்வீகத் தன்மை இம்மூலிகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைப்பிள்ளைகள் உள்ள வீடுகளில் கட்டாயம் இதை வளர்ப்பர்.

கைக்குழந்தைகளுக்கு ஏற்படும் தடிமன், மார்புச்சளியை நீக்குவதற்கு கர்ப்பூரவள்ளி இலையை நெருப்புத்தணலில் வாட்டி, சுத்தமான ஒரு வெள்ளைத்துணியில் வைத்து சாறுபிழிந்து எடுத்துக்கொள்ள வேண்டும். [அல்லது கர்ப்பூரவள்ளியிலையை 5 நிமிடத்துக்குச் சுடுநீரில் இட்டு பின்னர் அவ்விலையை எடுத்து வெள்ளைத் துணியில் வைத்துச் சாறுபிழிந்து கொள்ளவும்] அந்தச்சாற்றுக்கு சிறிது கல்கண்டு சேர்த்து 1/2-1 தேக்கரண்டி வீதம் தினமும் 2,3 வேளை கொடுத்து வர தடிமன், மார்புச்சளி நீங்கும். குழந்தைக்கு மலச்சிக்கலும் இருந்தால் கல்கண்டுக்குப் பதிலாகக் கல்லாக்காரம் [பனங்கல்கண்டு] சிறிது சேர்த்துக் கொடுக்கவும்.

வளர்ந்த குழந்தைகளும் பெரியவர்களும் கர்ப்பூரவள்ளியிலையை [1-2] அப்படியே மென்று தின்றுவந்தாலும் நாட்பட்ட இருமல், சளி கூட ஆச்சரியப்படத்தக்க விதத்தில் குணமாகும். கர்ப்பூரவள்ளியிலைச் சாறு நோய் விளைவிக்கும் பக்றீரியாக்கள் போன்ற நுண்ணங்கிகளுக்கு எதிராகச் செயற்படக் கூடிய மருந்து என்பது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

**02. துளசி**

தாவரவியற் பெயர் - **Occimum sanctum Linn**

குடும்பம் - **Labiatae**

துளசி ஒரு தெய்வீக மூலிகை. சைவர்களும், வைணவர்களும் வீட்டு வாசலில் துளசிமாடம் கட்டியோ, கட்டாமலோ துளசியை வளர்த்து, தினமும் விளக்கேற்றி வழிபடுவது வழக்கம். துளசி, சுற்றாடலைத் தூய்மையாக்குகிறது. பாம்பு, பூச்சி, புழுக்கள் அணுகாமல் பாதுகாக்கிறது. பிரத்தியேக மணமுடையது.

துளசியில் பலவகை உண்டு. இதில் வெண்துளசி, கருந்துளசி என்பன முக்கியமானவை. நாய்த்துளசி என்றும் ஒன்றுண்டு. அதையே கஞ்சாங்கோரை என அழைப்பர். கஞ்சாங்கோரையின் மணம் நுளம்புகளை அணுகவிடாது என்பது முன்னோர் நம்பிக்கை. நுளம்பு அதிகமாகவுள்ள காலங்களில் படுக்கையைச் சுற்றி கஞ்சாங்கோரைச் செடியைப் பரப்பி விட்டுத் தூங்குபவர்களும் உண்டு.

துளசி இலை இருமல், சளிக்கு நல்ல மருந்தாகும். தமிழ்நாட்டில் விஷ்ணு ஆலயங்களில் துளசி இலை ஊறிய தீர்த்தத்தைப் பிரசாதமாக வழங்குவர். பெருமாளுக்கு அர்ச்சனை செய்த துளசித்தளத்தையும் [இலையையும்] பிரசாதமாக வழங்குவர். பெரும்பாலோர் அவ்விதம் வழங்கப்படும் பிரசாதத்தை [இலையை] அப்படியே வாயில் போட்டு மென்று தின்றுவிடுவர். அதனால் இருமல், கபதோஷம் என்பன நீங்கும். துளசியிலையில் Anti histamine என்னும் பொருள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அதுவே இவ்விதம் இருமல், சளி என்பன நீங்குவதற்குக் காரணமாகிறது.

இருமல், மார்புச்சளி, இரைப்பிருமல் எனப்படும் 'ஆஸ்த்துமா' நோயின் ஆரம்ப நிலையிலும் பாவிக்கக்கூடிய ஓர் குடிநீர் வருமாறு:

கருந்துளசி இலை- 1 கைப்பிடியளவு
கருநொச்சி இலை - 1 கைப்பிடியளவு
தூதுவளை இலை- 1 கைப்பிடியளவு
மொசுமொசு க்கை இலை -1 கைப்பிடியளவு
[ஏறத்தாழ ஒவ்வொன்றும் 15 கிராம் அளவில் இருக்கலாம்]

இவற்றை எடுத்து 1லீற்றர் தண்ணீர்



விட்டு 1/4 லீற்றராக வருமளவும் அடுப்பில் வைத்துக் குடிநீராகக் காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். இதில் 1 மேசைக்கரண்டி அளவில் எடுத்து கல்கண்டு அல்லது பனங் கல்கண்டு சேர்த்து தினமும் 2,3 தடவை குழந்தைகளுக்குக் கொடுத்துவர மேற்படி நோய்கள் குணமாகும். பெரியவர்களுக்காயின் அரைக் கோப்பையளவில் கொடுத்துவரக்குணமாகும்.

**3.மாம்பழம் நல்ல மாம்பழம்**

மாமரத்தின் தாவரவியற் பெயர்- **Mangifera indica Linn**

குடும்பம்- **Anacardiaceae**

'மாம்பழம் நல்ல மாம்பழம், மாமா தந்த மாம்பழம்.' இது பாலர் விரும்பிப் பாடும் பாடல்களில் ஒன்று மட்டுமல்ல, பாலர் விரும்பியுண்ணும் ஒரு கனியுமாகும். மாம்பழம் முக்கனிகளில் ஒன்று. சத்துமிக்க ஒரு கனி. பாலமுருகனுக்கும் பிள்ளையாருக்குமிடையில் போட்டியை ஏற்படுத்திய ஞானப்பழமும் இதுவாகும். ஆனால், வீட்டில் உள்ள பாட்டிமார் குழந்தைக்கு மாம்பழம் கொடுக்காதே! கொடுத்தால் மந்தம் ஏற்படும். சளிபிடிக்கும் என்று பயமுறுத்துவதையும் காண்கிறோம். இதில் எவ்வித உண்மையும் இல்லை.மாறாக, குழந்தைகளுக்கு மாம்பழம், அல்லது மாம்பழச்சாறு கொடுப்பதால் நன்மையே ஏற்படும். மாம்பழம் குழந்தைக்குச் சக்தியை வழங்கும் ஓர் உணவாக இருப்பதுடன் இதில் உயிர்ச்சத்து Cயும், உயிர்ச்சத்து A யும் [5000 Iu] அதிகளவில் இருப்பதால் மலச்சிக்கல் ஏற்படாமலும் தடுக்கிறது. குழந்தைப்பருவத்தில் உயிர்ச்சத்து A மிகவும் அவசியமான ஒன்றாகும். இதன் குறைபாட்டால் தேரைத்தோல் [Toad skin] எனப்படும் தோல்வியாதியும், மாலைக் கண்ணோயும் ஏற்படவாய்ப்புண்டு. அதுமட்டுமன்றி, குழந்தையின் நோயெதிர்ப்பு ஆற்றலை வளர்ப்பதிலும் உயிர்ச்சத்து A கணிசமான பங்கு வகிக்கிறது. அதனால் இதை Immune friendly vitamin என்றும் அழைப்பதுண்டு.


குழந்தைகளுக்குப் பிறந்து ஆறு மாதத்தில் இருந்தே மாம்பழச்சாறு கொடுத்து வரலாம். யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற கறுத்தக் கொழும்பான் மாம்பழம் இவ்விதம் கொடுக்கச்சிறந்தது. நன்கு பழுத்த மாம்பழத்திலிருந்து சாறு பிழிந்து வெள்ளைத் துணியில் வடிகட்டி, ஆரம்பத்தில் 1,2 துளிகள் வீதம் நாக்கில் தடவிவர வேண்டும். பிறகு படிப்படியாக ½ தேக்கரண்டி, ஒரு தேக்கரண்டி என்று அளவைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். வளர்ந்த பிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்கும் மாம்பழச் சதையைச் சிறு துண்டுகளாக வெட்டிக்கொடுக்க வேண்டும். [வளரும்]



Dr.சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

---

# பிறர்க்கென வாழ்வதே நல்வாழ்க்கை
# இதனை மனதில் இருத்திச் செயற்படுவோம்



இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஸ்ரீ சாரதா பிரம்ம வித்தியா கேந்திரப் பொறுப்பாளரும் பக்திச் சொற்பொழிவாளருமான சுவாமி வேதாந்தானந்தா அவர்களுடனான பேட்டி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: தங்களது இலங்கை விஜயத்துக்கான பிரதான நோக்கம் என்ன?

பதில்:யுத்தத்தால் பாதிக்கப்பட்டு துயருற்றிருக்கும் தமிழ்மக்கள் மத்தியில் ஆன்மீக நாட்டத்தை ஏற்படுத்தி நல்வழி காட்டுவதன்மூலம் அவர்களுக்கு மன மகிழ்ச்சியை ஏற்படுத்தி தன்னம்பிக்கையை வளர்க்க உதவுவதே எனது இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

கே:யாழ்ப்பாண மக்களுக்கு நீங்கள் என்ன கூறுவதற்கு விரும்புகின்றீர்கள்?

ப: இற்றைநாள் வரை நடந்தவைகளை முற்று முழுதாக நாம் மறந்துவிட வேண்டும். இனிமேல் நடக்க இருப்பனவற்றை நல்லனவாகச் செய்வோம். இறைவன் ஒருவன் இருக்கின்றார். அவரை முழுமையாக நம்புவோம். ''நான் எனது'' என்னும் பொறாமைக் குணத்தை விலக்குவோம். எப்போதும் உண்மை பேசுவதே சிறந்தது. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் என்பனவற்றை ஒழிப்போம். மனிதரை நேசிப்போம்.

கே:உங்களது துறவு வாழ்க்கையில் நீங்கள் கண்ட பயன் என்ன?

ப: எனது ஆன்மீக வாழ்வில் எனக்கு மனமகிழ்ச்சி கிடைத்தது. எல்லா இன மக்களையும் எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் சந்தித்தோம். அத்துடன் அவர்களது பண்பாடுகளையும், நடைமுறைகளையும் பார்க்கின்ற ஒரு நல்ல வாய்ப்பாகக் கருத்துகின்றோம். அதனால் அவர்களுக்கு என்ன என்ன முறையில் என்ன என்ன தேவையோ அவற்றையெல்லாம் ஆன்மீக நேர்வழியில் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தோம். அதற்கு அவர்கள் காட்டும் ஆர்வத்தையும் ஆதரவையும் கண்டு இறும் பூதெய்தினோம்.

கே: 'தாம் செய்த வினையைத் தாமே அனுபவிப்பர். இதற்கு நீங்கள் சிறிது விளக்கம் தருவீர்களா?

ப: தெய்வப்புலவர் தமது திருக்குறளில் ''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்'' என்பதைக் கருத்திற்கொண்டு எமது வாழ்க்கையில் நேர்மையான நீதியானவழியில் நடத்தல் வேண்டும். 'ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான எதிர்வினை கட்டாயம் உண்டு.' இது நியூட்டனின் விதி. கொன்றால் பாவம் (அதன் வினைப் பயனைத்) தின்றால் தீரும் என்கிறார்கள். இது பொதுவாக எல்லோருக்கும் தெரியும். நமது முன்னோர் இப்படியும் கூறியுள்ளனர். ''பிராரப்த கருமம்'' அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்பது இயற்கையின் விதி.

கே:மனித வாழ்வின் சிறப்புப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்திருக்கும் நாம் பலனை எதிர்பார்க்காமல் கடமையைச் செய்தல் வேண்டும். வேண்டுதல் வேண்டாமை இன்றி வாழ்தலே வாழ்க்கை. நாம் ஒவ்வொருவரும் சான்றோனாகப் பற்றின்றி பிறர்க்கென வாழ்தலே நல்வாழ்க்கை. இதனை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பது ஔவையார் கூற்று. எனவே கிடைத்தற்கரியது இந்த மானிடப் பிறவி. இது பகுத்தறிவுடன் கூடியது. சிரிக்கவும் சிந்திக்கவும் அழவும் தொழவும் முடிந்தது.

கே:தங்களது குருநாதர் யார் என்று கூறமுடியுமா?

ப: எனது குருநாதர் சுவாமி சின்மயானந்தர். இவரின் சீடரான சிறியேன் கோயமுத்தூர் 'சின்மய சாந்தீபனி வித்யாமந்திர்' குருகுலத்தில் மூன்று வருடகாலம் முறைப்படி வேதாந்தம் பயின்றுள்ளேன்.

கே:தங்களது ஆன்மீகப் பணிகள் குறித்துக் கூற இயலுமா?

ப: ஏழு வருடங்களுக்கு மேலாக ஸ்ரீமத் பகவத் கீதை உபநிஷதத்துக்கள், கைவல்ய நவநீதம் போன்ற தமிழ் வேதாந்தப் பாடங்களையும் பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம், மகாபாரதம் முதலானவை பற்றிய தெய்வீக பக்திச் சொற்பொழிவுகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நிகழ்த்தி வருகின்றேன். இது என் செயலல்ல. எல்லாம் இறைவன் செயலே. மேலும் இமயமலை, ரிஷிகேசம், கைலாச ஆச்சிரமத்தில் சந்நியாச தீட்சை பெற்ற யான், சமஸ்கிருதம், தெலுங்கு, ஹிந்தி, படுகு ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ளேன். ஸ்ரீசாரதா பிரம்ம வித்தியா கேந்திரத்தின் குன்னூர் மற்றும் கல்லாறு ஆச்சிரமங்களின் பொறுப்பாளராகவும் தற்போது அறப்பணி புரிந்து வருகிறேன். வேதாந்த மன்றம் மற்றும் வேதாந்த இன்டர்நேஷனல் பவுண்டேஷனையும் நிறுவியுள்ளேன்.

கே: உங்கள் நாட்டுக்கும் எங்கள் நாட்டுக்கும் உள்ள வேறுபாடு பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: எமது நாடான இந்தியா பரந்து விரிந்த தேசம். உடைமைகள் இழப்புக் குறைவு பல்வேறு இனம், மொழி, மதம் என இருந்தாலும் ஒரு பெரிய புகழ்பெற்ற புனித புண்ணிய பூமி. மேலும் சமயப்பணியாற்றுகின்ற துறவியர் அதிகம்; மக்களிடம் பரபரப்பும் அதிகம். ஆனால் சின்னஞ்சிறிய நாடான இலங்கையில் உடைமைகளை இழந்து தவிக்கும் மக்கள் அதிகம். மிகவும் சுருங்கிய இடமாக இருந்தாலும் சைவமும் தமிழ் மணமும் கமழுகின்ற சிவபூமி. இதனைச் சைவபூமி என்றுஞ் சொல்லலாம். யாழ்ப்பாணம் சிறந்த இடம். சைவ சமயப் பணியாற்றும் துறவியர் பற்றாக் குறை நிலவுகின்றது. மக்களிடம் பரபரப்புக்குறைவு.

கே: உங்களது இலங்கை விஜயத்தின் போது நீங்கள் பெற்ற அனுபவம் என்ன?

ப: இலங்கை மக்களுக்குத் தற்போது ஆன்மீக வழிகாட்டுதல்கள் மிகவும் அதிகமாகத் தேவை. ஈழம் வாழ் மக்கள் மனத்தால் வெந்து, நொந்து, சோர்ந்து போயிருக்கின்றார்கள். அவ்வளவு துன்பதுயரங்களுக்கிடையிலும் இலங்கையில் நிகழும் ஆன்மீக நிகழ்வுகளில் மக்கள் காட்டும் ஆர்வமிகுந்த ஈடுபாடுகளைக் கண்டு வியப்பு ஏற்பட்டது. அதுவுமல்லாமல் ஆன்மீக விஷயங்களுக்காக அரசாங்கம் செய்யும் உதவிகளைப் பார்த்துப் பெருமைப்பட்டேன். எல்லாம் வல்ல இறைவன்மீது இங்குள்ள மக்களுக்கு நம்பிக்கையும் பயமும் பக்தியும் இருப்பது குறித்துப் பெருமைப்பட்டேன்.

கே:கடைசியாக நீங்கள் எமது மக்களுக்குக் கூறவிரும்பும் அறிவுரைகள் எவை?

ப:கற்றறிந்த சான்றோர்கள் இருப்பவர்களுக்காகவோ, இறந்தவர்களுக்காகவோ கவலைப்படமாட்டார்கள். கடந்தகாலத்தை மறந்து நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் கருத்திற்கொண்டு வாழ்க்கையில் உண்மையையும் நேர்மையையும் கடைப்பிடியுங்கள். உங்களது நல்வாழ்வு மேலும் வளம்பெறும். இனியாவது வாழ்க்கையில் வசந்தம்வரவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தியுங்கள். ''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்'' என்பது வள்ளுவர்வாக்கு. எனவே, எவற்றில் இருந்தெல்லாம் பற்றுகளை நீக்குகின்றோமோ அவற்றினால் வரும் துன்பங்களும் இல்லாமற்போகும். ஆசை கூடக் கூடத் துன்பமும் கூடும்.

ஆதரவற்ற ஏழைகளுக்கு இயன்றவரை உதவுங்கள். படித்தபடி நடவுங்கள். உள்ளத்தைத் தூயமையாக வைத்திருக்கப் பழகுங்கள். நேரங்கிடைக்கும் போதெல்லாம் ஆன்மிக நூல்களை வாசியுங்கள். ''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் நயனுடையான் கண்படின்'' என்ற குறள்படி மருந்துச்செடி பிறர்க்கு வரும் நோயைக் குணப்படுத்துவது போல நல் லோரிடம் சேரும். செல்வமும் பிறருக்குப் பயனுள்ளதாக இருக்கும். இதைக் கவனற்றிற் கொள்வது நல்லது.

ரயில் பயணம் போன்றது வாழ்க்கை. இதைச் சிந்தித்து தனக்கும் பிறருக்கும் நன்மை வர வாழ்க்கையை அமைப்பதே சாலச்சிறந்தது. அதற்காக நான் துறவுபூணச் சொல்லவில்லை. குடும்பமகிழ்வுடன் இல்லறத்தில் இருந்து கொண்டே நல்லறத்தைச் செய்யுங்கள்.********

பேட்டி கண்டவர்: சிவநெறிக்கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரேஞ்சுப்பழத்தில் இருந்து செயற்கை தோல் தயாரிப்பு

தென் கொரியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒரேஞ்சுப்பழம் மற்றும் சிசிலிப்பழம் போன்றவற்றை ஆராய்ச்சி செய்தனர். இதில் இருந்து செயற்கை தோல் மற்றும் அழகு சாதனப் பொருள்கள் தயாரித்துள்ளனர். அவற்றில் இருந்து வெளியாகும் சிட்ரஸ் சீ 623-2 என்ற பக்ரீயா மூலம் வேதியியல் மாற்றம் செய்யப்பட்டு செலுலஸ் ஜெல்லாக மாற்றம் செய்யப்படுகிறது. அதில் இருந்து



செயற்கை தோல் தயாரிக்கப்படுகிறது.

இது மனிதர்களின் உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது. இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் இந்த செயற்கைத் தோல் பயன்படுத்துவதால் எந்தவித தொற்று நோயும் ஏற்படாது.

தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் ஒரு வருடத்திற்குள் இந்த செயற்கை தோலைப் பொருத்த முடியும். தற்போது இது ஆய்வில் உள்ளது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் உபயோகத்துக்கு வரும். இந்த செயற்கை தோல் இயற்கையான பயோ பாலிமரில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இதனால் பக்ரீயாவினால் பாதிப்பு எதுவும் ஏற்படாது என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ★★★




இலங்கை மத்திய வங்கிக்கு அதன் அலுவலகத்திற்கும் சுற்றுலா விடுதிக்குமாக யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைகளினுள் பொருத்தமான பணிமனை தேவைப்படுகிறது.

உத்தேசிக்கப்பட்ட பணிமனை பின்வரும் வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- வசதியான பாதைகளுடன் நகரப் பிரதேசத்தினுள் அமைந்திருக்க வேண்டும்.
- தளப் பரப்பு கிட்டத்தட்ட 6,000 சதுர அடி
- 10 ஊர்திகளை நிறுத்துவதற்கான இடவசதி
- மேலதிக அபிவிருத்திகளுக்கு போதிய இடவசதி
- மின்வலு, நீர் வழங்கல் மற்றும் ஏனைய வசதிகள்

ஆர்வமுள்ள தரப்பினர் கட்டட வரைபடத்தின் பிரதிகளுடன் சகல விபரங்களையும் 05.03.2010 இற்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பணிப்பாளர்
பணிமனைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1

தொலைபேசி: 011- 2477400, 011- 2477403, 011- 2477405.
தொலைநகல்: 011- 2477769, 011- 2477730,
மின்னஞ்சல்: premises@cbsl.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

AKKPdesign

# எறும்பு தின்னி

போலி டோட்டா (Pholidota) வகையைச் சேர்ந்த எறும்பு தின்னி எனச் செல்லமாக அழைக்கப்படும். இவை எதேச்சையாக ஏமாந்து போய் மனிதர்களிடம் அகப்பட்டும் இருக்கின்றன. பொதுவாக மானிடர்களின் கண்களில் படாமலேயே மொத்த வாழ்க்கையையும் வாழ்ந்து விடுகின்றன.

இதற்குப் பிரதான சிறப்பம்சமாக இதன் உடற்பகுதி எங்கும் செதில்கள் காணப்படுவதே ஆகும். தனக்கு ஏதாவது ஆபத்து நேருமிடத்து பந்தைப் போன்று தனது உடம்பை சுருட்டிக்கொள்ளக்கூடியன. அடிவயிற்றுப்பகுதி மட்டும் செதில்கள் குறைந்து காணப்படும். இதனை அழுங்கு என்றும் அழைப்பதுண்டு.

இவற்றின் பிரதான உணவாக எறும்புகளும், கறையான்களும் விரும்பி உண்ணக் கூடியன. இரையைப் பிடிப்பதற்குத் தவளையைப் போன்று



நாக்கை நீட்டிக் கொள்கின்றன. நாக்கில் இருக்கும் பிசின் போன்ற தன்மையால், எறும்புகள், கறையான்கள் போன்ற உணவுகள் ஒட்டிக் கொள்கின்றன. பின்னர் நாசுக்காக நாக்கை உள் இழுத்து உணவை உண்ணும் திறன் உடையது இப்பிராணி. அதுமட்டுமன்றி இந்த எறும்புத் தின்னி இரவு வேளைகளில் நடமாடும் திறன் இவற்றுள் காணப்படுகின்ற சிறப்பம்சமாகும் பகல் வேளைகளில் நிலத்தைக் குழி தோண்டி உள்ளே விஸ்தீரணமாய் வீடமைத்து அதில் பகற்பொழுதில் ஓய்வெடுக்கின்றன.

இரவில் இரை தேடும் போது தம் வாலை உயரத்தூக்கிக் கொண்டு, முதுகை இராமாயணக் கூனி போல் வளைத்து இவை நடமாடுகின்றன. மற்றும் எப்போதும் சந்தேகப் பார்வையுடன் சுற்றுப் புறத்தை நோட்டமிட்டவாறே இவற்றின் செயற்பாடு காணப்படும்.

இயற்கையிலேயே இவ்விலங்கிற்கு கூச்ச உணர்வு அதிகம் உள்ளமையால் தன் இணையைக் கூட வேறு விலங்கென உணர்ந்து மோப்பம் பிடித்து, தன் இனம் தான் என உணர்ந்த பின்னரே ஒன்று சேர்கின்றன. இப்படியான சாதுவான இந்த விலங்கால் மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் எதுவித ஆபத்துக்களும் ஏற்படுவதில்லை.

- ஜெ. ஜூபன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுள்ள குழந்தைக்காக கருவிலேயே பாட்டு!

உங்கள் குழந்தைகள் புத்திசாலியாக வரவேண்டும், முதன்மையானவர்களாகத் திகழ வேண்டும் என்று அனைத்துப் பெற்றோர்களும் விரும்புவார்கள்.

அதற்காக கருவிலிருந்தே பயிற்சி கொடுக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அதற்கான ஒரு புதுமையான முயற்சி இது.

குழந்தைகள் கருவில் இருக்கும்போதே பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன. கேட்கும் திறனும், அறிவுத்திறனும் வேகமாக வளர்கிறது.

கருவில் 17 வார வளர்ச்சி உடைய குழந்தை ஒரு செயலை எதிர்நோக்கு விளைவுடன் கவனிக்கத் தொடங்குகிறதாம்.

அதேபோல் இசையானது கருவில் இருக்கும் குழந்தையின் மூளைத்திறனை அதிகரிப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனவே தாயும், குழந்தையும் சேர்ந்து இசையைக் கேட்பதன் மூலம் அறிவுள்ள குழந்தையை உருவாக்க முடியும் என்று ஆ.'ளர்கள் கருதுகிறார்கள்.

இதற்காக நவீன கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பணித்தாய்மார்கள் வயிறு- இடுப்பில் எளிதாக பொருத்திக் கொள்ளும் 'பெல்ட் வடிவில் இந்தக் கருவி அமைந்துள்ளது. இதில் இரண்டு வரிசைகளில் ஸ்பீக்கர் மற்றும் இயர்போன் இணைந்திருக்கும். குழந்தையின் தலைப்பகுதி எந்தப்பக்கம் இருந்தாலும் பாட்டு கேட்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

அமெரிக்காவின் தெற்கு கரோலினா நகரைச் சேர்ந்த ஒரு நிறுவனம் இதைத் தயாரித்துள்ளது.

★★★★



# வண்ண விளக்குகளால் மூளைக்கு ஆபத்து

வண்ண விளக்குகள் வசீகரமானவை. கண்களைக் கவர்ந்திழுக்கும். பலரும் விரும்புவதால் வண்ணவிளக்குகள் பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

குறிப்பாக பூஜைஅறை, படுக்கை அறை மற்றும் பெரியவர்களின் படங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்படுகிறது. குறைந்தபட்சம் 'ஜீரோ வாட்ஸ் மிக்குமிழ்களாவது ஒவ்வொரு வீடுகளிலும் ஒளிரும்.

அமெரிக்காவின் எம்.ஐ.டி. பல்கலைக்கழக நரம்பியல் வல்லுனர்கள், விளக்கு ஒளியால் ஏற்படும் நரம்பியல் மாற்றங்கள் குறித்து ஆய்வு நடத்தினார்கள். இதில் வண்ண விளக்குகளில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சுகள் மூளையைப் பாதிப்பது தெரியவந்துள்ளது.

இதற்காக ஆய்வகத்தில் பல வண்ண விளக்குகளுக்கு இடையே எலிகள் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன. ஆய்வில் விளக்குகளை அணைக்கும்போது ஏற்படும் மின்னியக்கக் கதிர்வீச்சு மூளை செல்களான நிரான்களைப் பாதிக்கின்றன. அவற்றின்



செயற்பாட்டைத் தடுப்பதால் பல விபரீத வியாதிகள் ஏற்படுகின்றன.

குறிப்பாக உடல் வலி, ஞாபக மறதி , மூளை முடக்கம், இருதயக் கோளாறுகள், நோய் எதிர்ப்புத் தன்மை (இம்ன் சிஸ்டம்) செயல்களில் பாதிப்பு மற்றும் இன்னும் பல வியாதிகளுக்கு வழி வகுக்கிறது.

ஒவ்வொரு வண்ண விளக்கும் வேறுவேறு பாதிப்புகளை உருவாக்குவது குறிப்பிடத்தக்கது. சிவப்பு வண்ண விளக்கு நிரான்களை செயலிழக்கச் செய்கிறது. நீல வண்ண விளக்குகள் ஒரு வகை ஜீன்களைப் பாதிக்கிறது. மஞ்சள் விளக்குகள் வேறுவகை ஜீன்களைப் பாதிக்கிறது.

உடலியக்கம் பல மின்தூண்டல்களால்தான் நடைபெறுகிறது. இதற்கிடையே விளக்குகளை அணைக்கும்போது ஏற்படும் மின் அதிர்வுகள், மூளையைப் பாதிக்கிறது என்கிறது ஆய்வு.★★★★★★★


எமது தாய்நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கான பயணத்தில் இணைந்து உறுதுணையளித்திட அனைத்து தேசபக்தி மிக்க இலங்கையர்களுக்குமான தருணம் இதோ!

LOLC
அபிவிருத்திப் பாதையின் முன்னோடி



உங்கள் வெளிநாட்டு பணத்தினை இலங்கையில் முதலீடு செய்யும் பெறுமதிமிக்க தருணத்தில் இணைந்த பெருமையினை நீங்களும் பெற்றிடுங்கள். நீங்கள் உழைத்த பணத்தை தாய்நாட்டில் முதலீடு செய்திடுங்கள். LOLC குழுவினை சேர்ந்த லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் உங்களின் முதலீடுகளுக்கு சிறந்த பாதுகாப்பினையும் வட்டியினையும் வழங்கிடும். LOLC பலமிக்க சர்வதேச நிதி ஸ்தாபனத்தினை பின்பலமாககொண்டது. LOLC ஆனது உலகின் மிகப்பெரிய லீசிங் நிறுவனம் மற்றும் ஜப்பானின் இரண்டாவது மிகப் பெரிய நிதி தீர்வுகளுக்கான நிறுவனமாக ஓரிக்ஸ் கூட்டுத்தாபனம் - ஜப்பானின் கீழ் 26 நாடுகளில் செயல்படும் உலகளாவிய ஓரிக்ஸ் வலையமைப்பின் அங்கத்தவர்.

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் fitch rating இல் A- தரச்சிறப்பை பெற்றுள்ளது.

- உங்களின் பணத்தை ஒருமாதத்தின் பின் வேண்டிய நேரம் மீளப்பெறலாம். பகுதியாகவும் மீளப்பெறலாம்.
- குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் பெறும் மீளப்பெறல்களுக்கு வட்டியில் கழிவு இல்லை
- வைப்புக்களின் பெறுமதி அதிகரிக்க புதிய வைப்புக்கள் மூலம் எந்த நேரமும் அதிகரிக்கலாம்
- வட்டி மாதாந்தம் வழங்கப்படும்.

உங்கள் தேசத்தின் அபிவிருத்திக்கு உதவும் அதேவேளை, உங்கள் பணத்தை பாதுகாப்பான மற்றும் அதிக வட்டியை தரும் இடத்தில் முதலீடு செய்யுங்கள்

அழையுங்கள் 0773 815602
Email : lofin@lankaorix.com

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட்
LOLC வர்த்தக குழுமத்தின் நிறுவனம்
100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய.
தொலைபேசி: 5880880, ஈமெயில் lofin@lankaorix.com, வெப்: www.lankaorix.com

BRANDS ALLEY

லங்கா ஓரிக்ஸ் ... பிரகாரம் பதிவு செய்யப்பட்ட பொது 'பிட்ஸ் ரேடிங்ஸ் நிறுவனத்தினால் A- (lka) தரச்சிறப்பை பெற்றுள்ளது. 1988 ஆண்டு 78 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

emami

# அம்லா ப்ளஸ்

உயிர்மையுடன் கூடிய ஆரோக்கியமான கூந்தலுக்கு




## ஹேர்பல் ஹெயர் ஒயில்

இமாமி அம்லா ப்ளஸ் விசேட குணங்களை கொண்டுள்ள நெல்லி, மருதாணி, கற்றாளை மற்றும் பாதாம் எண்ணெய் ஆகிய சிறப்புப் பதார்த்தங்களை கலவை செய்து இந்தியாவின் பிரசித்தி பெற்ற இமாமி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றது.

### பிரதான உள்ளீடுகளின் செயல்பாடு:

நெல்லி (Amla): கேசத்தின் வேர்களைப் பலப்படுத்தி பேணுகிறது.

மருதாணி (Henna): கேசத்தை வலுப்படுத்தி கருமையாக்கி இயற்கை வளர்ச்சியை விருத்தி செய்கிறது.

கற்றாளை (Aloe vera): தலைமுடி நரைப்பதை தடுத்து ஈரத்தன்மையை சிறப்பாக பராமரிக்க உதவுகின்றது.

பாதாம் எண்ணெய் (Almond oil): புரதம் நிறைந்துள்ள இது தலைமுடிக்கு ஆரோக்கியமான பளபளப்பை தருகிறது.

### அம்லா ப்ளஸ் பயன்படுத்தும் முறை:

- சுமார் 1 முதல் 2 தேக்கரண்டி அளவு (10 மி.லீ) இமாமி அம்லா ப்லஸ் தலையில் பூசி தலையின் மேல் பாகத்தில் மெதுவாக வட்டமான அசைவுகளுடன் மசாஜ் செய்து நன்றாக தலைமுடியை சீவி விடுங்கள்.
- சிறந்த பயனைப்பெற இமாமி அம்லா ப்ளஸ் பூசிய தலைமுடியை குறைந்த பட்சம் 2 மணித்தியாலங்களுக்கு ஷவர் குல்லாய் (shower cap) அல்லது தலை பாகையால் முடிக்கொள்ளுங்கள்.
- பின்னர் தலை முடியை மிதமான ஷம்புவினால் கழுவி விடுங்கள்.
- உங்கள் தினசரி பாவனையுடன் வாரம் ஒரு முறை மேற் கூறியபடி இமாமி அம்லா ப்ளஸ் பயன் படுத்தி கூந்தலை பராமரித்து வந்தால் சிறந்த பலன்களை பெற்றுக் கொள்ளலாம்.

3.5 மி.லீ 50 மி.லீ 100 மி.லீ 200 மி.லீ அளவுகளில் விற்பனைக்குள்ளது.

சந்தைப்படுத்துவோர்:
ஹார்கோட்ஸ் (பிரைவேட்) லிமிடட்
கன்சியுமர் டிவிஷன்
14 புகையிரத நிலைய வீதி, தெகிவளை.
தொ: 011-5432180



bcs
The Chartered Institute for IT

HIGHER EDUCATION QUALIFICATIONS



Think an IT degree is the only option?

Discover world class degree equivalent qualifications

See us at the Mini Infotel Jaffna exhibition from February 26 - 28 at the Wembady Girls' High School, Jaffna.

The Chartered Institute for IT
No 3,
Maitland Crescent,
Colombo 7, Sri Lanka

Tel +94 (11) 2 69 8566
Fax +94 (11) 2 69 1503
www.bcs.org.uk



# LOLC மாபெரும் வாகனச் சந்தை

நீங்கள் விரும்பும் வாகனத்தை உடனடியாக பெற்றிடுங்கள்

LOLC
அபிவிருத்திப் பாதையின் முன்னோடி

## அனைத்து வாகன லீசிங்களுக்கும் காப்புறுதி இலவசம்





- குறைந்த ஆவணங்கள்
- குறைந்த வட்டி வீதம்
- லீசிங் பெறும் அனைவருக்கும் விஷேட பரிசுப்பொதிகள்
- இலவசப் பதிவு
- கவர்ச்சிகரமான சலுகைகள்
- பிறவுன்ஸ் இடமிருந்து இரண்டு மற்றும் நான்கு சக்கர ட்ரக்டர் வண்டிகள்

பெப்ரவரி 14ம் திகதி முதல் 26ம் திகதி வரை 121, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்

அழையுங்கள் 0776 556476 / 0777 394838


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தின் சில உண்மைகள்!

பெண்களின் இதயத் துடிப்பு ஆண்களை விட அதிகம். பொதுவாக எல்லா பெரிய உயிரினங்களின் இதயத் துடிப்பு மெதுவாகவும் (யானை நிமிடத்திற்கு 20-30) சிறிய உயிரினங்களில் இதயத் துடிப்பு வேகமாகவும் இருக்கும்.

(எலி - நிமிடத்திற்கு 500-600). மனித இனத்தில் பெண்கள் உருவத்தில் ஆண்களைவிட சிறியவர்களாக இருப்பதால் அவர்களின் இதயத்துடிப்பு வேகமாக இருக்கும்.



2. மனித இதயத்தின் எடை அரை கிலோ கிராமிற்கு குறைவாகவே இருக்கும்.

3. நீளமான மோதிர விரல் உள்ளவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கு வாய்ப்புக் குறைவு என்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள்.

4. மனிதனின் இதயத் துடிப்பு ஒரு நாளைக்கு 100,000 தடவைகளும் ஒரு வருடத்திற்கு 30 மில்லியன் தடவைகளும் வாழ்நாளில் 2.5 பில்லியன் தடவைகளும் துடிக்கின்றன.

5. ஒரு மனிதனின் வாழ்நாளில் சராசரியாக ஒரு மில்லியன் பேரில் குருதியை பம்பு பண்ணுகிறது. (ஒரு பேரல் என்பது 117.34 லீற்றர்கள் நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்)

6. பல் ஈறுகளில் நோய்த் தொற்று உள்ளவர்களுக்கு மாரடைப்பு வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

7. நம் இதயத்தின் அளவு நமது கையின் ஒரு பிடி அளவே.

8. கருவில் உருவாகும் முதல் உறுப்பு இதயமே.

9. நாம் இதயத்தின் மேல் கை வை என்றால் உடனடியாக நாம் நமது கையை நெஞ்சின் இடதுபக்கம் வைப்போம். ஆனால் இதயம் நெஞ்சின் நடுவில்தான் இரண்டு நுரை ஈரல்லுக்கும் மத்தியில் இருக்கிறது. இதயத்தின் அடிப்பகுதி மட்டுமே சற்று இடதுபக்கம் சாய்ந்து இருக்கும் எனவேதான் நாம் அவ்வாறு உணருகிறோம்.

10. லப்..டப் ..லப்..டப் ..என்னும் சத்தம் நமது இதயம் ஏற்படுத்துகிறது என்பது எமக்குத் தெரியும். எமது இதயத்தின் வால்வுகள் திறந்து மூடும்போதே இந்த சத்தம் உருவாகிறது. ★★★★★







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியர் வவுச்சர்கள் சொந்த முகவரிக்கு இனிவரும்

யாழ்ப்பாணம்,பெப்.21

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் மார்ச் மாதம் தொடக்கம் ஓய்வூதியர்களின் சொந்த முகவரிக்கு அனுப்பட்டவுள்ளன.

இடம்பெயர்வு காரணமாக இதுவரை காலமும் பிரதேச ஓய்வூதியர்களுக்கு அந்தந்த ஓய்வூதியம் பெறும் வங்கிகளுக்கு வவுச்சர்கள் அனுப்பப்பட்டதாகவும் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு மார்ச் மாதம் தொடக்கம் சொந்த முகவரிக்கு அனுப்ப ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் உதவிப் பிரதேச செயலர் (நிதி) அ.கில்பேட் குணம் அறிவித்துள்ளார். (1-207)


## WANTED: OFFICE SPACE ON RENT FOR AN INTERNATIONAL ORGANIZATION

IOM – International Organization for Migration is the leading inter-governmental organization in the field of migration and works closely with governmental, intergovernmental and non-governmental partners. Headquartered in Geneva, Switzerland IOM has 125 member states and 16 observer states to its Executive Council and has office presence in over 100 countries.

IOM is looking for an office space in the Jaffna Municipality area with the following conditions:

- Building should be in good condition.
- Should have floor area of minimum 3,000 Square feet & maximum 4,500 Square feet.
- Should have attached toilet, water & electricity facilities.
- Compound with at least 40 perches land in extend and parking space for at least five (05) vehicles.
- Parapet boundary wall on all four sides.

Those who are in possession of a building matching the above-mentioned requirements are requested to send sealed applications in detail with the proposed terms and conditions to the below mentioned address **on or before 01/03/2010.**

**The Head of Sub-Office**
**International Organization for Migration (IOM) - 70, Temple Road, Jaffna.**

(95272)



இதோ!

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/NO.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு: சந்திரச் சந்திக்கு அண்மையில்)



## எலக்றோ பிளேட்டிங் ELECTRO PLATING

எங்களிடம் சிறந்த முறையில் நவீன தொழில்நுட்பத்துடன் அனைத்து வகையான மின்முலாம் பூசுதல் (Electro Plating) வேலைகள் செய்து தரப்படும்.

முக்கியமாக:

01. பிரைட் நிக்கல் பிளேட்டிங் (BRIGHT NICKEL PLATING)
02. பிரைட்குரோமியம் பிளேட்டிங் (BRIGHT CHROME PLATING)
03. கொப்பர் பிளேட்டிங் (COPPER PLATING)
04. ஜிங்க் பிளேட்டிங் (ZINC PLATING)
05. ABS வகை பிளாஸ்ரிக்மீது பிளேட்டிங்
06. அலுமினியம்மீது பிளேட்டிங்

போன்ற பிளேட்டிங் வேலைகள் செய்து தரப்படும்.

(C/564978)

செல்வா ஹாட்வெயர்ஸ்,
SELVA HARDWARES
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0212222873



# யாழ் மண்ணில்

BCHS BRITISH COLLEGE OF HIGHER STUDIES

**MARIA MONTESSORI இன் புதிய அறிமுகம்**

**BCHS யாழ் மண்ணில் சிறார்களின் நலன் கருதி**



தன்னுடைய இன்னுமொரு பரிமாணத்தினை உருவாக்குகின்றது. இந்த வகையில் சிறார்களுக்கான சர்வதேச தரத்திலான ஆங்கில மொழி மூலம் MONTESSORI யினை உருவாக்கியுள்ளது.

இங்கு மாணவருக்குரிய முழுமையான கற்பித்தல் சர்வதேச தரம் வாய்ந்ததோடு MARIA MONTESSORI முறையினூடாக சிறுவர்கள் பயிற்றுவிக்கப்படுவர். அத்தோடு சிறார்களின் ஆளுமை விருத்திக்குரிய செயற்றிட்டம் உளவியல் ரீதியான செயற்றிட்டம் போன்றவற்றினூடாக சிறுவர்களினை உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதே எமது நோக்கம்.

**THE WOMAN & HER METHOD**



Just who was this woman who began an educational revolution that changed the way we think about children more than anyone before or since?

Maria Montessori, born in 1870, was the first woman in Italy to receive a medical degree. She worked in the fields of psychiatry, education and anthropology. She believed that each child is born with a unique potential to be revealed, rather than as a "blank slate" waiting to be written upon. Her main contributions to the work of those of us raising and educating children are in these areas:

★ குழந்தைகளுக்கான முழு இயற்கையான சுற்றாடலினை உருவாக்குவதும், அவர்களுடைய வாழ்க்கையை அதற்குள் அமைத்தல்.

★ இந்த சுற்றாடலில் குழந்தைகள் சுதந்திரமாக செயற்படுவதினை அவதானித்தல்.

★ தொடர்ச்சியாக நாம் உருவாக்கிய சுற்றாடலினை உள் வாங்குவதன் ஊடாக பிள்ளைகளுக்குரிய மிக உயரிய சூழலை உருவாக்கி உளவியல் ரீதியாக, உடல் ரீதியாக, அறிவு ரீதியாக உள்ளார்ந்த எண்ணங்களினை விருத்தி செய்தல்.

**ஆரம்பிக்கப்படும் வகுப்புகளும் அதற்கான வயதெல்லைகளும்**

| GRADE | LOWER NURSERY | UPPER NURSERY | PRE GRADE |
|---|---|---|---|
| AGE GROUP | 2½ - 3 | 3 - 4 | 4 - 5 |

- சர்வதேச தரத்திற்கேற்ப சிறார்களின் சிறந்த எதிர்காலத்தையும், தேவையையும் கருத்திற் கொண்டு ஆங்கில மொழி மூலம் கல்வி, சிறந்த பயிற்சி.
- நன்கு பயிற்றப்பட்ட துறைசார் ஆசிரிய குழாம்,
- நவீன தொழில் நுட்பத்தில் மாணவர்களுக்குரிய பயிற்சிகள் (Audio & Video Visual முறையினூடாக)
- Montessori க்கென சர்வதேச தரம் கொண்ட பாடநெறிகள். இவ்வாறான பாடநெறிகளைப் பயிலுவதன் மூலம் மாணவர்களின் புத்திக் கூர்மையையும் சிந்தனாசக்தியையும் அதிகரிக்க முடியும்
- கலை கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் இசை சார்ந்த பயிற்சிகள்

வரையறுக்கப்பட்ட அனுமதிகளே உள்ளதால் February 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

BCHS No.15, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550 HotLines: 0714299935 / 0777222422 Email: info@bchs.lk

Harikanan, Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல்பாதுப்புக் கட்டணம் மீளளிப்புச் செய்யப்படுகிறது

யாழ்ப்பாணம்,பெப்.21

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இவ் வருடத்திற்கான மோட்டார் வாகனவரி யுடன் செலுத்தப்பட்ட சூழல் பாதுகாப்புக் கட்டணம் பிரதேச செயலகத்தினால் சம்பந் தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வரு கின்றது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக் கம் நான்காம் திகதி வரை வாகன வரி செலுத்தியோருக்கே சூழல் பாதுகாப்புக் கட்டணம் மீள வழங்கப்பட்டுவருகின்றது.

இக் கட்டணத்தினை எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (1-207)


### அருள்முருகன் திருமண சேவை

Doctors, Engineers, Accountants மற்றும் தகுந்த மணமக்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்பெற் றோர் வர வேற்கப்படுகின்றனர். 03.யாழ்.வீதி, சிறாம் பியடிலேன், (ஆரிய குளம் சமீபமான லேன்) யாழ்ப்பாணம். T.P.:021222 9334

### மணமகள் தேவை

றோ.க. மதத்தைச் சேர்ந்த 1977ஆம் ஆண்டு அரச உத்தியோக்த்தருக்கு அழகான மண மகள் எதிர்பார்க்கப்படுகிறது. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.. தொ. இல: 0776341226
(95265)

### காணி விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு, வனிவில் ஒழுங்கை யில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0776112477
கண்ணன்.
(95845)

### சேவை

சகலவிதமான குளிரூட்டிகள் (A/C), குளிர் சாதனப் பெட்டிகள் (FRIDGE) ஒரு வருட உத்தரவாதத்துடன் வீடுகளில் வந்து திருத்தித் கொடுக்கப்படும்.
(95850) தொடர்பு: 0771341991

### பசு விற்பனைக்குண்டு

20 போத்தல் பால் கறக்கக்கூடிய ஒரு கிழமைக் குள் கன்று ஈனும் நிலையிலுள்ள பசு விற்பனைக் குண்டு. தொடர்பு: சி.றமேஸ்,
சண்டிலிப்பாய் வீதி, பெரியவிளான்,
இளவாலை.
(95269) தொ.பே.இல: 0772844417

### வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் வியாபார ஸ்தா பனத்திற்கு கணனி அறிவுள்ள Photo copy Leminating வேலை தெரிந்த பெண் தேவை. சுயவிவரங்களுடன் தகைமையுடையவர் விண்ணப்பிக்கலாம். அண்மையில் வசிப்ப வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

C/O 3983, 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(94905)

# இயற்கைக்கு மாறாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்வகைகளும் எங்களூர் விவசாயத்தில் அவற்றின் பொருத்தப்பாடும்

ஐம்பூதங்களின் இயக்கத்திலேயே இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. நிலம், நீர், காற்று,நெருப்பு,ஆகாயம் என்ற ஐந்து பூதங்களின் ஆளுமையிலேயே இப் பூவுலகம் உழன்று கொண்டிருக்கிறது என்றால் மிகையாகாது. இது தான் இயற்கை. இயற்கை என்றுமே இதமானதாகவே இருக்கும்.ஆனால் சினம்கொண்டு சீறிச்சினந்தால் ஐம்பூதங்களுமே கோரத்தாண்டவமாடும் காட்சியைக் காணலாம்.

நிலம் சீறிச்சினந்து பிளந்து



வெடித்துப் புல் பூண்டு கூட தப்பிப்பிழைக்காது வனாந்தரமாகி விடுகிறது. நீர் சீறிச் சினந்துதான் சுனாமியான கதையாயிற்றே. அதிலும் நிலத்திலுள்ள தட்டுக்கள் அசைந்ததால் நீரைக் கரையிலிருந்து உள்வாங்கிப் பின் பேரலையாக சீறியடித்திருக்கின்றதே. அதுவும் போதாதென்று நிலம் அதிரத்தொடங்கி நிலநடுக்கமாகி இலட்சக் கணக்கில் உயிர்களைக்காவு கொண்டுள்ளதே. அண்மையில் கெய்ட்டியில் திடிரென நிலம் நடுங்கி பல உயிர்களைக் காவு கொண்டமை இயற்கைத் தாண்டவத்தின் ஓரங்க நாடகமே.

காற்று சுழன்றடித்து கோரத்தாண்டவமாடியதை நிஷாப்புயலுடன் காணக்கூடியதாயிருந்தது. சில நேரங்களில் விசுவரூபமெடுத்து சூறாவளியாகியும் நெருப்பு மலையைப் பிளந்து எரிமலையாகி வெடித்து நெருப்பே குழம்பாகி நீரருவி போல ஓடி, இருந்த அனைத்தையும் எரித்தழித்தமையையும் காணலாம். இறுதியாக ஆகாயம் பொய்த்து வரட்டி எடுத்தமையும் மாறாக இடியாய் இடித்துப் பெய்து மழை வெள்ளமாகி ஆக்ரோஷமான தாண்டவமாகி இருப்பதும் இயற்கையின் சீற்றங்களல்லவா?

இயற்கையின் சீற்றத்திற்கு உள்ளாக வேண்டி வந்ததற்கான காரணங்களாக மனிதனது செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றன. இது காலம்காலமாக எதுகை மோனையுடன் கூறப்பட்டு வரும் கதையானாலும், இதனது உண்மைத்தன்மை இயற்கைக்கு எதிரானதாக அல்லது இயற்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதால் வருவதுமுண்டு. இவை எல்லாவற்றையும் மூட நம்பிக்கைகளென்றும் மனிதன் ஆளப்பிறந்தவனாகி, ஆக்கவும் அழிக்கவும் வல்லமை உடையவனாகவும் சித்தரிக்கப்படும் இக்காலத்துச் சம்பவங்களை உதாரணமாக்க முனைகின்றனர் விஞ்ஞானத்து விண்ணர்கள்.

பண்டைய காலத்து முறைமைகளையும் கோட்பாடுகளையும் புறந்தள்ளி விட்டு இப்போதுள்ள விஞ்ஞான உலகத்தினால் எதுவும் முடியும் என இறுமாப்புற்றிருக்கும் நிகழ்வுகளுக்கு உதாரணமாயிருக்கின்றது உயிர் தொழில் நுட்பத்தினை உள்வாங்கிய மரபணுமாற்றஞ் செய்யப்பட்ட பயிர்வகைகள். பிரச்சினை இங்கேதான் உள்வாங்கப்பட்டிருக்கிறது. நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் தொகுத்துப்பார்க்கலாம் வாருங்கள். ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இயற்கைக்கு மாறான தொழில்நுட்பங்களைச் சரி என்று வாதிடவோ ,அன்றி புதியவகை தொழில்நுட்பங்களைத் தவிர்த்து இயற்கை வழி ஒன்றை மட்டுமே கடைப்பிடிக்கவேண்டும் என்ற கருத்துக் குழிக்குள் சிறைபட்டிருக்கவேண்டும் என்றோ இக்கட்டுரை முயற்சிக்கவில்லை.இருபக்கமும் உள்ள வாதப்பிரதிவாதங்களையும், அவற்றினால் எதிர்நோக்கக்கூடிய சவால்களையும் அவசியம் ஏற்பட்டதால் அலசிப்பார்க்க முனைகின்றது. ஆனாலும் இயற்கையன்னையின் அரவணைப்பில் அனைத்தும் அடக்கம் என்று எடுத்தியம்பியுள்ள எம் முன்னோரது எக்காலமும் பொய்யாகாத வாக்குக்கு வலிமையுண்டு என்பதையும் இவ் அலசலில் பதிவுசெய்து கொண்டாக வேண்டியுள்ளது.

### பசுமைப்புரட்சிக்காக ஏங்கிய உணவு உற்பத்தி

பசுமைப் புரட்சியின் வரலாற்றுத் தடயங்களை மீண்டுமொரு தடவை மீட்டுப் பார்த்தால், அதனுள்ளே அடங்கிப் போன பல உண்மைகள் வெளித்தெரியும். மனிதகுல தோற்றத்தின் ஆரம்ப காலங்களில் ஆங்காங்கே இருந்த தாவர வகைகளுள் சிறந்தவை எனத் தெரிவு செய்து அவற்றை உழுத நிலத்தினுள் விதையாக விதைத்து நீர் விட்டு அறுவடையும் செய்து ஆரம்பித்த பயிர்ச்செய்கை, பின்னர் உற்பத்தியினளவு போதாதென்று கூக்குரலிட்ட பின்னர் அதனைப் பசுமைக்கான புரட்சியென்ற வீரமுழக்கத்தினுள் உள்ளீடுகளை முழுக்க முழுக்க நம்பிய விவசாயச் செய்கையாகப் பரிணாமமடைந்தது. வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள ஒவ்வொரு விவசாயியினதும் நிலப்பரப்பினளவு மிகமிகப் பெரியது. அதனால் எந்தவொரு தொழில் நுட்பத்தினையும் சிறப்பாகத் தமது விளைநிலங்களில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். ஆனால் எமது நாடு இன்னமும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. இங்குள்ள விவசாயிகளின் சொத்துக்களாக சிறிய விளைநிலங்களே உள்ளன. சொத்துப்பிரிப்பு பாரம்பரியத்தினுள் சிக்கியுழலும் எம்மவர்களால் சிறிய நிலப்பரப்பிலேயே பயிர்செய்ய வேண்டியுள்ள நிர்ப்பந்தம். இதனால் எந்தவொரு சிறந்த தொழில் நுட்பமாயினுஞ்சரி அதனது சிறப்பை இலகுவில் எடுத்துச் சொல்ல முடிவதில்லை.

உணவுற்பத்தியை விரைந்து பெருக்க வளர்ந்த நாடுகளால் இலகுவில் முடிந்தது போல வளர்ந்து வரும் நாடுகளால் முடிவதில்லை. எது எவ்வாறாயினும், அவ்வப்போது பீடைகளின் பெருக்கத்தையும் உள்வாங்க, வளர்ந்து வரும் நாடுகள் தயாராகவே இருக்கின்றன. உணவுற்பத்தியை விரைந்து அதிகரிக்க பசுமைப் புரட்சி என்னும் ஆயுதம் தேவைப்படவே செய்தது. பசுமைப்புரட்சி என்பது பற்றி விளக்கமில்லாதுவிடினும், அதனைப் பயன்படுத்துவதில் எம் போன்ற வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகள் பின்நின்றதில்லை. விஞ்ஞானத்தின் கால்களை அச்சாணியாக்கி அடுக்கடுக்காகச் செய்த ஆய்வுகளின் பயனாக புதிய திருத்திய கலப்பினப்பாக்கம் செய்யப்பட்ட பயிர்கள் எமக்கு கிடைத்தன. ஆனால் அவற்றுக்காக அதிகளவில் உள்ளீடுகளைப் பயன்படுத்த வேண்டிய தேவையாயிற்று. பசுமைப் புரட்சியின் மூலம் கிடைத்த திருந்திய பயிர் இனங்களை நிறையவே நாம் பயன்படுத்தினோம். உள்ளூர் இனங்களுடன் போட்டி போட்டு புதியதிருந்திய இனங்கள், என்று எமது விவசாய வாழ்க்கைக்குள் உட்புகுந்தனவோ அன்றிலிருந்து பிரச்சினைகளும் புதிது புதிதாக உருவெடுக்கத் தொடங்கிவிட்டன.

### புதிய திருந்திய கலப்பினப்பாக்கம் செய்யப்பட்ட பயிர் இனங்களின் ஆதிக்கம்

1960ஆம் ஆண்டுக்குப் பின்பு திருந்திய கலப்பினப்பாக்கம் செய்து உருவாக்கப்பட்ட பயிர் இனங்களைப் பயிர்செய்யும் நிலப்பரப்பு அதிகரித்தது. பயிர்செய்யும் நிலப்பரப்பின் விஸ்தீரணத்தை அதிகரிக்க அதிகரிக்க அதற்குப் பயன்படுத்த வேண்டிய உள்ளீடுகளின் அளவும் அதிகரித்தது. வெளிநாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட உள்ளீடுகளில் முதன்மையான அசேதன இரசாயனப் பசளைகள் அதிகளவில் இங்கே பயன்படுத்தப்பட்டன. வழமைக்கு மாறாக சிபார்சு செய்யப்பட்ட அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட பசளைகளுள் பயிர்களால் அப்போதைக்கு [illegible]வை போக மீதமானவை நீருடன் கரைந்து நீர்நிலைகளை அடைந்து செறிவாக்கம் பெற்றுவிட்டன. இதன் பிரதிபலனாக 65 சதவீதமான எமது குடிதண்ணீக் கிணறுகளில் (திருநெல்வேலி மற்றும் கோண்டாவில் பகுதிகளில்) நைதரேற்று நைதரசனின் அளவு உலக சுகாதார நிறுவனம் குறித்துக் காட்டிய எல்லையான லீற்றருக்கு 10 மில்லிகிராம் என்ற அளவைத் தாண்டி மேலே சுட்டிநிற்கின்றது. இங்கு நீர் நஞ்சாக்கப்பட்டிருப்பதை அவதானியுங்கள். விஞ்ஞானத்தின் புது அறிமுகங்களை விரைந்து பின்பற்றியதன் விளைவு இது. இங்கே விஞ்ஞானத் தொழில்நுட்பத்தினைச் சரிவரப் பின்பற்றாமையே காரணம் எனவும் அது தொழில்நுட்பத்தினது தவறு அல்ல எனவும் புரிந்து கொள்ளலாம்.

திருந்திய பயிர் இனங்கள் விளைச்சலை அதிகரித்துக் காட்டினாலும் பீடைகளுக்கு எதிர்த்தன்மையை இழந்தும் நலிவடைந்தும் காணப்பட்டன. இதனால் பீடைகளினால் ஏற்படும் பயிரிழப்பைத் தடுக்க பீடை நாசினிகளை ஒன்றன்பின் ஒன்றாக உருவாக்கிப் பயன்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டன. அதிலும் இவற்றை வளர்ந்துவரும் நாடுகளே அதிகமாகப் பயன்படுத்தின. அங்கு உற்பத்தியாக்கப்பட்டு இங்கே நிறையவே பயன்படுத்தப்பட்டன. அதன் பிரதிபலனை இப்போது நாமெல்லோரும் எமது விளைபொருள்களிலே நஞ்சை நிறுத்து அனுபவிக்கின்றோமல்லவா?

உணவுற்பத்தி, பசுமைப்புரட்சிக்காக ஏங்கி அதன் மூலம் அதிகளவில் உற்பத்திசெய்ய முடிந்தது, விஞ்ஞான தொழில்நுட்பத்துக்கு - அதன் அணுகுமுறைகளுக்குக் கிடைத்த வெற்றி எனலாம். சந்தேகமேயில்லை. நடந்தது அனைத்தும் உண்மை. ஆனால் இங்கும் பயன்படுத்தப்பட்டது தவறாக இருந்ததனால் பிரச்சினைகள் எழுந்தன. இன்று வரை பீடைகளை இரசாயன பீடைநாசினிகளைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்த முடியாது திக்கமுக்காடுவது ஒருபுறமிருக்க, அதிகரித்த பீடைநாசினிப் பிரயோகத்தினாலும், அவற்றினால் சூழல் மாசுபட்டதையும் எம்மால் இன்றுவரை தவிர்க்கவே முடியவில்லை. இதனையும் புதிய தொழில் நூட்பத்தின் தவறாக இல்லாது பயன்படுத்தப்பட்ட விதத்தினது தவறாகவே கணிப்பிடமுடியும்.

பசுமைப் புரட்சியின் தொடர்ச்சியாக பரம்பரையலகுப் புரட்சி அமைந்திருக் கிறது. இதில் நடைபெற்ற நிகழ்வுகள் பற்றி இன்னும் விரி வாகப் பார்ப்போம். (வளரும்)




-கலாநிதி: கு.மிகுந்தன்-
*தலைவர், விவசாய உயிரியற்றுறை, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.*

## விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களும் எதிர்கொள்ளும் சவால்களும் 1

## அளவுக்கு அதிகமாக உள்ளீடுகளைப் பயன்படுத்தி நமக்கு நாமே பாதிப்புக்களைத் தேடிக் கொண்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 101



அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. (காலக்)கெடு
5. பாவம் செய்தவன்.
7. தாண்டி
8. சமுத்திரம்/ சாகரம்.
9. தடுமாறல்/ கொன்னையாகப் பேசுதல்.
11. அரைவாசி.
12. கறுப்பு நிறத் தன்மையைக் குறிப்பது.
14. வாணிபம்/ வர்த்தகம்.
16. ஒரு கீரை வகை.
19. கணவன் -மனைவி.
21. ரஜினியின் ஒரு திரைப்படம்.
23. சந்திரன்
24. தலையில் தொல்லை தருவது.

### மேலிருந்து கீழ்

1. நான் எனும் செருக்கு.
2. ஒரு திசையின் சுருக்கம்.
3. இந்தியாவின் தேசத் தந்தை.
4. நான்கு தெருக்கள் கூடும் இடம்.
5. கவிதை/ பாடப்படுவது.
6. முற்கால போராயுதம்.
8. பலதும் கலந்து வருவது/ கூட்டம்/ மாலை.
10. சிஷ்யனுக்குத் தலைவர்.
13. வெளிச்சம் தருவது.
15. சீனி தயாரிக்கப் பயன்படும் தாவரம்.
17. உணவுக் கால்வாயில் நடப்பது.
18. பாய்
19. மறைவில் அடிப்பது/ தங்களது.
20. ஒன்றுக்காக உயிர் கொடுப்பது.
22. திண்மத்துக்கும் திரவத்துக்கும் இடைப்பட்ட கழிநிலை

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 101**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 03.03.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.101 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 07.03.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 99 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) உத்தியோகம் (6)ரகளை (7)அதி (8)படிவம் (9) படலை (10) பாலம் (11) கைது (13)அவை (14)பகு (16) வாதம் (18)இன்றி (19)பரப்புதல் (21)சிம்பு (22) விலைவாசி

**மேலிருந்து கீழ்**
(1)உப்பரிகை (2) திரவம் (3)யோகம் (4) களை (5) மிதிலை (7) அடம்பன் (9)பல (10) பாவை (12) துவாரம் (15)குறிஞ்சி (17) தப்பு (18)இல்லை (19) பசி (20)தவி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 99 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **பூ.கோபிகிருஷ்ணா,** ஐயா கடையடி, மிசாலை.

2 ஆம் பரிசு — **பி.யசோதாஷாளினி** அருளகம் பெண்கள் இல்லம், மருதனார் மடம், சுன்னாகம்.

3 ஆம் பரிசு — **த.குணராசன்,** தும்பளை, பருத்தித்துறை.

4 ஆம் பரிசு — **ச.குலவேணி** துர்க்காபுரம், தெல்லிப்பழை.

5 ஆம் பரிசு — **அமலா அகிலேந்திரா,** சந்நிதி கோயில் தொண்டமானாறு.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **ஆ.விதுசன்,** இல: 28, கைலாச பிள்ளையார் கோயில் வீதி, நல்லூர்.

(2) **எட்வேட் மாசில்லா,** நல்லாயன் வீதி, இளவாலை.

(3) **நல்லையா சாந்தகுமார்,** பிள்ளையார் வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# சிறை....

*(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

மீண்டும் விமலாவின் குரல் ஆட்டுக்கல்லின் இரைச்சலோடு சேர்ந்து ஒலித்தது.

'இஞ்சேருங்கோ, நல்ல பிள்ளை..... ஒருக்கால் சங்கத்துக்குப் போட்டு வாங்கோ. இந்தக் கிழமையான், கூப்பன் சாமான் இன்னும் எடுக்கேலை.'

'குழந்தை?'

குழந்தையை உவள் ராணீட்டைக் குடுத்திட்டுப் போங்கோ. ராணீ..............!'

'என்னம்மா?' என்று கேட்டுக்கொண்டே இரண்டாவது மகள் ராணி வந்தாள். விமலா உழுந்தரைப்பதைச் சிறிது நிறுத்திவிட்டு, 'ராணி அப்பா சங்கக் கடைக்குப் போட்டு வரட்டும். குழந்தையைத் தூக்கி வைச்சிருந்து பிராக்காட்டு' என்றாள்.

ராணி 'எனக்கேலாது' என்று ஓடிவிடப் பார்த்தாள்.

விமலாவுக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. 'குழந்தையைப் பாக்கேலாது. அங்கையென்ன நாவற் பழம் பொறுக்கப் போறனியே?

சனியன். குழந்தையை அப்பாட்டை வாங்கிப் பிராக்காட்டிக் கொண்டிரு!'

ராணி பயத்தில் குழந்தையைத் தந்தையிடம் வாங்கிக் கொண்டாள். 'அங்காலை படியிலை வைச்சிருந்து ஓராட்டு' என்ற தாயின் கட்டளைக் கேற்ப சமயலறை வாசற்புறப் படியிலிருந்து குழந்தையைத் தாலாட்டினாள் மூன்றாம் வகுப்புப் படிக்கும் ராணி.

அறைக்குப் போய் சேட்டையும் வேட்டியையும் மாற்றிக்கொண்டு வந்த பேரின்பநாதன், அலுமாரிக்குள்ளிருந்து கூப்பன் புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு, சமையலறையில் மாட்டியிருந்த சாக்குப் பையுடன் கிளம்புவதற்குத் தயாரானான்.

'கூப்பனை எடுத்துக் கொண்டு ஒரு றாத்தல் சீனியும், துவரம் பருப்பும் இருந்தா...... நல்லதாய் ஒருறாத்தல் துவரம் பருப்பும், பெருஞ் சீரகம்.... ஒரு..... காறாத்தலும், மிளகும் ஒரு காறாத்தல், மற்றது வெந்தயம், வெள்ளைப்பூடு --இதுகளையும் பாத்து வாங்குங்கோவன். அதோடை ஒரு பேபி சோப்பும் வாங்கிக் கொண்டு வாங்கோ. குழந்தைக்கு வேணும்.'

இத்தனையையும் மனப்பாடமாக்கிக் கொண்டு பேரின்பநாதன் கடைக்குப் புறப்பட்டான். புறப்பட்ட அவன், 'இஞ்சருங்கோ!' என்று மனைவியின் குரல் கேட்டுத் திரும்பினான். 'போட்டு வரேக்குள்ளை சின்னத் தம்பியற்றை காருக்கும் ஒருக்கா சொல்லிவிடுங்கோ. குழந்தை அடிக்கடி சத்தியெடுக்குது. ஒருக்கால் இலுப்பையடிக்காவது கொண்டுபோய் நாளைக்குக் காட்டுவம்' என்றாள் விமலா. அவளது கருத்துக்கு 'ஆமா'ப் போட்டுவிட்டு நடந்து சென்றான் பேரின்பநாதன்.

சென்ற வேலைகளையெல்லாம் முடித்து விட்டு திரும்பிக் கொண்டிருக்கும் போது பேரின்பநாதனின் உள்ளம் தனக்கேயுரித்தான எழுத்தாளப் பாணியில் சிந்திக்கத் தொடங்கியது.

பதினைந்து வயது முதல் எழுத்தாளனாகச் சிறுகச் சிறுகத் தன்னை ஆக்கிக் கொண்ட பேரின்பநாதன் பத்தொன்பது இருபது வயதுகளில் எழுத்துலகிற் பிரபல்யம் பெற்றுத் தனக்கென ஒரு தனியிடம் பெற்றுப் பலராலும் புகழப்பட்டது அவன் நினைவுத் திரையில் பளிச்சிட்டது. பின்னர் மென்மேலும் முன்னேறி இலங்கையின் பிரபலமான பத்திரிகைகளிலெல்லாம் தனது எழுத்தோவியங்களைக் கண்டு மகிழ்ந்த நாள்கள் அவன் நினைவில் வந்து இதயத்தை என்னவோ செய்தன. தான் பங்கு பற்றிப்பேசிய விழாக்கள், தனக்கு அவற்றால் ஏற்பட்ட கௌரவம் எல்லாம் சிந்தனையில் சுழன்று வந்து கொண்டிருந்தன. தனது எழுத்தாள நண்பர்களை நினைத்த போது, அவன் நெஞ்சம் வேதனையால் இடியிடித்தது. தான் எழுதியவற்றில் ஒன்றையாவது எதிர்காலத்தில் புத்தக உருவிற் பார்க்க வேண்டும் என்ற அவனது ஆசை நிராசையாகப் போனது பற்றிய துயரம், அவன் கையிலிருந்த சாக்கிலுள்ள கூப்பன் அரிசி கனப்பதுபோல, இதயத்திற் கனத்தது.

பேரின்பநாதன் வரும் போது விமலா அடுப்பை ஊது குழலால் ஊதிவிட்டு, இடியப்பம் பிழிவதற்கு மாவைக் குழைத்துக்கொண்டிருந்தாள். பேரின்பநாதனைக் கண்டதும், அந்த வேலையை அப்படியே விட்டுவிட்டு, கொண்டு வந்த சாமான்களைச் சரிபார்க்கும் வேலையில் ஈடுபட்டாள்.

'ம்....எல்லாஞ் சரி. அட டட... நீங்கள் பேபி சோப்பை வாங்காமல் வந்திட்டியளே! குழந்தைக்குக் குளிக்க வாக்கிறதுக்கு இல்லையே!'

'நானும் மறந்துபோனன். அ...இப்ப என்னத்துக்கு? நாளைக்கு வாங்கலாந்தானே?'

'சரி..... நாளைக்கு மறந்திடாமல் வாங்கிப் போடுங்கோ. அது சரி காருக்குச் சொன்னனீங்களோ?'

'ஓ.....சொல்லியிருக்கிறன். நீர் போய்க் காட்டிக்கொண்டு வருவீர் தானே? அங்கை டி.ஆர்.ஓ. கந்தோரிலை லீவே இப்ப தாறாங்களில்லை. நானும் முந்தி அடிக்கடி எடுத்துப் போட்டன்.''

'எண்டாலும், ஒரு ஆம்பிளைத் துணையில்லாமல் என்னண்டு போறது?' விமலா சிணுங்கினாள்.

'என்ன காரிலை போட்டு வாறதுதானே? அந்தக் கார்க்காரன் நல்ல மனுஷன். எல்லா உதவியும் செய்து தரும்.'

விமலா இதற்கு மேலே பேசவில்லை. பேரின்பநாதன் கொண்டு வந்த சாக்கைச் சமையலறையின் ஒருபுறத்தில் வைத்துவிட்டு, ஒருமுறை சென்று அடுப்பையும் ஊதிவிட்டு, மீண்டும் மாக்குழைக்கும் வேலையில் ஈடுபடத் தொடங்கினாள்.

பேரின்பநாதன் சிறிதுநேரம் தான் வளர்த்துவரும் ஆட்டுக் குட்டிக்குக் குழையொடித்துப் போடும் பணியில் ஈடுபட்டான். இதற்குள் இருண்டுவிட்டது. பின்னர், கிணற்றடிக்குச் சென்று 'கால்முகம்' கழுவிவிட்டு, சுவாமியறையில் விபூதி பூசி, ஒருதேவாரத்தையும், புராணத்தையும் முணுமுணுத்துவிட்டு, ஒப்பிஸ் ரூமுக்குள் நுழைந்தான்.

அந்த அறைக்குட் சென்றதும், மாலையில் கடைக்குச் சென்று திரும்பும் போது ஏற்பட்ட சிந்தனையின் விட்டகுறை, தொட்டகுறை மீண்டும் தொடர்ந்தது.

அவனது கண்கள் அந்த அறையிலிருந்த மேசையின் மீது படிந்தன. அங்கிருந்த ஏராளமான புத்தகங்கள், சஞ்சிகைகள் அவன் இரசனையின் தன்மை மாறிவிட்டமையை எண்ணிச் சிரிப்பது போன்ற பிரம்மை அவனுக்கு. அவன் எழுதிய எழுத்தோவியங்கள் வந்த பத்திரிகைகள் தேடுவாரற்று அநாதைகளாகக் கிடந்து அழுவதைப் போன்று இருந்தன. இப்போது தான் எழுத முடியாவிட்டாலும், முன்பு எழுதியவற்றையாவது திரும்ப வாசித்துப் பார்க்கலாமென்றால், அதற்குக் கூடத் தனக்கு நேரமில்லாதிருப்பதை எண்ணியெண்ணி அவன் உள்ளம் வேதனையடைந்தது. பல வாசகர்கள் தனக்கெழுதிய கடிதங்கள் வைக்கப்பட்டிருந்த பைல் கட்டு ஒன்று அவனை ஏக்கத்துடன் நோக்கிக் கொண்டிருந்தது.........

இவற்றையெல்லாம் நோக்கிய பொழுது தான் படைத்த சோகபாத்திரங்கள் விடும் கண்ணீர் போல அவன் கண்களும் ஓரிரு சொட்டுக் கண்ணீர்த் துளிகளை மேசையின் மீது சிதறிக்கிடந்த கடதாசிகளின் மீது சொரிந்தன. குடும்பச் சுமை தனது இலக்கிய தாகத்திற்கு அணைபோட்டு விட்டமையை எண்ணியபோது உலகத்தின் மீது அவனுக்கு ஆத்திரம்ஆத்திரமாக வந்தது. நெஞ்சம் வெம்பி, தன் பழைய இலக்கியக் காதலை இரைமீட்டபடி, தான் பெற்ற இலக்கியச் செல்வங்களையே இமைகொட்டுவது தெரியாமல் பார்த்துக் கொண்டு நின்றான், மாஜி எழுத்தாளன் பேரின்பநாதன்.

'இஞ்சேருங்கோ, இவன் சந்திரனின்ரை கணக்கையாம் ஒருக்காச் சொல்லிக் குடுங்கோ. இஞ்சை குசினிக்கிள்ளை வந்து பெரிய ஆக்கினை.'

'சமையற் கூடத்திலிருந்து 'ஓபீஸ் ரூமை'த் தேடிவந்த மனைவியின் குரல், பழைய 'காதல்' உலகத்திலிருந்து நிஜ உலகத்திற்கு அவனை இழுத்தது.

குடும்பம் என்ற சிறைக்குள் அகப்பட்டுத் தவித்த முன்னாள் எழுத்தாளன் பேரின்பநாதன் இயந்திரம் போல இயங்கத் தொடங்கியவனாய், அந்த அறையைவிட்டு வெளியே வந்தான்.

'டேய் சந்திரன். கணக்குப் புத்தகத்தையும், கொப்பியையும் இஞ்சை கொண்டு வா!'

**********************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆங்கிலத்தில்:
'றுத்யாட் கிப்லிங்'
தமிழில்: ரம்யன்

"வாயை மூடு - நீ மனிதப் பிள்ளை" என்ற சிலரும் "இல்லை அவன் பேசட்டும் எமதுகட்டளைகளை பின்பற்றி வருகிறான்" என்று சிலருமாக கத்தினார்கள். இறுதியில் வயதான ஓநாய்கள் ஏகமனதாக முன்னால் தலைவரைப் பேசவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள்.

அகீலா மெதுவாகத் தலையைத் தூக்கி பின்வருமாறு கூறினார். "சுதந்திரக் கூட்டத்திலரே பன்னிரண்டு பருவங்களாக நான் உங்களுக்குத் தலைமை வகித்திருக்கிறேன். வேட்டையாடுவதற்கு உங்களை நடத்தியிருக்கிறேன். இறுதியில் நான் தோல்வியுற்றேன். நான் தோல்வியுறும் படியாக சதிசெய்யப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆக இந்தப் பாறையில் வைத்தே என்னைக் கொன்று விடவேண்டியது உங்கள் உரிமையாகின்றது. எனவே என்னைக் கொல்லவருபவர்கள் கூட்டங்கூட்டமாக வர வேண்டாம். ஒவ்வொருவராக வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இது என் உரிமை."

அங்கு நீண்ட நேரம் அமைதி



நிலவியது எந்த ஒரு ஓநாய்க்கும் அகீலாவுடன் போராடி அவரைக் கொல்வதற்கு துணிவு வரவில்லை. இறுதியில் ஷேர்கான் தான் பேசினார்.

இந்தப் பல்லில்லாத கிழட்டுப் பயலுடன் எமக்கு என்ன பேச்சு வேண்டியிருக்கிறது. அவன் சாக வேண்டியவன். ஆனால் இந்த மனிதப் பிள்ளை தான் நீண்டகாலம் இங்கு இருந்து விட்டான். முதலில் அவன் எனக்குரியவன். அவனை எனக்குத் தந்துவிடுங்கள். பத்துப் பருவங்களாக அவன் இந்தக் காட்டைக் குழப்பிக்கொண்டு வந்திருக்கிறான். அவனைத் தந்து விடுங்கள். இல்லையென்றால் இந்தப் பகுதியிலேயே தங்கிவிடுவேன். உங்களுக்கு ஒரு மான் எலும்பு கூட கிடைக்காமல் செய்துவிடுவேன். அவன் ஒரு மனிதன். மனிதப் பிள்ளை. அவனை முற்று முழுதாக வெறுக்கிறேன்" என்றார்.

(வளரும்)




## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -52

01. 17 ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி எங்கு? எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?
02. புளுட்டோக் கிரகத்தைக் கண்டுபிடித்தவர் யார்?
03. ஐ.நா.சபை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
04. உலகில் சுதந்திரதினம் கொண்டாடாத நாடு எது?
05 'ஒலிவ்' இலைகள் எதற்கான குறியீடாகக் கொள்ளப்படுகின்றது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 02.03.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா? - 50** சரியான விடைகள்

01. ரோஜர் பெடரர்.
02. செரீனா வில்லியம்ஸ்.
03. செரீனா வில்லியம்ஸ் - வீனஸ்வில்லியம்ஸ்.
04. பொப்பிரையன் - மைக்பிரையன்.
05. லியன்டர் பயஸ் - கராபிளாக்.

### பரிசு பெறுவோர்

01. உ.சனாதனன், தரம்-3 A, யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
02. உ.துளசிகா, தரம்-9 A, கொக்குவில் இந்துக் கல்லூரி.
03. உ.சாம்பவி, தரம்-6E, கொக்குவில் இந்துக் கல்லூரி.
04. ரா.உஷாந்தினி, தரம்-7 M, புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி.
05. கு.விமலேசன், தரம்-10 A, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.



# சகோதர அன்புடன் வாழ்வோம்

ஓர் ஊரில் சகோதரர்கள் இருவர் வாழ்ந்தார்கள். இவர்கள் இருவரும் மிகவும் ஒற்றுமையுடையவர்கள். அண்ணனான ரமணன் திருமணம் புரிந்தவன். அவன் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான். தம்பியான சஞ்ஜீவன் திருமணம் ஆகாதவன். அவன் எப்போதும் அண்ணனான ரமணனுக்கு உதவி புரிந்து வந்தான்.

அவர்கள் இருவருக்கும் விளைச்சலைச் சேமித்து வைப்பதற்கு இரண்டு பெரிய களஞ்சியசாலைகள் இருந்தன. அதில் தங்களுக்குச் சொந்தமான தானியங்களைச் சேமித்து வைத்திருந்தார்கள். அவர்கள் இருவர்களுக்கும் அபூர்வமான பழக்கம் ஒன்று இருந்தது. தம்பியான சஞ்ஜீவன் தனியாக இருப்பதனால் அவனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அண்ணனான ரமணன் எந்நேரமும் நினைப்பான். சில நேரங்களில் தம்பியான சஞ்ஜீவனுக்குத் தெரியாமல் அண்ணனான ரமணன் தனது களஞ்சியசாலையில் இருந்து தானிய மூட்டை சிலவற்றை தோளில் சுமந்துவந்து தம்பியின் களஞ்சியசாலையில் வைப்பான். தம்பியான சஞ்ஜீவனும் சில நேரங்களில் அண்ணன் ரமணனுக்குத் தெரியாமல் தனது களஞ்சியசாலையில் இருந்து சில தானிய மூட்டைகளைத் தோளில் சுமந்தவாறு அண்ணனின் களஞ்சியசாலையில் அண்ணனுக்குத் தெரியாமல் வைப்பான்.

இப்படியாகத் தானியம் மாறும்போது ஒருநாள் இரவு இருவரும் இருட்டில் தானிய மூட்டையுடன் மோதிக்கொண்டனர். இருவருக்கும் பேசமுடியாமல் போய்விட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் ஆனந்தக் கண்ணீருடன் முத்தமிட்டுக் கட்டியணைத்துக் கொண்டனர்.

**போசேப் ரமணியா**, தரம்- 8,
நாராந்தனை றோமன், கத்தோலிக்க மகா வித்தியாலயம்.








**ஆ.சிவருகுந்தினி**, தரம் - 9 E,
யா/ இந்து மகளிர் கல்லூரி.




**ந.நிலக்ஷைன்**, தரம் - 4 B,
யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தி.



**கிருஸ்டி சாருஜன்**, தரம் - 3,
யா/ உடுவில் மகளிர் கல்லூரி.




**தி. விஷ்ணவன்**, தரம் - 4 A,
யா/ இணுவில் மத்திய கல்லூரி.



**தி.லக்ஷா**, தரம் -7,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாட.



**செ.பிரசாந்**, தரம் -8A,
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.



**கு.பெல்சிகா**, தரம் -7C,
யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலம்.



**செ.சங்கவி**, தரம் -2E,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.




**(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)**

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங் கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர்:-.......................................................
தரம் :-.......................................................
பாடசாலை :-.......................................................
.......................................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.......................... ..........................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...... இராசிபலன்

## பெப்ரவரி 21 முதல் 27 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

இந்த வாரம் ஆதாயமான பணவரவுகளைப் பெறலாம். ஆசைப் பட்ட பொருள்களை வாங்குவீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பாராத செலவுகளை, அலைச்சல்களைச் சந்திக்கலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். தொழில் ரீதியாக சிலருக்கு உதவலாம். லாப ஸ்தானத்தில் இருக்கும் குருவால், வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் உருவாகலாம். சேமித்த பணம் மட்டுமின்றி, மற்றவர்களின் பணமும் உங்களின் கைகளில் புரளலாம். பிள்ளைகள் உங்களின் பெருமையை மேம்படுத்தும் வகையில் நடந்து கொள்வர். அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பீர்கள். சுக்கிரன், புதன், சூரியனும் சாதகமாக இருப்பதால், அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், உறவுப் பெண்கள், சகோதரிகள், இதர பெண்கள் வழியில் உதவிகள் கிடைப்பதோடு, அவர்களின் சந்திப்பால் சந்தோஷமும் அடைவீர்கள். கேளிக்கை, கொண்டாட்டங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். அரசியல்வாதிகளைச் சந்தித்து காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இருந்தாலும், உடன் பிறப்புக்கள் விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நல்லது. தேக ஆரோக்கியத்திலும் கவனம் அவசியம். தொழில் ரீதியாக வேலைப்பளு கூடும்.

### இடபம்

இந்த வாரம் திட்டமிட்ட காரியங்களை எப்பாடுபட்டாவது முடிப்பீர்கள். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். கைமாத்தாக, கடனாகக் கொடுத்த பணம் திரும்ப வரலாம். நல்ல செய்தி கேட்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். உறவினர்கள் சந்திப்பாலும், சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலமும் சந்தோஷம் அடைவீர்கள். பத்தாம் இடத்தில் குரு இருப்பதால், எந்த வேலையைச் செய்தாலும் அதன் மூலம் மேலதிகாரிகளையோ, மற்றவர்களையோ திருப்திபடுத்த முடியாது. சிலர் ஏதாவது குற்றம், குறை சொல்லி, உங்களின் கோபம், வேகத்தை தூண்டலாம். எதிர்பாராத செலவுகளாலும், அடிக்கடி பணப் பற்றாக்குறை ஏற்பட்டு, பிறரிடம் கைமாத்து வாங்கும் சூழ் நிலை உருவாகலாம். மற்றவர்கள் பேச்சை நம்ப எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். சுக்கிரனும், புதனும் சாதகமற்ற நிலையில் இருப்பதால், பெண்கள், சகோதரிகள், உறவுப் பெண்கள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான தொல்லைகள், சிரமங்கள், வீண் அலைக்கழிப்புகள், அதிருப்தி போன்றவற்றை எதிர்கொள்ளலாம். வாகனங்களும் கணிசமாக செலவு வைத்து உங்களின் கைப்பணத்தை கரைக்கலாம். பெண்கள் குடும்ப பெரியவர்களையும், கணவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. இருந்தாலும், மூன்றாம் இடத்தில் இருக்கும் செவ்வாய், உங்களை உற்சாகமாகச் செயற்பட வைப்பார். அசட்டுத் துணிச்சலுடன் சில காரியங்களில் இறங்கி சாதிப்பீர்கள். ஒருவருக்குக் கடனாக கொடுத்த பணம் திடீரென திரும்ப வரலாம்.

### மிதுனம்

இந்த வாரம் கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத சிலரை சந்திக்கலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். மருத்துவச் செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. குழப்பங்கள் இல்லாமல், எதிலும் தீர்க்கவும், தைரியமாகவும் செயற்படுவீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். கடன் மிகுதிகள், கட்டண பாக்கிகளை செலுத்துவீர்கள். நான்காம் இடத்தில் அமர்ந்திருக்கும் சனியால், வேலை நெருக்கடி, திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதம் போன்றவற்றை சந்தித்தாலும், ஒன்பதாம் இடத்தில் குரு உங்களுக்கு பல வகையிலும் உதவிகரமாக இருப்பார். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்றல், விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் அடைவீர்கள். சேமித்த பணத்தை எடுத்து, சில காரியங்களுக்காக செலவிடலாம். அல்லது புதிதாகச் சேமிப்புத் திட்டங்களில் சேரலாம். கடன் பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் பலன் கிடைக்கும். எட்டாம் இடத்தில் புதன் இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பு, அவர்கள் மூலம் கிடைக்கும் உதவியால் சந்தோஷம் அடைவீர்கள். அவர்களுக்காக நீங்கள் சில நல்ல காரியங்களையும் செய்யலாம். தொழில் ரீதியாகவோ, மற்ற வகையிலோ எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். கமிஷன் , முகவர் தொழில் புரிவோருக்கு வருமானம் அதிகரிக்கும். குதர்க்கமாகப் பேசுவதையும், மற்றவர்களை விமர்சிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

### கடகம்

இந்த வாரம் மந்தம், மறதி, கவனக்குறைவு, வீண் அலைச்சல், வாக்குவாதம், பேராசையால் நஷ்டம், காரியத்தடை, பயணத்தடை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றத்தை சந்திக்கலாம். சுபகாரிய நிகழ்ச்சிகள், விருந்து, விசேஷங்களில் பங்கேற்பதன் மூலம் மகிழ்ச்சி, சந்தோஷம் அடையலாம். ஆலய வழிபாடுகளுக்காகச் சிலர் வெளியூர் பயணம் செல்லலாம். அஷ்டமத்தில் சூரியன் இருப்பதால், தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளை நம்ப இறங்கிய காரியங்கள் முடிவடையாமல் இழுத்தடிக்கலாம். மருத்துவம் தொடர்பான வகையில் செலவு, அலைச்சல் ஏற்படலாம். எந்த விடயத்திலும் முந்திக் கொண்டு செயற்படாமல், நிதானமாக செயற்படுவது நல்லது. சுக்கிரன் சாதகமாக இருப்பதால், பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், கேளிக்கை கொண்டாட்டங்கள் போன்றவற்றால் அவ்வவ் போது சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். சகோதரிகள் வருகையாலும், அவர்களுக்கு தேவையானதை செய்யவும், கணிசமாகச் செலவு செய்யலாம். அஷ்டமத்தில் குரு இருந்தாலும், அவர் இரண்டாம் வீட்டைப் பார்ப்பதால், பணப் பற்றாக்குறையை எந்த வகையிலாவது சமாளித்துக் கொள்வீர்கள். ஆறாம் இடத்தில் ராகு இருப்பதால், மாற்று மதத்தினர் உதவி கிடைக்கும். நீண்ட நாள்களாகச் செல்ல நினைத்த இடங்களுக்கு செல்லலாம்.

### சிங்கம்

இந்த வாரம் பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். பிரியமான உறவினர் கள், நண்பர்கள் சந்திப்பு நிகழும். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம். சந்திராஷ்டமம் என்பதால், சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். சிறிய வேலைக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். தண்டச் செலவு நேரும். விரய ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் வகையில் செலவுகள், சிரமங்கள் ஏற்படலாம். அவர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். நிலம், பூமி தொடர்பான விடயங்களும் திருப்திகரமாக இருக்காது. பொலிஸ் விடயங்களில் உஷாராக இருப்பது நல்லது. ஏழில் சுக்கிரன், சூரியன் இருப்பதால், பெண்கள், சகோதரிகள், பொழுது போக்கு விடயங்கள், வாகனங்கள் பராமரிப்பு போன்றவற்றுக்காகவும், மருத்துவ காரியங்களுக்காகவும் கணிசமாகச் செலவிடலாம். வீண் அலைச்சல் களாலும், அவ்வப்போது வெறுப்பு, விரக்தி ஆட்கொள்ளும். குரு சாதகமான நிலையில் இருப்பதால், வீட்டில் வசதி வாய்ப்பு அதிகரிப்பீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகமாகச் செயற்பட வைக்கும். திருமண முயற்சிகளில் முன்னேற்றம் காணலாம். வாக்கு ஸ்தானத்தில் சனி இருப்பதால், எந்த விடயத்திலும் அவசரப்பட்டு வாக்கு கொடுக்க வேண் டாம். அப்படி கொடுத்தால் அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். சிலரிடம் கடன் வாங்கலாம் அல்லது சிலருக்குக் கடன் கொடுக்கலாம்.

### கன்னி

இந்த வாரம் எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். அலைச்சல், திரிச்சல் இல்லாமல் சுலபமாகச் சிலவேலைகளை முடிப்பீர்கள். பெண்கள் உதவி கிடைக்கலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றிகிடைக்கும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லபோட்ட திட்டம் நிறைவேறும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். ஜென்மத்தில் இருக்கும் சனி, உங்களை உற்சாகமாகச் செயற்படவிடாமல் அடிக்கடி தடைபோட்டுக் கொண்டிருப்பார். இல்லையெனில், ஆதாயமில்லாத அலைச்சல்களை உண்டாக்குவார். மேலும், தேக ஆரோக்கிய விடயங்களிலும் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகித் தொந்தரவு கொடுக்கலாம். சில விடயங்களில் அவசரப்பட்டுச் செயற்படுவதன்மூலம், மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். பத்தாம் இடத்தில் கேது இருப்பதால், தொழில் ரீதியான விடயங்களில், விமர்சனங்களைத் தவிர்க்க கவனமாகச் செயற்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்களை எளிதில் நிறைவேற்ற முடியாமல் தடை, தாமதங்களை சந்திக்கலாம். லாபஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால், சகோதரர்கள், பங்காளிகள் வகையில் அனுகூலம் பெறலாம். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். நிதியுதவி [illegible] களில் பலன் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரின் [illegible] நான்காம் இடத்தில் ராகு இருப்பதால், தாயார் உடல் நலனில் கவனம் அவசியம்.

### துலாம்

இந்த வாரம் பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளையும், சிரமங்களையும் சந்திக்கலாம். மற்றவர்களை நம்ப ஒப்படைத்த வேலைகள் முடியாமல் அவற்றை நீங்களே மீண்டும் செய்ய நேரிடலாம். முக்கிய வேலை ஒன்றுக்காகத் திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பணவரவுகளைப் பெறலாம். நண்பர்கள், உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விரய ஸ்தானத்தில் சனி இருப்பதால், பொருளாதார விடயங்களில் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும். சிலர், உங்களிடம் சாமர்த்தியமாகப் பேசி பணம் பெற முற்படலாம் என்பதால், கவனம் அவசி யம். ஆதாயம் தரும் தொழில் என, நினைத்து எதிலும் அவசரப்பட்டு இறங்குவதால், பிரச் சினைகளுக்கு ஆட்படலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அதிக அக்கறை காட்ட வேண் டும். பத்தாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், சோம்பலின்றி, எப்போதும் ஏதாவது வே லைக்காக அலைந்து கொண்டிருப்பீர்கள். ஆதாயம் இருக்கிறதோ, இல்லையோ அலைச்சலுக்கு குறைவிருக்காது. இருந்தாலும், ஐந்தாம் இடத்தில் குரு, சுக்கிரன் இருப்பதால், தேவையான பணத்தை புரட்டிக் கொள்ள வாய்ப்பு உண்டு. சீட்டாகவோ, வேறுவகையிலோ சேமித்த பணம் கைக்கு கிடைக்கலாம். அடமான மாக வைத்த பொன், பொருள்களை மீட்கும் வாய்ப்பு உருவாகும். சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் உதவி கிடைக்கும்.

### விருச்சிகம்

இந்த வாரம் வேலை நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். மற்றவர்களின் வேலைகளையும் நீங்கள் சேர்த்துச் செய்யலாம். சிலர் உங்களிடம் கடன் கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். உறவினர்களால் அன்புத் தொல்லையுண்டு.எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். சக ஊழியர்கள், நண்பர்கள் உதவி, சகாயம் கிட்டும். பெண்கள் வகையில் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். லாப ஸ்தானத்தில் இருக்கும் சனியால், தொழில், உத்தியோகம், விவசாயம் போன்ற ஜீவன காரிய விடயங்களில் முன் னேற்றம் காணப்படும். கடந்த கால இழப்புகளை எல்லாம் ஈடுகட்டும் வாய்ப்பு உருவாகும். பொன், பொருள்கள், வீடு, மனை வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பணிபுரிவோருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு வாய்ப்பு சாதகமாகும். விரும்பிய இடமாற்றமும் கிடைக்கலாம். இருந்தாலும், 2ஆம் இடத்தில் ராகு இருப்பதால், குதர்க்கமான பேச்சுக்களை, புண்படும் வகையிலான பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். மற்றவர்களுக்காக உத்தரவாதம் கொடுப்பதும் நல்லது. நான்காம் இடத்தில் சூரியன் இருப்பதால், அரசியல், மருத்துவம், அரசாங்கம், அதிகாரிகள் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக இல்லை. சுக்கிரன் நான்கில் இருப்பதால், பயணங்களால் செலவு உண்டாகும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான வகையில் அல்லல்கள், அலைக்கழிப்புகள், தொல்லைகள் உண்டாகலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வருவதும் தள்ளிப்போகலாம். சில வேலைகளைச் செய்ய மறப்பதால் தண்டச் செலவு, சிரமங்கள் நேரலாம்.

### தனுசு

இந்த வாரம் சந்திரன் மூன்றாம் இடத்தில் சஞ்சரிப்பதால், புதிய முயற்சிகளில் இறங்கலாம். பெரிய மனிதர்கள் சந்திப்பால் பெருமை அடைவீர்கள். மற்றவர்களின் வேலைகளுக்காக அலைவதோடு, உங்களின் சிலவேலைகளையும் முடித்துக் கொள்வீர்கள். உறவினர்கள் வகையில் செலவுகள், சிரமங்கள் நேரும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். பத்தாம் இடத்தில் சனியும், மூன்றாமிடத்தில் குருவும் இருப்பதால், தொழில் ரீதியாக கடும் நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். அடுக்கடுக்காக வேலைகள் குவியலாம். அல்லது ஆதாயத்தை எதிர்பார்த்து நீங்களே வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள். மேலும், நான்காம் இடத்தை சனி பார்ப்பதால், சுக சவுகர்யத்தை அனுபவிக்க முடியாத நிலைமை உருவாகும். தாயார் உடல் நலன் தொடர்பான கவலை, செலவு உண்டாகலாம். ஏழாம் இடத்தில் கேது இருப்பதால், கணவன், மனைவி இடையே மனஸ்தாபம் உருவாகலாம். கூட்டுத் தொழில் விவகாரங்களும் சொல்லிக் கொள்ளும் வகையில் திருப்திகரமாக இருக்காது. நீண்ட தூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டமும் தள்ளிப் போகலாம். அதேநேரத்தில், மூன்றாம் இடத்தில் சூரியன் இருப்பதால், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். அரசியல்வாதிகள், மேலிடத்தின் செல்வாக்கைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். பெண்கள், சகோதரிகள், உறவுப் பெண்கள் உதவிகரமாக இருப்பர். பழைய பொருள்களை சிலவற்றை மாற்றிப் புதிய பொருள்கள் வாங்கலாம்.

### மகரம்

இந்த வாரம் ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சிலரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பீர்கள். திட்டமிட்ட காரியங்களில் ஏற்படும் தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். வேலைப்பளு அதிகரிக்கும். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். காலை முதல் மாலை வரை பரபரப்பாக செயற்படுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தில் குரு இருப்பதால், கையில் காசு பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத் தேவைகளை குறைவின்றி நிறைவேற்றி வைப்பீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பண பலம் உடையவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். பிள்ளைகளால் வீட்டில் சந்தோஷம் உருவாகும். அவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சனி ஒன்பதாம் இடத்தில் இருப்பதால், தந்தை உடல் நலன் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். கடன் பிரச்சினைகளாலும் கவலைகள் உண்டாகலாம். இரண்டாம் வீட்டில் சுக்கிரனும் இருப்பதால், பெண்கள், தாயார், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். ஏழாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால், கோபம், ஆத்திரத்தை மூட்டும் வகையிலான சம்பவங்கள் அடிக்கடி நடக்கலாம். தம்பதியர் இடையே நல்லிணக்கம் பாதிக்கப்படலாம். உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரின் கெடுபிடிகளுக்கு ஆளாகலாம். சகோதரர்களால் மன அமைதி பாதிக்கப்படலாம்.

### கும்பம்

இந்த வாரம் ஊக்கம், உற்சாகமாகவும், பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். அதேநேரத்தில், சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் உண்டாகலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். திட்டமிட்ட காரியங்களில் மாற்றம் ஏற்படலாம். அஷ்டமத்தில் இருக்கும் சனி உங்களைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கிறார். செய்யாத தவறுக்கு பொறுப் பேற்பது, அவசரப்பட்டு சில வேலைகளைச் செய்துவிட்டு, பின்னர் ஏன் செய்தோம் என, வருத்தம் அடைவது போன்றவற்றைச் சந்திக்கலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களிலும் கவனம் அவசியம். ஜென்மத்தில் சூரியன் இருப்பதால், கோபம், வேகத்தை குறைத்து எதிலும் பொறுமையாகச் செயற்பட வேண்டும். பணிபுரிவோர் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாகலாம். அரசியல்வாதிகளுக்கு வீண் அலைச்சல் உண்டாகும். மருத்துவ காரியங்களும் திருப்தி தரும் வகையில் அமையாது. அதே நேரத்தில், ஆறில் செவ்வாய் இருப்பதால், எந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக முறியடிக்கும் வல்லமை அதிகரிக்கும். போட்டி போட்டவர்கள் விலகுவர். ஒரு கடனைத் தீர்க்க மற்றொரு இடத்தில் கேட்ட கடன் கிடைக்கலாம். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். நிலம், பூமி விவகாரங்களும் சாதகமாகவே அமையும்.

### மீனம்

இந்த வாரம் செலவு, அலைச்சல் உண்டு. திட்டமிட்டதை விட சில காரியங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். குடும்ப உறுப்பினர்கள் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டு மன அமைதி பாதிக்கப்படலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நண்பர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரும். ஏழில் இருக்கும் சனி உங்களுக்கு கடும் வேலைபளுவை கொடுப்பதோடு, அதற்கேற்ற ஆதாயத்தை கொடுக்காமல் மன உளைச்சலை உண்டாக்குவார். பார்க்கும் தொழில் சரியில்லையே வேறு இடத்திற்கு மாறி விடலாமா என, பலர் சிந்திக்கலாம். விரும்பத்தகாத இடமாற்றங்களாலும் அவதிப்படலாம். நினைத்தபடி எதையும் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். விரய ஸ்தானத்தில் குரு இருப்பதால், பிள்ளைகள், பயணங்கள், தொழில் விஸ்தரிப்பு முன்னிட்ட செலவுகள் அதிகரிக்கலாம். சுபகாரியங்களை நடத்த பிறரிடம் பணம் கைமாத்து வாங்கிச் செலவுகளைச் சரிக்கட்டலாம். வீட்டை சீரமைக்கும் முயற்சிகளிலும் சிலர் ஈடுபடலாம். சூரியன், சுக்கிரனும் 12 இல் இருப்பதால், தகப்பனார், அரசியல்வாதிகள், அரசாங்கத்திற்கு வரி கட்டுவது, கட்டணம் செலுத்துவது, [illegible] பொருள்கள் வாங்குவது, சகோதரிகளின் தேவைகளை நிறைவேற்றுவது, வாகனங்கள் பராமரிப்பு, பொழுது போக்கு உல்லாச விடயங்கள் போன்றவற்றில் பணம் கரையும். புதன் [illegible] இருப்பதால், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களால் ஆதாயம், அனுகூலம் பெறலாம். வெளிவட்டார தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் பார்வையிட வேண்டிய நீரிழிவு விழிப்புணர்வுக் கண்காட்சி-மருத்துவ பீடத்தில்

திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் இரவு 7.30 மணிவரை 27 ஆம் திகதி வரை தினமும் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் நீரிழிவுநோய் தொடர்பாக மிகப் பிரமாண்டமான கண் காட்சி நடைபெறவுள்ளது.

நீரிழிவை வெற்றி கொள்வோம் என்ற தொனிப் பொருளில் நடைபெற வுள்ள இந்தக் கண்காட்சியினைப் பார் வையிடுவதற்காக பெருந்திரளானோர் மருத்துவ பீடத்தை நோக்கிச் செல்வார்

> 'நீரிழிவை வெற்றிகொள்வோம்'
> மாபெரும் விழிப்புணர்வு விழாவும் கண்காட்சியும்
> இடம் : மருத்துவபீடம் - யாழ். பல்கலைக்கழகம்
> காலம் : 21.02.2010
> பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகி 27.02.2010 வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை

கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். பல் கலைக்கழக மருத்துவபீடம், பொது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து இந்தப்பிரமாண் டமான கண்காட்சியினை முன்னெடுத் துள்ளன.

இந்தக் கண்காட்சியினை பிரபல்யப் படுத்தும் முகமாகவும், பார்வையாளர்க ளின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் கண்காட்சியின் முன்னோட்டமாக வைத் தியர்கள், மருத்துவபீட மாணவர்கள், மற்றும் யாழ். போதனா வைத்தியசா லையின் தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் இணைந்து மிகவும் பிர மாண்டமான கலைப்படைப்புக்களை உங்களுக்காக வழங்கவிருக்கிறார்கள்.

### இன்று ஆரம்ப நிகழ்வு

இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் நூலகக் கேட் போர் கூடத்தில் கலை நிகழ்வுகளுடன் கண்காட்சி ஆரம்பமாகவிருக்கின்றது.

மருத்துவத்துறை சார்ந்தவர்களால் தயாரிக்கப்பட்ட கலை நிகழ்வுகள். முற்று முழுதாக நீரிழிவுநோய் சம்பந் தமான விடயங்களைக் கருப்பொருளா கக் கொண்டு அரங்கேற்றப்படவுள்ளன.

கலை வடிவத்தின் ஊடாக சுகாதாரம் சம்பந்தமான விழிப்புணர்வினை பொது மக்கள் மத்தியில் விதைப்பதற்கான அரிய முயற்சி என்று சொல்லுமளவுக்கு இந் தக் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## கலைகள் ஊடாக வைத்தியப் பணியை முன்னெடுக்கும் பயன்தரு முயற்சி

மக்களுக்குச் சென்றடைய வேண் டிய ஒரு கருத்தைச் சொல்வதற்கு கலைக ளைப் பயன்படுத்தி அதன் ஊடாக சொல்ல வந்த விடயத்தை மக்கள் மத்தி யில் எடுத்துரைத்து அது அவர்களை இலகுவாகச் சென்றடைந்ததையும் நாம் உணர்ந்துள்ளோம். இப்போது குடா நாட்டு மக்களில் குறிப்பிடக்கூடிய எண்ணிக்கையில் பீடித்துள்ள நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களை முதற்கட்டமாக கலைவ டிவத்தின் ஊடாக சொல்லி அதன் மூலம் மக்களைக் கவர்ந்து அதன் பின்னர் அவர்களை நீரிழிவு தொடர்பான கண் காட்சிக்குக் கொண்டு செல்லும் பரீட் சார்ந்த முயற்சியாக இந்தக் கலைநிகழ் வுகளை ஏற்பாடு செய்துள்ளோம் - என்று. கண்காட்சி ஏற்பாட்டாளர்களில் ஒருவரான வைத்திய நிபுணர் எஸ். சிவன் சுதன் தெரிவித்தார்.

உண்மைதான்! ஒரு விடயத்தை கலை ரசனையுடன் சொல்ல முற்படு கின்றபோது அதன் தார்ப்பரியம் எதிர் பார்த்தளவுக்கு வெற்றியளிக்கும் என்ப தில் சந்தேகமில்லை.

அத்தகைய முயற்சியில் இந்தக் கண்காட்சிக் குழுவினர் இறங்கியுள் ளது வரவேற்கவும் ஊக்குவிக்கவும் தக்கன.

இன்று பிற்பகல் 2.30 மணியளவில் கலை நிகழ்வுகளுடன் கண்காட்சி ஆரம் பமாகின்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம் பமாகும் இந்தக் கலை நிகழ்வுகளுக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் என். சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள் ளார். ''நீரிழிவை வெற்றிகொள்வோம்'' என்ற மருத்துவ நூலை உதயன் நிறுவ னத்தின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவண பவன் வெளியிட்டுவைப்பார்.

தொடர்ந்து சிந்தைக்கு விருந்தாக நோயாளருக்கு மருந்தாக ''மக்களின் சுகவாழ்வுக்கு சைவ உணவு முறையா? அசைவ உணவுமுறையா சிறந்தது'' என்ற தலைப்பிலான சிறப்புப் பட்டி மன்றம் கவிஞர் சோ.பத்மநாதன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இதில் துறைசார் வைத்தியர்கள் வாதப் பிரதிவாதிகளாக இணைந்து கொண்டு வாதிடவுள்ளனர்.

அதன் பின்னர் நீரிழிவுநோய் தொடர் பான கருத்துக்களை எடுத்தியம்பும் நிகழ்வுகளாக யாழ்.தாதியர் பயிற்சிக்கல் லூரியின் மாணவ, மாணவிகள் வழங் கும் ''மனமே கலங்காதே'' நடனமும், ''உள்ளம் பெருங்கோயில்'', ''சுமை ஒன் றும் இல்லை'' என்னும் நாடகங்களும் அரங்கினை அலங்கரிக்கவுள்ளன.

மன அமைதிக்கான இசைவெளி யீடாக ''நிம்மதி நோக்கி'' எனும் இறு வெட்டும் வெளியிடப்படவுள்ளது.

இறுதியாக பிரதம விருந்தினர் உரை யும், நிகழ்ச்சி பற்றிய கருத்துரைகளும் வழங்கப்படவுள்ளன.

கலை ரசனையுடன் உங்களைத் கவர்ந்து உங்களில் நீரிழிவு தொடர் பான விடயங்களை கண்காட்சியின் ஊடாக உங்கள் சிந்தைக்கு மருத்துவ விளக்கங்களை எடுத்துச் சொல்ல மருத் துவத்துறைசார் நிபுணர்கள் காத்திருக் கிறார்கள்.

### எல்லோரும் பார்க்க வேண்டிய கண்காட்சி

இந்தக் கண்காட்சியினை பார்வையி டுவதற்காக நீரிழிவு நோயாளர்கள் மட் டும்தான் செல்ல வேண்டும் என்ற தப்பான எண்ணங்கள் உங்கள் மத்தி யில் இருக்கலாம்.

உண்மை அதுவல்ல. சாதாரண பொதுமக்களும் இந்தக் கண்காட்சி யினைப் பார்வையிட வேண்டும்.

வருமுன் காப்போம் என்பதை மை யப் படுத்தி நீரிழிவுநோய் உங்களுக்கு வராமல் எவ்வாறு தடுக்கலாம் என் பதை விளக்கும் செயற்பாடுகளும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட் டுள்ளன.

எனவே அன்புசார் குடாநாட்டு மக் களே! இன்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுறள்ள நீரிழிவு தொடர்பான கண்காட்சிக்கு நீங்களும் சென்று பயன்பெறுங்கள். *



நீரிழிவு தொடர்பான இந்தக் கண்காட்சியில் எமது பிரிவு ''சல ரோக நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்பதற்கான முற் பாதுகாப்பு நடவடிக்கைகள்'' இது குறித்து மக்களுக்கு விளக்கக் காத்திருக்கின் றோம்.

இதில் பின்வரும் விடயதானங்களை உள்ளடக்கியதான விளக்கமளிக்கவுள்ளோம்.

* சலரோகம் பற்றிய அறிமுகம்
* சாதாரணமான ஒருவருக்கு நீரிழிவுநோய் வராமல் தடுப் பதற்கு ஒழுங்கு படுத்தப்பட்ட உணவுப் பழக்க வழக்கங்கள்.
* சீரிய நாளாந்த வாழ்க்கைக் கோலம்
* மன அழுந்தங்களிலிருந்து விடுபடுதல் அதற்கான மூச்சுப் பயிற்சி/தியானம், ளர்வுப் பயிற்சி
* மது, புகைத்தல் ஆகியவற்றைத் தவிர்க்க இன்றியமையாத அம்சங்கள்
* சிறுவயதிலிருந்து முற்பாதுகாப்பு நடவடிக் கைகளை எவ்வாறு மேற்கொள்ளல்
* கர்ப்பிணித் தாய்மார், சிறுபிள்ளைகள் ஆகியவர்களுக்கு சலரோகம் வராமல் தடுப்பது.
* அத்துடன் கண்காட்சியில் பார்வையாளர்களாக வந்து எமது குழுவால் விளக்கமளிக்கப்பட்டவர்களிடையே நீரிழிவுநோய் தொடர்பான புதிர் போட்டிகளை நடத்துதல்.

Dr. நந்தகுமார்.
பிரிவு - A



நீரிழிவ தொடர்பான கண்காட்சியில் எமது பிரிவானது ''நீரிழிவு நோயால் உருவாகும் பாதகமான விளைவுகள் பற்றிய விளக் கங்களை வழங்குவதற்காகக் காத்திருக்கிறது.

* நீரிழிவு நோயால் எவ்வாறு பாதகமான விளைவுகள் உருவாகின்றன.
* பாதகமான விளைவுகள் பற்றிய அறிகுறிகள்.
* பாதகமான விளைவுகளை எவ்வாறு தடுக்கலாம்?
* அத்துடன் கண்காட்சியினைப் பார்வையிட வருகின்ற நோயாளிகள் நீரிழிவு தொடர்பாக எந்தளவிற்கு அறிவினைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதை மதிப்பீடு செய்து அதற்கான சான்றிதழ்களையும் வழங்கவுள்ளோம்.
* நீரிழிவு நோய் தொடர்பாக ஏற்படவுள்ள பாதகமான விளைவுகள் குறித்த விவரண வீடியோ காட்சியினையும் காட்சிப்படுத்தவிருக் கின்றோம்.

Dr.ஜி.கபிலன்
பிரிவு - C

> யாழ்.மருத்துவ பீடத்தில் நடைபெறவுள்ள 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' என்ற கண்காட்சி 5 பிரிவுகளாகக் காட்சிப்படுத்தப்பட்டு நோய் தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளது.
> அத்தகைய 5 பிரிவுகளும் இளம் வைத்தியர்களைக் கொண்டமைந்தது. அந்தப் பிரிவின் ஊடாக நீரிழிவு தொடர்பான விளக்கங்கள் எவ்வாறு பொதுமக்களுக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது என்பது தொடர்பாக அந்தப் பிரிவின் தலைவர்கள் தமது விளக்கங்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். அதனை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.



எமது பிரிவு 'நீரிழிவு நோயாளிக்கான உணவுக் கட்டுப்பாட்டு முறைகள்'' என்கின்ற கருப்பொருளைக் கொண்டு விளக்கமளிப்ப தற்காகக் காத்திருக்கிறது.

* மூன்றுவேளை உணவுகளையும் சலரோக நோயாளர்கள் எவ்வாறு உட்கொள்ள வேண்டும். (இந்த உணவு தயாரித்தல் முறையினைச் செய்முறையில் காட்டுதல்).
* நீரிழிவு நோயாளர்கள் உண்ணவேண்டிய தானிய வகைகள், மரக்கறிவகைகள், கீரைவகைகள் என்பவற்றைத் தெளிவு படுத்துதல்.
* அத்துடன் உயர்தர, சாதாரணதர மாணவர்களுக்காக உணவில் அடங்கிய போசனைப் பொருள்கள் சம்பந்தமான விளக்கங்கள் .
* உணவு வகைகளில் குருதியில் குளுக்கோஸின் அளவைக் குறைத்து சாதார ணமானவர்களைப் போல இருப்பதற்கான வழிமுறைகள்.

(உ+ம் உருளைக்கிழங்குக் கறியினை சலரோக நோயாளி ஒருவர் உட்கொள்ளக்கூடாது. ஆனால் ஒரு நுட்பமுறையில் அதனை எவ்வாறு தயாரித்து உட்கொள்ளலாம் என்பது பற்றி செய்முறைகள் செய்துகாட்டல்)

Dr.வீ.கிருஷாந்தன்
பிரிவு - B

தொகுப்பு: கவிநேசன்
படங்கள்: கரன்

## யாழ்.மருத்துவ பீடத்தில் நடைபெறும் "நீரிழிவை வெற்றிகொள்வோம்" கண்காட்சி மூலம் அது குறித்த விழிப்புணர்வைப் பெறுவோம்

* நீரிழிவு தொடர்பாக வைத்தியர்களின் விவாத மேடை
* நீரிழிவின் தாக்கங்கள், வைத்திய முறைகள் குறித்த நடனம்
* மருத்துவ மாணவர்களின் நாடகம், நடனம், இசை நிகழ்ச்சி
* தாதிய மாணவர்களின் நாடகம், நடனம்

ஊடக அனுசரணை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி தேவை

யாழ்.நகரிலும் அதனை அண்டிய பகுதியிலும் 1 அல்லது 1½பரப்புக் காணி குறைந்த விலைக்கு உடன் தேவை.

தொ.பே.இல. 0775042528 (92113)

## வேலை வாய்ப்பு

எமது ஸ்தாபனத்தில் கடமையாற்ற இருவர் (1ஆண், 1பெண்) தேவைப்படுகிறார்கள். விரும்புவோர் நேரில் வரவும்.

விநாயகர் தொலைத்தொடர்பு நிலையம்,
ம.ம.வி. வீதி,
நெல்லியடி. தொ.பே.0777250918

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பலாலி வீதி, இலுப்பையடிச் சந்திக்கருகில் இரு கடைத் தொகுதிகளுடன் களஞ்சிய அறை, வாகனத் தரிப்பிட வசதி, நான்கு பக்கமும் சுற்று மதிலுடன் 1 பரப்பு 6 குழி காணி விற்பனைக்குண்டு. காணி உரிமையாளரை இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நேரில் சந்திக்கலாம்.

தொடர்பு : 0718229630 (C/565033)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே. சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த, புகழ் பூத்த-சுயதெரிவு முறை முன்னோடி-தனிமனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டி பூர்மாயெழு வேலமுதனுடன் தொடர்பு கொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:2360488, 2360694, 4873929

## தேவை

அலுவலக உபயோகத்திற்கு 3 அறைகள் கொண்ட சகல வசதிகளும் உடைய வீடு தேவை.
(யாழ்.நகரை அண்டிய பிரதேசத்தில்)

தொடர்பு:0776642432, 0774032051

## மரண அறிவித்தல்

*சுப்பிரமணியம் அழகேந்திரன் (இந்திரன்)*



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அழகேந்திரன் நேற்று (20.02.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் காலஞ்சென்ற இரத்தினம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், பண்ணாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மாணிக்கவாசகம் மற்றும் சரஸ்வதி தேவி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், அபிராமி, அனார்த்தனி, அருந்ததி ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திரன் (கனடா), மகேந்திரன் (இளவரசி புடைவையகம், யாழ்ப் பாணம்), இராசேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (92104)

தகவல்:
குடும்பத்தினர்.

## எலைட் வினாத்தாள்கள்

**தற்பொழுது யாழ்.மாவட்டத்திலும்!**

வவுனியா, மன்னார் மற்றும் தமிழ் மாவட்டங்களிலும் புலமைப்பரிசில் மாணவர்கள் உயர் புள்ளிபெற வழிகாட்டிய "எலைற் நிறுவனம்" தற்பொழுது யாழ். நகரிலும் தனது சேவையை விஸ்தரித்துள்ளது. எலைட் வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி நூல்களை யாழ். நகரிலுள்ள பூபாலசிங்கம், அன்னை மற்றும் ஏனைய பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 0776510134, 0774118950

## தேவை

யாழ்ப்பாணத்தில் Pharmacy நடத்தத் தகுதி பெற்ற Licence உள்ள Pharmacist தேவை

தொடர்பு:
0777281926

## Nilkamal®

இலங்கையின் இதயங்கவர் தளபாடம்

சந்தையிலும் தரத்திலும் என்றென்றும் முதல்வன்

ஆசியாவிலேயே பிளாஸ்டிக் தளபாடங்களை உற்பத்தி செய்யும் மிகப் பெரிய நிறுவனம் நில்கமல்.

### விநியோகஸ்தர் தேவை.

### கிளிநொச்சி - முல்லைத்தீவு

ஆகிய பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர் தேவை.

**பின்வரும் தகைமைகள் வேண்டப்படுகின்றன:**

- ★ 2 மில்லியன் ரூபா வங்கி உத்தரவாதம்
- ★ போதியளவு களஞ்சிய வசதி
- ★ விநியோகத்திற்குத் தேவையான வாகனம், ஊழியர்கள் உட்பட அனைத்து வசதிகளையும் கொண்டிருத்தல்.

### விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

### வவுனியா- கிளிநொச்சி


**தகைமைகள்:**

- ★ க.பொ.த. உயர் தரம் (G.C.E. A/L)
- ★ 1வருட அனுபவம்
- ★ மும்மொழிகளிலும் உரையாடுதல் ஒரு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

உங்கள் விண்ணப்பங்களை 7 நாட்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**Marketing Manager**
**Nilkamal Eswaran Plastics (Pvt) Ltd**
328, Madapatha Road, Batakettara, Piliyandala..
Contact: 011 4215268, 011 4212661-3 Fax: 011 4215267
Hotline: 011-4212664 E-mail: mkt@nilkamal.com.lk

## இலங்கையின் முதற்தர பொலிமர் நீர்க்குழாய் வகைகளும் துருப்பிடிக்காத உருக்கு சமையலறைத் தொட்டிகளும்




கிழக்கு மாகாண விநியோகஸ்தர்:
**HAJI - U.L.A.சம்சுதீன் அன் சன்ஸ்**
இல.32 மீன்பிடி இலகா வீதி,காத்தான்குடி 02.
Tele Phone: 065 2246535(Office) 065 22 45171(Res)
Mobile: 077 4123458

யாழ் விநியோகஸ்தர்:
*நாராயணா ஹாட்வெயார்ஸ் ட்ரேடர்*
87, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைப்பேசி: 021 2225390
∴பெக்ஸ்: 021 2228157

ஏக முகவரி:
சென். அன்ரனீஸ் ஹாட்வெயர் (பிறைவேட்) லிமிட்டெட் 524, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5 ∴பெக்ஸ்: 2337286

## Baraka®

உங்கள் நலத்தின் பங்காளி



### DIABsol

நீரிழிவு நோயை கட்டுப்படுத்தவும், நீரிழிவால் ஏற்படும் உபாதைகளிலிருந்து பாதுகாக்கவும்.



### GarliCHOL

பக்கவிளைவுகள் ஏற்படாமல் கொலஸ்ரோலை இயற்கையாக கட்டுப்படுத்தும்.



### Slimexol

உடல் நிறையை குறைத்து, ஆரோக்கியமாக உடற்கட்டமைப்பை பேணும்.



### Black Seed Oil

இருமல், தொண்டை வலி, முடி உதிர்தல், இள நரை மற்றும் முதுகுவலி என்பவற்றிற்கு சிறந்த நிவாரணி.

Manufactured by:
**BIO EXTRACTS (PVT) LTD.**
No: 11, S.De. S. Jayasinghe Mawatha, Kalubowila, Dehiwela.
Marketed by:
**EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.**
**HOT LINE: 0777 800668**

யாழ். விநியோக முகவர்:
**SIVA NARMANA POONGA**
No: 288, Hospital Road,
Jaffna.
**TEL: 0212222567**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியமர்த்தப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்கள் விநியோகிக்க ஏற்பாடு

## அரச அதிபரின் சிபார்சுடன் பட்டியல் தயார்

குடாநாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்ட குடும் பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வசதியாக அவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட வுள்ளன. ஜனாதிபதி செயலணி வடக்கு மாகாண ஆளுநரின் வழி காட்டலில் அரச அதிபரால் இதற்கான செயற்றிட்டம் முன்னெடுக் கப்பட்டுள்ளது. இதற்கான பயனாளிகள் பட்டியல் பிரதேச செய லர்களினால் முன்னுரிமை அடிப் படை யில் தெரிவு செய்யப் பட்டுள்ளது. அப் பட்டியல் அரச அதிபரின் சிபார் சுடன் சம் பந்தப் பட்ட அரச சார்பற்ற நிறுவ்னங் களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சைக்கிள்கள் விநியோகத்தின் போது பிரதேச செயலர், சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள், கல் வித்திணைக் களத்தின் உயர் அதிகாரி, பயனாளிகளின் பெற்றோர் ஆகியோர் கட்டாயம் பிரசன்னமாகி இருந்து பொருத்த மான முன்னுரிமையில் விநியோகம் செய் யப்பட வேண்டுமென அரசாங்க அதிப ரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. முற்றுமுழுதான தேவையினை நிறை வேற்ற இயலாத காரணத்தினால் கிடைக் கப்பெற்ற பட்டியல் களின் வீதாசாரமாக ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

(ஒ-1)

WALK IN CLASSES (எப்போதும் சேரலாம்]
CHEMISTRY
G.C.E (A/L) LONDON
A/L
BIOLOGY
A5, A2 வகுப்புகள்
English Medium
தமிழ் மொழி மூல வகுப்புகள்
யாழ்ப்பாணம் 27.02.2010 சனிக்கிழமை ஆரம்பம் Science Hall (College - கன்னாதிட்டி, 1P.M - 3 P.M உயிரியல் 3 P.M - 5 P.M இரசாயனவியல்
வடமராட்சி 28.02.2010 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பம் Becon Centre (வசந்தம் Net மண்டபம்) காலை 7 A.M - 9 A.M இரசாயனவியல் . 9 A.M - 11 A.M உயிரியல்
அழையுங்கள்
வித்யா
(92101)
25 வருட அனுபவம்
சுழற்றுங்கள்
0777730838
வீடு வந்தும் கற்பிக்கப்படும்
Home Visited

Oriental Aquarium
Multy Farm
கொழும்பு விலையில் வளர்ப்புக் கலர் மீன்கள்
18.02.2010 முதல் அதிரடி மலிவு விற்பனை
வளர்ப்புக் கலர் மீன்கள், மீன் தொட்டி, மீன்தொட்டி உபகரணங்கள், வளர்ப்பின செல்லப் பிராணிகள் (வளர்ப்பின புறாக்கள், முயல், கினிப்பிகள், குருவிகள்) பல வீதமான சாடி வகைகள் கண்டியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல வர்ணப் பூக்கன்றுகள் என்பவற்றை மிக மலிவான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு



| | | | |
|---|---|---|---|
| றோஸ் | ரூ.120 | பாபடன்ஸ் | ரூ.100 |
| கிருஷாந்தி மம் | ரூ.70 | மொசன்டாஸ் | ரூ.100 |
| பேபி றோஸ் | ரூ.60 | போகன் வெலா | ரூ.100 |

தொடர்பு: மல்ரிபாம்
61,இராமநாதன் வீதி, கலட்டி,
யாழ்ப்பாணம் (நாச்சிமார் கோயில் முன்வீதி)
0217912997, 0775397035

அங்கீகரிக்கப்பட்ட கணினி சான்றிதழ்களுக்கான கற்கைநெறிகள்



80 % OFFER
100% செய்முறைப்பயிற்சி
கணினி & LapTop களினை நீங்களே அமைத்துக் கொள்ள...
தமிழ் மொழி விளக்கங்களிலான முற்றிலும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
DIPLOMA IN HARDWARE ENGINEERING
Microprocessor, Various Mother Board Handing, All Type of Cards, HDD, FDD, CD ROM Drive, Printers, Installation - of O/S & Software, Assembling upgrading, Configuring, Troubleshooting, Repairing, User Level Networking
அனைத்து கற்கைநெறிக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம்
தொழில்புரிவோர், மாணவர்களின் வசதிக்கேற்ப வாரஇறுதி மற்றும் மாலை நேர வகுப்புக்கள்
21/2/2010, 22/2/2010
27/2/2010, 28/2/2010
DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021- 222 4403

# 13 ஆவது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம் அரசாமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை பரந்த அளவில் நடைமுறைப் படுத்த நான் வேண்டிய நடவடிக்கை களை மேற்கொள்வேன்.

இதேவேளை தமிழ்க் கட்சிகள் உள் ளிட்ட சகல கட்சிகளுட னும் பரந்த அள வில் பேச்சு நடத்துவேன். புதிய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டும் இலக்குடனும் நாட்டின் அபிவிருத்தியை முன்னிறுத்தியும் செயற் படுவேன்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்றதும் சகல அரசியல் கட்சி களினதும் தலைவர் களை அழைத்துப் பேசுவேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருடனும் முஸ் லிம் கட்சிகளின் தலை வர்களுடன் பேச்ச நடத்த நான் பல தடவை கள் முயன்றேன். பிரபாகரன் உயிரோடு இருக்கும் வரை பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் விரும்ப வில்லை. ஆனால் இப் போது முற்றுமுழு தாகப் புதிய பந்தாட்டமாகியுள்ளது.

என்னுடன் பேச்சு நடத்துவதைவிட அவர்களுக்கு வேறுமார்க்கம் இல்லை. அதனை அவர்கள் புரிந்துகொள்ள வேண் டும். நான் இந்த நாட்டின் ஜனாதிபதி. அவர் கள் என்னிடம் வந்து பேசவேண்டும்; கலந்துரையாடவேண்டும். என்னுடன் வந்து பேசி ஈடுகொடுக்க முடியாது என்று அவர்கள் நினைத்தால் புதிய தலைவர்கள் உருவாகுவார்கள். அவர்களை நான் கையாள நேரிடும்.

### இராணுவத்தில் பிளவுகளை ஏற்படுத்த முனைந்தார் பொன்சேகா

ஜனாதிபதி தேர்தலுக்கு நீண்டகாலத்துக்கு முன்னரே முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இராணுவத் தினர் மத்தியில் பிளவுகளை உண்டாக்கு வதற் கான முயற்சிகளில் - இராணுவ சட்டங்களின் கீழ் வழக்குத் தொடரக்கூடிய நட வடிக்கைகளில் - ஈடுபட்டார் என்று அறிக்கைகள் கிடைத்தன.

அவரைக் கைதுசெய்து விசாரிக்க வேண்டும் என்று இராணுவத்தினர் வலியுறுத்தினர். அந்த வேளை அதற்கு நான் அனும தித்திருந்தால் அவருடன் போட்டியிடுவ தற்குப் பயந்து அதற்கு நான் அனுமதித்தேன் என்று கூறியிருப்பார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், சரத் பொன்சேகா முன்னர் செய்த குற்றங்களுக்காக அவரை விசாரித்தாகவேண்டும் என்று கூறினர். உரிய அதிகாரங்கள் இருந்ததால் அவர் மீது இராணுவ நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்குக் கேட்டார்கள். அனுமதி வழங்கினோம். ஆனால் பாதுகாப்புச் செயலாளர் இது தொடர்பில் மிகவும் எச்சரிக்கையுடனும் அவதானமாகவும் செயற்பட்டார். சரத்பொன்சேகா மீதான இராணுவ நீதிமன்ற நடவடிக்கையில் நான் தலையிட விரும்ப வில்லை. அவ்வாறு செய்தால் இராணுவ அமைப்பு சீர்குலைய ஏதுவாகி விடும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வேறு விதமாக அமைந்திருந்தால் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியிருக்கும். எங்கும் பிணக் குவியல்களையே காண நேரிட்டிருக்கும். 26ஆம் திகதி நாங்கள் உங்களிடம் வருவோம் என்ற அச்சுறுத்தல் கடிதங்கள் தேர்தலுக்கு முன்னர் அனுப்பப்பட்டிருந்தன.

### ரணிலுடன் கூட்டுச் சேரும் சூழ்நிலை உருவாகாது

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நிச்சயமாக வெல்லும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவோம் அல் லது அதனை அண்மிப்போம். ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி சுமாரான ஆசனங்களை வென்றால் அவர் களுடன் கூட் டுச் சேர்ந்து பணிபுரிவதும் எனக்கு எவ் வித பிரச்சினையும் இல்லை. ஆனால் ரணில் அதற்கு முன் வரமாட்டார். எனவே கூட் டுச் சேரும் சூழ்நிலை எதுவும் உருவாக மாட்டாது - என்றார்.

(அ)

Land for contract basis
யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில் ஆவரங்கால் பகுதியில் வீதியோரமாக தொலைத்தொடர்புக்கோபுரம் அமைப்பதற்கும் விளம்பரப் பதாகைகள் அமைப்பதற்கும் ஏற்ற காணி ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும்.
We Have a land to give to build up any communications towers or advertisment banners by the contract basis.
place -, Point Pedro Road, Avarangal.
call - 0776542165

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தேவாம்பிகை இராமநாதன்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவாம்பிகை இராமநாதன் 19.02.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகதாசன் - தையல்நாயகி தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற இராமநாதனின் அன்பு மனைவியும், திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கோடீஸ்வரி மற்றும் புவனேஸ்வரன் (சிங்கப்பூர்), செந்திற்குமரன் (அதிபர், யா/கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை), குமாரசிவம் (கொழும்பு), பாஸ்கரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சபாநாயகம் (ஓய்வுபெற்ற அதிபர்), சாந்தினி (சிங்கப்பூர்), மங்களேஸ்வரி (ஆசிரியர், யா/வீமன்காமம் மகா வித்தியாலயம்), இந்திரா (கொழும்பு), வேணி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பவானி, பாலமுரளி, றஜனி, தயானி, மோகனமுரளி, பிரணவா, சந்தோஷி, சுபாங்கி, அபர்ணாங்கி, சஞ்சீவன், கல்யாணி, சாலினி, சாயிசுதன் ஆகியோரின் பேர்த்தியும், ஜனனி, ஜானவி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'தாசன் அகம்'
இணுவில் தெற்கு, இணுவில்.
தொ.பே.0214902325

தகவல்:
செந்திற்குமரன்.

(92117)

## இராமநாதன் அமிர்தலிங்கம் (சின்னத்தம்பி)

நெடுந்தீவு மேற்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.387/26, பிரமந்தனாறு, தர்மபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் அமிர்தலிங்கம் (சின்னத்தம்பி) நேற்று (20.02.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.420, திருநகர், மல்லாவியில் வசிக்கும் அவரது மகனாரின் இல்லத்தில் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியவில் நடைபெற்றுப் பூதவுடல் திருநகர் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.420, திருநகர்,
மல்லாவி.

(92105)

தகவல்:
குடும்பத்தினர்.

## மயில்வாகனம் பத்மநாதன்



தனங்களப்பைப் பிறப்பிடமாகவும், கச்சாய் றோட், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பத்மநாதன் நேற்று (20.02.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் மயில்வாகனம்-கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் (போதனா நெசவு ஆசிரியர், மறவன்புலோ) அன்புக் கணவரும், கௌரி, வாசுகி ஆகியோரின் தந்தையும், ஜெயரட்ணராஜா (சுவிஸ்), பத்மலிங்கம் (கனடா) ஆகியோரின் மாமனாரும், டிலக்ஷி, துவாரகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(92119)

தகவல்:
குடும்பத்தினர்.

## தம்பித்துரை இசிதோர் பொன்ராஜா

87/1, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட தம்பித்துரை இசிதோர் பொன்ராஜா நேற்று (20.02.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை-எலிசபெத் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-மேரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பவளத்தின் அன்புக் கணவரும், ஜெயந்தினி (மட்டக்களப்பு), நந்தினி (யாழ்ப்பாணம்), பிரபாகரன் (யாழ்ப்பாணம்), ராஜேஸ்வரன் (மன்னார்), நிலாந்தினி (மட்டக்களப்பு), கிருபாகரன் (கொழும்பு), பாஸ்கரன் (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிமேகன் (மட்டக்களப்பு), மகேசன் (யாழ்ப்பாணம்), தக்ஷாயினி (யாழ்ப்பாணம்), தமயந்தி (மன்னார்), மகீரதன் (மட்டக்களப்பு), சுஜாதா (கொழும்பு), மாலினி (வவுனியா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், ஜீவானந்தம், தனானந்தம் மற்றும் செல்வராசா (வவுனியா), புனிதமலர் (சூராவத்தை) ஆகியோரின் உடன் பிறப்புமாவார்.

அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை (22.02.2010) திங்கட்கிழமை மு.ப. 10மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

87/1, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(92120)

தகவல்:
நந்தினி (மகள்),
மகேசன் (மருமகன்).

# மரண அறிவித்தல்

## திருமதி திருநாவுக்கரசு பரமேஸ்வரி



தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு பரமேஸ்வரி நேற்று (20.02. 2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.02.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத் தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்

(83474)

தகவல்:
தி. உதயசூரியன்
(மகன்-சமாதான நீதிவான்)

தேவை
அரைக்கும் ஆலை, ரயர் வேக்ஸ், ரீ மேக்கர், மோட்டார் சைக்கிள் மெக்கானிக் + சேவிஸ் என்பவற்றில் அனுபவம் உள்ளவரும் பயிலுனரும் தேவை:
தொடர்பு : S.பிறேம்,பிருந்தாமில்
இல.18 நக்காவீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0772231096

மணப்பெண் அலங்காரம்
இந்தியாவில் அழகுக்கலை மற்றும் மணப்பெண் அலங்காரத்தில் டிப்ளோமா பட்டம் பெற்ற அழகுக் கலை நிபுணரால் ஓடருக்கு சிறந்த முறையில் எல்லா வகையான மணப்பெண்அலங்காரங்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.
தொடர்புக்கு: 0717245132

விற்பனைக்கு
Massey Ferguson - MF - 135
JH .........தொடரிலக்கம்
49........ தொடரிலக்கம் கொண்ட இரண்டு டிரக்டர்கள் உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 - 1332002, 0777399572

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.

# வீதிகளை அகலமாக்கி புனரமைக்கும் பணிகளுக்கு உதவிட சீன உயர்மட்டக்குழு செவ்வாயன்று யாழ்.வருகிறது

யாழ்ப்பாணம், பெப்.21

யாழ்.மாவட்டத்தில் மூன்று பிரதான வீதிகளை அகலமாக்கி புனரமைப்பது தொடர்பான பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள சீன நாட்டு உயர்மட்டக்குழு ஒன்று நாளைமறுதினம் யாழ்ப்பாணம் வருகிறது.

யாழ்.காங்கேசன்துறை வீதி, யாழ். பருத்தித்துறை வீதி, யாழ்.கண்டி வீதி ஆகியன சீன நாட்டு உதவியுடன் சீன பொறியியலாளர்களால் புனரமைக்கப்படவிருக்கின்றன.

இந்தப் புனரமைப்புக்கான ஆரம்பப் பணிகள் ஜனவரி மாதம் 21ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து இந்த வீதிப்புனரமைப்பு பணிகளை முன்னெடுக்க சீனாவின் உயர் மட்டக்குழு நாளை மறுதினம் வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுடன் இணைந்து சீனக் குழுவினர் செயற்பாடுகளை முன்னெடுப்பர்.

(அ-1-23)

## ஆளும் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதிர்காமர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து தேர்தலில் போட்டியிட விருக்கின்றார்.

கொழும்புக்கு நேற்றுச் சென்ற அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் அமைச்சர்களான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), அமீர்அலி மற்றும் எம்.எச்.எம். ஹிஸ்புல்லா, சாகீர் அலி மௌலானா ஆகியோர் போட்டியிட இருக்கின்றனர். (ஒ-1)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது படையினரிடம் சரண் அடைந்த 11,000 போராளிகள் அரசால் நிர்வகிக்கப்படும் புனர்வாழ்வு முகாம்களில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

அவர்களுக்கான சமூகக் கிராமங்கள் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் 200குடும்பங்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்படவிருக்கிறது.

இதற்காக தெரிவு செய்யப்பட்ட இடத்தில் 200வீடுகள் அமைந்திருக்கும். இதற்கு மேலதிகமாக விவாகம் செய்த 3000பேர் புனர்வாழ்வு பெற்று வருகின்றனர்.

அவர்கள் குடும்பத்துடன் தங்கியிருக்கும் போது புனர்வாழ்வு அளிப்பது சுலபமாக இருக்கும்.

வீட்டு மின்னிணைப்பு, தச்சு வேலை போன்ற தொழில்சார் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்றார் அவர். (அ-1)

## ஸ்ரீலங்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசன ஒதுக்கீட்டின் அடிப்படையில் போட்டியிட வேண்டியதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பலருக்கு போட்டியிடக்கூடிய வாய்ப்புக்கள் கிடைக்காது என்றும் அஞ்சப்படுகிறது.

அம்பாறை, கொழும்பு, கண்டி ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரசுக்கு ஆசனங்களை ஒதுக்குவதில் முரண்பாடுகள் எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடவேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

வடமாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுமா என்பது குறித்து இதுவரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-1)

## கூட்டமைப்பின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துக்கு இன்று வரவிருக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்த விடயம் குறித்து தெரிவித்தவை வருமாறு:

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர் பட்டியல் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டது. அதில் இடம்பெறுவர்கள் சிலர் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடலை நடத்த வேண்டியுள்ளது.

இன்று பெரும்பாலும் இக்கலந்துரையாடல் இடம்பெற்று நாளை உத்தியோக பூர்வ பட்டியல் வெளியிடப்படும் -என்றார்.

இதேவேளை தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் மாவை சேனாதிராசா வேட்பு மனுக்களில் கையொப்பம் வைப்பதற்காக இன்று மட்டக்களப்புக்குச் செல்கிறார். (ஒ-1)

## முல்லையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பி.எஸ்.சூசைதாசன் கூட்டமைப்பு வேட்பாளராக நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் மக்கள் முன்னால் வருகிறார்.

அத்துடன் ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் மீண்டும் போட்டி யிடுகின்றனர் எனத் தெரியவருகிறது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோருக்கு இம்முறை வேட்பாளர் பட்டியலில் இடம் வழங்கப்படவில்லை. (ஒ-1)

## கூட்டமைப்பின் யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரிருவர் தவிர ஏனையயோர் புது முகங்களாவர்.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பொ.செல்வராசா தலைமையில் களம் இறக்கும் கூட்டமைப்பு அணியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ப.அரியநேத்திரன், சட்டத்தரணி எஸ். சிவநாதன், முன்னாள் பாடசாலை அதிபர் எஸ்.சத்தியநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு. சௌந்தரராஜன், முன்னாள் வங்கி அதிகாரி சி. ஆறுமுகம், ரெலோ பிரமுகர் பிரசன்ன இந்திரகுமார் ஆகியோர் இடம்பெறுகின்றனர். கல்குடா தொகுதிக்குரிய வேட்பாளர் யார் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

### அம்பாறை

அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தோமஸ் வில்லியம் தங்கத்துரையை முதன்மை வேட்பாளராகக் கொண்டு களம் இறங்கும் அணியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சந்திரநேரு, ரெலோ பிரமுகர் ஹென்றி மகேந்திரன், ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் கே. இராசையா ஆகியோர் இடம்பெறுகின்றனர். ஏனைய எட்டுப் பேரும் புதுமுகங்கள்.

### திருகோணமலை

திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் தலைமையில் களம் இறங்கும் அணியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கமும் இடம்பெற்றுள்ளார். ஏனைய அனைவரும் புதுமுகங்களாவர். (ஒ-1)


**விற்பனைப்பிரதிநிதி தேவை**

பிரபல பல்தேசிய கம்பனி ஒன்றில் விற்பனைப் பிரதிநிதி வெற்றிடம் உண்டு.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
sumanjaffna@gmail.com (C/565041)

**காணி தேவை**

யாழ்.நகருக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் A9 வீதியை அண்டியதாக 5பரப்புக்காணி தேவை.

தொடர்பு: 0715230945 (C/565038)

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Clerk (full time)
2. Instructor (MSO, DTP) full time

நேரில் வரவும்

Softview Computer College
55, Arasady Road, Jaffna.

**மீண்டும் பழைய இடத்தில் ஆரம்பம்**

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE | Duration 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER PROGRAMMING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | Duration 1 Year |
| DIPLOMA IN VISUAL BASIC | Duration 4 Months |
| DIPLOMA IN VISUAL FOXPRO | Duration 4 Months |
| DIPLOMA IN C++ | Duration 4 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | Duration 2 Months |
| DIPLOMA IN ACCOUNTING PACKAGES | Duration 4 Months |
| DIPLOMA IN AUDIO & VIDEO EDITING | Duration 4 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | Duration 4 Months |
| KIDS PROGRAMMING (year 2-9) | |

ICT (G.C.E. O/L) பயிற்சி நெறிகள் ஆரம்பம் 24.02.2010
GIT (G.C.E. A/L) 27.02.2010

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
T.P 021 2225170

**காணி விற்பனைக்கு**

யாழ்.நகருக்கு சுமார் 6km தூரத்திலும், நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள, இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்: 0776081695, 0772469015

**கார் விற்பனைக்கு**

மிற்சுபிசி லான்சர் கார் 13ஸ்ரீ விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0713790458 (C/565040)

**புதியபிரிவுகள் ஆரம்பம்**

Advanced Dip. in Video mixing (Morph, Cool3d, Project, Premiere, Soundforge, Combustion, Power director, Vcd and convertor, Editing using Photoshop)
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Graphics Design
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→ 09வரை)
Group Classes

முழுமையான கணனிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...

CBCA
CB Computer Academy, Station Road Kondavil. T.P: 021-3217903

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

DBF

மீட்டல் வகுப்புக்கள்
20.02.2010
ஆரம்பமாகிவிட்டன.

Furthur Detail
Director
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

**தேவை**

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு ஐஸ்கிறீம் விற்பனையில் ஆர்வமுள்ளவர்கள் தேவை.

★ ஓட்டோ லைசென்ஸ் உள்ளவர் மட்டும் தேவை.

தொடர்பு: ராஜா ரீனாஸ்,
24, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. (C/565039)

**வாகனம் தேவை**

அலுமினிய பொடி உள்ள சிறியரக வாகனம் (டிமோபட்டா) நாளாந்த அல்லது மாதாந்த வாடகை அடிப்படையில் தேவை.

தொடர்பு: 0215677777, 0715230945 (C/565042)

**Dialog Telekom**

நம்பமுடியாத விலைக்கழிவுடன்
டயலொக் ரெலிக்கொம் யாழ்.நகரில்...

தொடர்பு: 0217912750, 0777334436, 0777330070. 0777331250.

**இப்போது விற்பனையில்**

பிரபல ஆசிரியர் ந.சந்திரகுமார் (மட்டக்களப்பு) அவர்களால் தயாரிக்கப்பட்ட புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் 17பக்கங்கள் கொண்டவை. சில்லறை விலை 30.00 மட்டுமே.

பாடசாலைகளுக்கு விசேஷ கழிவுண்டு.

யாழ்.மாவட்ட முகவர்:
ஸ்ரீகரன் புக் சென்ரர், கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 0777253037, 0213210960 (C/565049)

NALIN Information Technologies Pvt Ltd

NALIN னில் ஞாயிறு முதல் புதிய வடிவங்களில் மிகக் குறைந்த விலையில் கணனிகள்

மூன்று வருட உத்தரவாதத்துடன் புத்தம் புதிய கணனிகளை தெரிவு செய்யுங்கள்

HP BRANDED PC & LAPTOP மிகக்குறைந்த விலையில்

புதிய வடிவங்களில் COMPUTER Table உங்கள் தெரிவுக்காக

2.7, 2.93 CORE 2 DUO கணனிகள் இப்போது நியாய விலையில்

புதிய வடிவங்களில் Flash Drive, Head Phone Webcam

195/4 PARAMESWARA JUNCTION TP: 0212221166, 0777667974 email: nitpvt@nalininfotech.com

ANCHOR Royal Gol... Re-live ... golden

Anchor Air force
The power to blast off heat !

Certified by American Quality Assessors ISO 9001 : 2000 CERTIFIED COMPANY

Anchor Fans pioneered the use of aero dynamic techonology in India

24

தரமானதும் SLSI தரச்சான்றிதழ் பெற்றதுமான அங்கர் மின்விசிறிகள் தற்பொழுது யாழ்ப்பாணத்திலும்...

Imported by:
Abbe (PVT) LTD.
14,1/1, Daya Road, Colombo - 06

ANCHOR
Anchor Electrical PVT LTD.
Mumbai, India.
Member of Panasonic

Sales Point:
67A, Wolfendhal Street, Colombo -13,
T.P: 0112439993.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.02.2010இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்சியுள்ள பண்பாட்டு வரலாற்றுச் சின்னங்களையும்

கடந்த சில வாரங்களாக வீதியை அகலமாக்கல் செயற்பாட்டின் தொடர்ச்சியாக, அது குறித்து எழுதப்பட்டுவரும் கட்டுரைகளையும், கருத்துக்களையும் அவதானித்து வருகிறேன். குறிப்பாகக் கடந்தவாரம் உதயனில் வெளியான அதற்கு முந்திய கட்டுரையை ஒட்டிய கருத்துக்கள் தொடர்பாக சில விடயங்களை முன்வைக்க விரும்புகிறேன்.


கே.கே.எஸ்.வீதியில் தெய்வத் திருவுருவச் சிலைகளை வடிக்கும் கலைக்கூடம் ஒன்று

சமூக பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம் உடைய பண்டைய சின்னங்களும்- இடங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை முதன்மைப்படுத்தியும்- அதற்கான ஆக்கபூர்வமான நிலவரங்கள் தொடர்பாகவும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை எளிமையாக ஒருபுறம் நகர்த்தி வைத்துவிட்டு வீதியை அகலிக்கலாமா- இல்லையா என்ற பட்டிமன்ற விவாதம் போல ஆக்கபூர்வமற்ற முறையில் மேற்படி விடயம் திரும்பியுள்ளமை மிகவும் கவலைக்குரியது. எந்தவொரு சமூகமும் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளை மேம்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்தோ- சந்தேகமோ இருக்காது என்றே நம்புகிறேன். ஆனால் இவ்வகையான நிலவரங்களுக்குள் சமூகப் பண்பாட்டு வரலாற்று முதன்மை மிக்க சின்னங்களையும்- இடங்களையும் தமது மேம்பாட்டின் ஒரு பெருமை மிக்க பகுதியாக பாதுகாத்தல் எவ்வாறு என்பது தான் பிரதானமாக இங்கு முன்வைக்கப் பட்டுள்ள கேள்வி. இது ஒன்றும் புதிய விடயம் அல்ல. உலகம் முழுவதிலும் இந்நிலைமைகளை எதிர்கொள்ளு வதற்கான மாற்றுவழிகளும்- தந்திரோ பாயங்களும் வளர்த்தெடுக்கப் பட்டுள்ளன. நாகரிகமடைந்த எந்தச் சமூகமும் (தலிபான்கள் போன்ற அடிப்படைவாதிகள் 2001 இல் பாமிய புத்தர் சிலைகளை வெடிவைத்துத் தகர்த்தது போல) தமது பண்பாட்டு மரபுரிமைச் சொத்துக்களை அகற்றியும்- அழித்தும் அதனை

சந்தேகமில்லாமல் ஒரு பெரிய விடயம் தான்.

மரபுரிமைச் சொத்துக்கள் எனப் பொதுவாகப் பெயரிடப்பட்டுள்ள சமூக வரலாற்றுப் பண்பாட்டுப் பெறுமதிமிக்க கடந்த காலத்தின் அடையாளங்கள், அவற்றின் மனிதகுல வரலாற்றின் முதன்மை கருதி உலகம் முழுவதிலும் சர்வதேசச் சட்டங்களாலும் தேசிய- உள்ளூர் சட்டங்களாலும் பாதுகாக்கப்படுகின்றன. இலங்கையரசும் இதற்கான தேசிய- உள்ளூர் சட்ட விதிகளைக் கொண்டுள்ளதுடன், சர்வதேச ரீதியான மரபுரிமை சம்மந்தப்பட்ட சட்டவிதிகளையும் ஏற்றுக்கொண்டுள்ளது. சர்வதேச ரீதியாக UNESCO நிறுவனத்தால் ICOMOS எனப்படும் பண்பாட்டு மரபுரிமைச் சொத்துக்களை பாது காப்பதற்கான சர்வதேச அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. (பார்க்க www. icomos.org)

இவையெல்லாம் ஒரு புறமிருக்க உலகவங்கியின் சுற்றாடற்துறை அண்மைய தசாப்தங்களாகக் கூறிவருகின்ற மிக முக்கியமான ஒரு

என்பதாகும்'' எனும் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் கருத்து இவ்வாதத்தின் அச்சாணியாகும். இச் செய்தியைத்தான் வீதி அபிவிருத்திச் சபையின் பிரதம பொறியிலாளர் தவற விட்டுள்ளார்.

இதே நேரம் அவரது செய்திக் குறிப் புத் தொடர்பாக சில கேள்விகளை முன்வைப்பதனூடாக மேலும் சில விடயங்களை நாம் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம். ஏ9 வீதியின் மத்தி யிலிருந்து 50 அடிக்கு அப்பாலேயே கட்டடங்கள் கட்ட வேண்டும் எனக் கூறுமவர் கோயில்கள் இடிக்கப்பட்டே வீதிகள் புனருத்தாரணம் செய் யப்படுமென அரசாங்கமோ , வீதி அபி விருத்தி அதிகார சபையோ கூறவில்லை என்கிறார். ஆனால் குறுகலான வீதிகளை 50 அடிக்கு எடுக்கும் போது அதிலுள்ள கட்டடங்கள் பாதிக்காது என எப்படிக் கூறுகிறார்கள் என்பது புரியவில்லை. ஒரு வேளை அவ்வாறான இடங்களில் தெரு வின் மறுபக்கம் அகலமாக்கப்படும் எனில் தெருவில் எத்தனை வளைவுகள் உருவா கும். குறிப்பாக K.K.S. வீதியில் தட்டா தெருச் சந்தியில் இருந்து பார்த் தால்- பல வளை வுகள் குறுகிய இடை வெளி களில் உருவாகும் மேலும் இதனால் ஏனை யவருக்கு தேவை பற்றி பாதிப்பு ஏற்படும் இல்


வண்ணார்பண்ணை சிவன்கோயில் முன் மண்டபம்

சமூகப் பண்பாட்டு உருவாக்கத்தின் விளை வான நூற்றாண்டுகள் கடந்த பல கட்டடங்களும் இதனை யொட்டி உள்ளன. அதன் அடிப்படையிலேயே அது ஒரு பண்பாட்டு மரபுரிமை இடம் (Cultural hevitage site) என வாதிக்கப்படுகின்றது.

சரி இதற்கப்பால் இன்னொரு முக்கியமான விடயத்தைப் பற்றியும் விவாதிப்போம்- இது இலங்கைத் தொல்பொருள் திணைக்களச் சட்டங்களோடு சம்மந்தமுடையது. இது அரும்பொருள் தொடர்பாக 1940களில் கொண்டு வரப்பட்ட சட்டம். 1956, 1998 இற் செய்யப்பட்ட திருத்தங்களோடு சம் பந்தப்பட்டது.

இது தொடர்பாக ஆர்வமுடை யவர்கள் இதனை வலைத்தளத்திற் கூடப் பார்வையிலாம். இதிற் குறிப் பிடப்படும் கட்டுரைகளோடு நேரடி யாகத்தொடர்புடைய சில விடயங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதில் முக்கியமானது 100 வருடங்களுக்கு குறையாத எந்த வொரு கட்டுமானமும் புராதன சின்ன மாகக் கருதப்படவேண்டும் என அது கூறுகிறது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் 100 வருடங்களுக்கு முற்பட்ட பல கட்டுமானங்கள் நமது அரச அதிகாரிகள்- உள்ளூர் சமூகத்தின்

# அழிக்கத் தயாராகி விட்டோமா?

விடயத்தை நாங்களும் நடத்தி முடிக்கக் கங்கணம் கட்டியுள்ளோமா- அதாவது மூன்றாம் மண்டல நாடுகளில் மரபுரிமைச் சொத்துக்களின் இருப்பு அபாயகரமான நிலையில் உள்ளது எனவும் நவீனமயமாக்கல் மற்றும் அபிவிருந்தி செயற்றிட்டங்களும் பகுதியள.வில் இந்நிலவரத்திற்கு காரணம் எனவும் அதன் அறிக்கையொன்று கூறுவதுடன் அதற்கான மாற்றுவழிகளை அது வற்புறுத்துகிறது. இந்தப் பின்னணியில் கடந்த ஞாயிறு உதயனில் இடம்பெற்ற இது தொடர்பான கருத்துக் களுக்கு வருவோம்: ''வீதி விஸ் தரிப்பை அமுல்படுத்தும் போது சர்வதேச ரீதியாகக் கடைப்பிடிக்கப் படும் முக்கிய விடயம் யாதெனில் இதன்போது எந்தவொரு குடிமகனும் பாதிக்கப்படாத வகையில், எந்தவொரு இனத்தின் அடையாளச் சின்னங்களும் பாதிக்கப்படாமல் அனைவருக்கும் நன்மை பயக்கும் விதத்திலேயே மேற்படி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும்


நாவலர் மகாவித்தியாலயத்தின் பிரார்த்தனை மண்டபம்

மேற்கொள்ளவில்லை. பண்பாட்டு உள்ளீடு அற்ற அபிவிருத்தி என்பது அபிவிருத்தியே அல்ல என நாகரிக உலகு பேசிக்கொண்டிருக்கும் போது, 'யுத்தமும், காலமும் தின்றது போக' எஞ்சியுள்ளவற்றை எந்தவிதமான முன் திட்டமிடல் இன்றி அழிக்கப் போகின்றோமா? என்பது

லையா?

கட்டடங்கள் சரி யாகக் கட்டப்பட்டுள்ள போதிலும் பழைய கட்டடங்களே பிரச்சினையாயின் அது குறித்த அவர்களது நிலைப்பாடென்ன- இடித்துத் தள்ளி விடலாமா? அல்லது அவர் கூறுவது போல வீதி அபிவிருத்தி அதிகார சபை யின் அனுமதி பெறாத கட்டடங்கள் சட்டவிரோத கட்டடங் களாயின் காலனிய ஆட்சிக்காலத்தில்- வண்ணார் பண்ணைச் சிவன் கோயில் போல 1780 களில் கட்டப்பட்ட கட்ட டங்களும் சட்டவிரோதக் கட்டடங்களா?

இதே நேரம் கே.கே.எஸ் வீதியில் மட்டுமா புராதன சின்னங்கள் உள்ளன என்ற அவரது கேள்வி முக்கியமானது, பண்பாட்டு மரபுரிமையோடு தொடர் புடைய அரச அலுவலர்களுக்கு இது சமர்ப்பணம். ஆனால் கே.கே. எஸ். வீதியைப் பற்றி அதிகம் பேசுவதற்கு வேறு காரணங் கள் உண்டென்பதை இது தொடர்பான கட்டுரைகள் எடுத்துக் காட்டியுள்ளன. முக்கியமாக 'கோயில் நகரம்' எனும் ஒரு பண்டைய நகர வடிவமைப்பு வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலைச் சுற்றியுள்ளது. இது வேலாயுத பிள்ளை ஆசிரியர் கூற முற்பட்டது போல இலங்கையின் தேசிய மரபுரிமைச் சொத்தாகப் பிரகடனப் படுத்த வேண்டியது. வெறும் கோயிலைப் பற்றி மட்டும் இங்கு பேசவில்லை. கோயிலோடு கூடிய நகரத்திட்டமிடல் இங்கு முக்கியம். கோயில் மட்டுமல்ல- கோயிலோடு கூடிய நகர அமைப்பும் சேர்த்துப் பேணப்பட வேண்டும். அடுத்த சந்திக்காக- வருங்கால யாழ்ப்பாணத்திற்காக- இலங்கைக்காக அது பேணப்பட வேண் டியது. இதுதான் மிக முக்கியமானது. இதே நேரம் இதனை மையமாகக் கொண்டு நிகழ்ந்த ஒரு

விழிப்பின்மை- அசமந்தப்போக்கால் அழிந்தும், கவனத்தில் எடுக்கப்படா மலும் உள்ளன. கே.கே.எஸ் வீதி வண்ணார் பண்ணைப் பகுதியை பொறுத்த வரை 100 வருடங்களுக்கு முற்பட்டதும்- வரலாற்று முதன்மை மிக்க கட்டுமானங்கள் பலவுள் ளன. என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண் டியது. இதே நேரம் அபிவிருத்தி வேலை கள் (அரசு/நிறுவனம்/ தனியார்) குறிப்பிட்ட பகுதியில் மேற்கொள்ளப்படும் போது அது தொடர்பான தொல்லியற் திணைக் களப் பணிப்பாளரது முற்பார்வை- அனுமதி என்பது சட்டத்தால் வற்புறுத்தப்படுகிறது. இது தொடர்பான எதுவும் இங்கு சம்மந்தப் பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டதா? என்பது முக்கியமான கேள்வி. இது அபிவிருத் திகளின் போது பண்டைய மரபுரிமைகள் பாதிக்கப்படாமல் போவதற்காக இலங்கை யரசு ஏற்படுத் தியுள்ள சட்ட ஏற்பாடாகும்.

எனவே, தயவு செய்து இவற்றை எல்லாம் கவனத்தில் எடுத்து உண்மையான சமூகப் பண் பாட்டு அபி விருத்தியை உருவாக்க அனைவரும் சேர்ந்துழைக்கவேண்டும். தனிப்பட்ட வகையான தேவையற்ற கருத்துப் பரிமாற்றங்கள் பொது வளர்ச்சிக்கு ஏதுவான தல்ல. அண்மையில் இது தொடர்பான நேர் காணல் ஒன்றில் 'பொது மகன்' ஒருவர் 'இது பற்றி பேசிக் கொண்டிருந்தால் இதற்கான நிதி திரும்பிப் போய்விடும்' எனக் கூறி யுள்ளார். உண்மைதான் அவரது அக்கறை யும் வர வேற்கப்பட வேண்டியது. ஆனால் நிதி போனால் நாளை திருப்பி வரலாம். தரு மாறு போராடலாம்? நிர்ப்பந் திக்க லாம் மரபுரிமைச் சொத்துக்கள் போனால் வருமா?

திரும்பவும் இந்த விவாதத்தின் முதற் கட்டுரையாளர் கூறியதையே இறுதியாகக் கூற விரும்புகிறேன். 'யுத்தமும், காலமும் தின்றது போக' எஞ்சியதையாவது அடுத்த தலை முறைகளுக்காகப் பாதுகாப்போம்.

**மு.சிவகரன்**

* * * * * * * * * * +

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வைரவி செல்லத்துரை

(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவி செல்லத்துரை 16.02.2010 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவி-சின்னாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சரசாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னப்பு- முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ரவிச்சந்திரன் (ஜேர்மனி), உமாச்சந்திரன் (சுவிற்சர்லாந்து), பிறேமச்சந்திரன்(சுவிற்சர்லாந்து), சசிகலா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமாஸ்கந்தமூர்த்தி (கனடா), கவிதா (ஜேர்மனி), சுஜாதா (சுவிற்சர்லாந்து), சுமந்தினி (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனும் அபிசாந், மௌனிகா, சகீதன், சமீசன், சபீசனா, சிவகார்த்திகா, அஸ்வின், பிரவின், அபிஷேக், நபியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, வேலுப்பிள்ளை, செல்லம் மற்றும் ஆச்சிமுத்து, மார்க்கண்டு, காலஞ்சென்ற அப்புத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் விநாயகமூர்த்தி, பரமசாமி, சிவக்கொழுந்து, கெங்காதரன், புஸ்பவதி, இராசையா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியிலிருந்து 9 மணிவரையும் நாளை (22.02.2010) திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து 10 மணிவரையும்Highland Funeral Home & Cremation Center 3280 Sheppard Avenue East, Scarborough Ontario M1T 3K3 என்னும் முகவரியில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, பின்னர் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

நாளை (22.02.2010) திங்கட்கிழமை மானிப்பாயில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மைத்துனர்:
க.நடராசா
ஆ.உருத்திரகுமார்.
சித்தி விநாயகர் கோயிலடி,
உடுவில் தெற்கு, மானிப்பாய். (95260)

தகவல்:
**உறவினர்கள்.**
கனடா தொலைபேசி இலக்கம்:-
+14167592608
+16476375425

## இன்றைய ஆட்டங்கள்

உடுவில் பிரதேசசெயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 8 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. இன்றைய போட்டிகளில் பத்துக் கழகங்கள் கலந்து கொள்ளவுள்ளன. போட்டியில் கலந்துகொள்ளவுள்ள கழகங்களைக் குறிப்பிட்ட நேரத்திற்கு மைதானத்திற்குச் சமுகம் தரும் படி விளையாட்டு அலுவலர் அறிவித்துள்ளார். (1-86)

* * *

சண்டிலிப்பாய்கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி ஆட்டத்தின் அரையிறுதி மற்றும் மூன்றாம் இடம், இறுதி ஆட்டங்கள் இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளன. (1-86)

* * *

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையேயான 40 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கான 7பேர் பங்குபற்றும் விலகல் முறையான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் (ஏ) விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (4-23)


## KIDS BASIC DRIVES

தரம் - 1 தொடக்கம் தரம் - 6 மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புக்கள் 24.02.2010ஆம் திகதி தொடக்கம் கீழ்வரும் முகவரியில் நடைபெறவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் முன்கூட்டியே பதிவினை மேற்கொள்ளவும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**57, வளாக வீதி, திருநெல்வேலி தெற்கு,**
(பாலசிங்கம் விடுதிக்கு அருகாமையில்) T.P: 021 3206695 (94904)

## WANTED IMMEDIATELY

EMAR PHARMA (PVT) LTD is a well established pharmaceutical company which has more than 30 years of rewarding history in Sri Lanka is looking for young energetic, honest and hard working individuals for the below vacancies in Northern Region.

The company operates as an exclusive representative to numerous agents for several international manufacturers such as: Indoco Remedies, Ind - Swift, wallace pharmaceuticals and Unicure Remedies.

**MEDICAL REPRESENTATIVE**

Ideal Candidate Should have studied up to the G.C.E A/L preferably in Bio - Science, fluent in English and Tamil, have minimum 1-2 years experience in pharmaceuticals, Age 18 - 27, preference will be given to candidate from Northern region.

**TRAINEE MEDICAL REPRESENTATIVE**

Ideal Candidate should have studied up to the G.C.E A/L preferably in Bio - Science, fluent in English and Tamil, Age 18 - 27. at all times. be willing to undertake extensive traveling and work long hours, be result oriented, self motivated and a team player with a pleasing personality, preference will be given to candidate from Northern region.

**An attractive remuneration package with performance related incentives and excellent opportunities for career development will be offered to the right candidate.**

Please apply with your detailed CV, contact telephone numbers, address and the names of two non related referees within 3 working days to the below mentioned address. The interview will be held from 26th and 27th feb 2010 at the below address.

Marketing Manager,
Emar Pharma (PVT) Ltd
C/O Vanika medicals,
85, Hospital Road, Jaffna
Tel: 021 2222445.

## தரமான கல்வி மற்றும் பயிற்சிகளில் 20 வருட நிகரற்ற சேவை (1990 – 2010)

CINEC இலங்கையின் நிர்வாக தலைநகரான ஸ்ரீ ஜயவர்தனபுர அருகிலுள்ள எழில்மிகுந்த மாலபே நகரில் அமைந்துள்ளது. CINEC MARITIME CAMPUS சர்வதேச அங்கிகாரம் பெற்ற தரநிர்வாக அமைப்பின் உறுதியான அடிப்படையில் உருவாகப்பட்டது.

ISO 9001 Quality Assurance Standard, ISO 14001 Environmental Management Standard; OHSAS 18001 Occupational Health & Safety Standard and DNV Maritime Academy Standard; CINEC was judged to be the best Education & Training facility in the island and bestowed with the prestigious National Quality Award in 1999, 2004 and again in 2009.

கவர்ச்சிகரமான சம்பளம், உயர்ந்த தொழில்நிலை, மற்றும் இதர பலன்கள் பெற்றுத்தரும் கல்வித்துறையை தெரிவு செய்யுங்கள்

**BSc**
International Transportation Management and Logistics



சக்திமிக்க, துடிப்பான, உற்சாகமன இளம் ஆண், பெண் இருபாலாருக்கும் அருமையான சந்தர்ப்பம்...

**OFFICER CADET**



To become...
Ship's Captain
Marine Chief Engineer
or Marine Electrical Engineer

தகுதி:
க.பொ.த.உயர்தரம் விஞ்ஞான பிரிவில் 3 சித்திகளும் அல்லது க.பெ.த.சாதாரண தரம் + CINEC Foundation Programme வயது 21வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்

*Study for the prestige*

பொறியியற் கல்விக்கான நம்பகத் தன்மை வாய்ந்த ஒரே இடம்

முழுமையான வெளிநாட்டு பட்டப்படிப்பை இலங்கையில் முழுமையாக வழங்கிவரும் ஒரே கல்விவளாகம் CINEC



- BEng Mechatronic Engineering
- BEng Electronics and Communications
- BEng Automotive Systems Engineering
- BEng Engineering Design Management
- BEng Mechanical Engineering

www.adinnovationslk.com

INFOTEL யாழ் கணிகாட்சி மற்றும் தொழில்சார் ஆலோசனை கருத்தரங்கு
காலம் : 26ந் திகதி முதல் 28ந் திகதி பெப்ரவரி 2010 வரை
இடம் : வேம்படி மகளீர் கல்லூரி யாழ்ப்பாணம்

CINEC Maritime Campus

CINEC Maritime Campus,
Millennium Drive, IT Park, Malabe.
Tel: (011) 4 888606-8, (011) 241 3500,
E-mail: info@cinec.edu

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
- 0775 12 78 03

World Class Excellence in Education and Training www.cinec.edu


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் இலங்கையில் பல்வேறுபட்ட தேவைகளுக்காக, பலவகையான மூக்குக்கண்ணாடிகளை மக்களுக்கு வழங்குவதில் நிபுணத்துவம் பெற்ற **SPECS** நிறுவனம் இரு தசாப்பங்களிற்குப் பின்பு BRITISH BUSINESS SCHOOL இன் அனுசரனையுடன் யாழ் மண்ணில் கால் பதிக்கின்றது.

**யாழ் மண்ணில் எமது சேவையை ஆரம்பிக்கும் நேக்குடன், பின்வரும்கண்பரிசோதனை முகாம்களும் (EYE CAMP) விசேட விலையில் கண்ணாடிகள் வழங்கல் சேவையும் நடாத்தப்படும்.**

விரைவில் யாழ் மண்ணில் நவீன இலத்திரனியல் கண் பரிசோதனை கூடமும், காட்சியறையும் திறக்கப்படும்.

நான்கு கண் பரிசோதனை முகாம்கள் யாழ் குடாநாட்டில் பிரபல கண் வைத்தியர்களால் திறந்து வைக்கப்படும்.

எமக்கு எல்லா விதத்திலும் ஆதரவு தந்த கல்விச் சமூகம், அரசாங்க உத்தியோகத்தர்கள், அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

| | நாள். | திகதி. | நேரம். | இடம். |
|---|---|---|---|---|
| Eye camp: 1 | வியாழக்கிழமை. | 25.02.2010 | 8 a.m - 4 p.m | யாழ் கல்வி வலயம் (விசேட கல்வி அலகு.) |
| Eye camp: 2 | வெள்ளிக்கிழமை. | 26.02.2010 | 9 a.m - 2 p.m | 1. வலிகாமம் கல்வி வலயம். |
| | | | 2.30 p.m - 5.30 p.m | 2. சுன்னாகம் BBS Lakshmi Cottage ( Near the New Court), K.K.S Road, Mallakam. |
| Eye camp: 3 | சனிக்கிழமை. | 27.02.2010 | 8 a.m - 4 p.m | நெல்லியடி மகாவித்தியாலயம். |
| Eye camp: 4 | ஞாயிற்றுக்கிழமை. | 28.02.2010 | 8 a.m - 1p.m | 1. BBS ஆலடிச் சந்தி மா்னிப்பாய். |
| | | | 2 p.m - 5 p.m | 1. BRITISH BUSINESS SCHOOL 140, கோவில் வீதி, யாழ்ப்பாணம் |

**கண்பரிசோதனை முற்றிலும் இலவசமாக நடாத்தப்படும். No Consultancy Fees.**

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு GOC மூலம் விசேட வழங்கல்கள்.

மாணவர்களுக்கு விசேட விலை ரூபா 650/- மட்டுமே.

ஆசிரியர்களுக்கு 1200/- மட்டுமே அக்ரகார காப்புறுதி மூலம் பெறலாம்

பொதுமக்களுக்கு 50% கழிவு

BRITISH BUSINESS SCHOOL இல் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் விசேட கழிவுப் பத்திரத்தை BBS இன் கீழ் கண்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

**SPECS**
SARAT PERERA EYE CARE SERVICES.

**BBS**
BRITISH BUSINESS SCHOOL
140, TEMPLE ROAD, JAFFNA.
TEL: 0212225796, 0212224060

British BUSINESS SCHOOL




Study in SINGAPORE

# சிங்கப்பூர் அரசு வழங்கும் 80% புலமைப்பரிசில்கள்

*T&C Apply

REPUBLIC POLYTECHNIC



80% Tuition Grant*
Subsidised school fees are available to eligible candidates

## Higher Education @ Republic Polytechnic

Join Us in the 2010 April Intake. Apply with Your GCE 'O' or 'A' Level Results
Between 19th Feb - 26th Feb 2010

**யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 23ம் திகதி கருத்தரங்கு நடைபெறும்.**

Courses in Republic Polytechnic
- ✓ Environmental Science
- ✓ IT Service Management
- ✓ Information Technology
- ✓ Materials Science
- ✓ Industrial & Operations Management
- ✓ Supply Chain Management
- ✓ Business Applications
- ✓ Business Information Systems
- ✓ Common Engineering

You can pursue a tertiary education with Republic Polytechnic (RP), a government institution in Singapore. RP offers a unique and innovative education that nurtures the individual to source for solutions to real life problems faced at the workplace.

>>>> For enquiries, please call :

singapore education SPECIALIST

# MILLENNIUM CONCEPTS
140, Temple Road, Nallur, Jaffna. (Opposit UN / UNICEF)

011 7392 555 | 021 222 5796 | 021 222 4060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 ★ 03 ★ 1959



மறைவு 03 ★ 03 ★ 2009

அமரர் வல்லிபுரம் சுந்தரலிங்கம் [லிங்கம்]
(டோசர் ஒப்பரேற்றர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

ஆயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறாது எம் மனம்
அழியாது உன் உருவம்
தேறாது நாங்கள் தேம்பி அழுதாலும்
தேடி எங்களிடம் வரமாட்டீரோ
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

நி.மு: சாயுடை,
மாவிட்டபுரம், தெல்லிப்பழை..
த.மு: அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (95290)

உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.



## விற்பனைக்கு

25 வருட பழைமை வாய்ந்த இலவமரம் மூன்று உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- திருமதி ப.நாகேஸ்வரி
தொ.பே.இல: 0778012242 (95279)

## காணி விற்பனைக்கு

காரைநகர் கசூரினா பீச்சுக்கு அண்மையிலுள்ள தென்னந்தோட்டக்காணி உடனடியாக விற்பனைக்குள்ளது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகொள்ளவேண்டிய
தொலைபேசி இல: 0779761373 (95294)

## லொறி வாடகைக்கு

வியாபாரத் தேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய லொறி (ELF 350) கிழமை அல்லது மாத வாடகை அடிப்படையில் கொடுக்கப்படும். (95292)
தொடர்பு: 078 6230411



# சேவை நலன் பாராட்டு



எமது வைத்தியசாலையில் 27 வருடங்கள் கடமையாற்றி 21.02.2010 இல் ஓய்வுபெற்றுச் செல்லும்
திரு. அம்பிகைபாகு சண்முகராசா
அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வு காலத்திலும் சகல சௌபாக்கியத்துடனும் தனது குடும்பத்தினருடன் நீடூழி வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,
கைதடி. (சி/565022)

பணியாளர்
நலன்புரிச் சங்கம்.


## அரச ஊழியர் விபரம் திரட்டப்படுகிறது

நாவற்குழி,பெப்.21

இலங்கை மத்திய வங்கி தனது ஆண்டறிக்கையைத் தயாரிக்கும் பொருட்டு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல அரசதுறைகளையும் சார்ந்த ஊழியர்களைக் கணக்கெடுக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளது.

மத்திய அரச துறை, மாகாண அரச துறை, உள்ளூராட்சித்துறை ஆகியன ரீதியாகப் பணிபுரியும் அரச ஊழியர்கள் கணக்கெடுக்கப்பட உள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் எத்தனைபேர் பணியிலுள்ளனர், எத்தனை வெற்றிடங்கள் உள்ளன போன்ற விவரங்களும் பெறப்பட உள்ளன. மத்திய வங்கியினால் வருடாந்தம் வெளியிடப்படும் இந்த ஆண்டறிக்கையை கொள்கைத் திட்டமிடலாளர்களும், நடை முறைப்படுத்துபவர்களும் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ரி-121)

### மீளக்குடியமர்ந்த விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கல்

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள, வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த வறிய விதவைகளுக்கு வழங்கவென 50 தையல் இயந்திரங்களை அனுப்பி வைத்துள்ளது.

அவை பிரதேச செயலக, உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக உள்ள விதவைகளின் எண்ணிக்கைக்கேற்ப, தையல் பயிற்சி உள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இதற்குரிய பயனாளிகள் தெரிவு ஏற்கனவே முடிந்துள்ளது. (ரி-122)

### விஞ்ஞான இளமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான இளமாணிப்பட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். விண்ணப்ப முடிவுத்திகதி அடுத்த மாதம் 13 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (1)


Einhell® PRINCE Husqvarna CROWN WATERTEC

எமது கம்பனியானது ஹாட்வெயார் மற்றும் இயந்திரங்களை விற்பனை செய்வதில் கடந்த 06 தசாப்தங்களாக உறுதியான நிலைபாட்டினைக் கொண்டிருப்பதோடு சர்வதேச ரீதியாக தலைசிறந்து விளங்கும் பல விதமான சந்தைப் பொருட்களுக்கு முகவராகவும் இருந்து வருகிறது.

**வட மாகாணத்துக்கான** விற்பனை மற்றும் அதனோடு தொடர்புள்ள சகலவித நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் அதிகாரமுள்ள குழுவொன்றை யாழ்ப்பாணத்தில் நியமிக்க இருக்கிறோம்.

### பிரதேச முகாமையாளர்

- **யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கும் பிரதேச அலுவலகத்தின்,** விற்பனை/கடன்/கையிருப்பு/அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றின் நிர்வாகக் கூட்டுப்பணிகளை மேற்கொள்வதன் பொருட்டு, ஒரு ஒழுங்கான நெறிமுறையை செயற்படுத்தல்.
- நிதி மற்றும் சந்தைப்படுத்தல் நெறிமுறைகளில் கல்வித் தகுதிபெற்றவராக இருத்தல் வேண்டும்.
- சம்பந்தப்பட்ட தொழிலில் 05 வருட முகாமைத்துவ அனுபவம் இருத்தல் அவசியம்.
- வயது 35-45 இற்கும் இடையில் இருத்தல் அவசியம்.
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தொழில் உயர்வுக்கேற்ப அதிசிறந்த வாய்ப்பு வளங்களும் வழங்கப்படுவதோடு கம்பனி பராமரிப்புக்குட்பட்ட வாகனமொன்றும் வழங்கப்படுவதுடன் குடும்ப காப்புறுதி ஒப்பந்தம் ஆகியன வழங்கப்படும்.

### பிரதேச விற்பனை முகாமையாளர்

- ஒரு உறுதியான வளர்ச்சியுடனான விற்பனை முறையை நெறிப்படுத்துவதற்காக வளங்களைத் தக்கவாறு பயன்படுத்துவதோடு, உறுதியான சிறந்த உபாய முறைகளைக் கையாளுதல் அவசியம்.
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் நெறிகளில் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
- சம்பந்தப்பட்ட தொழிலில் பூரண அறிவும் அனுபவமும் இருத்தல் அவசியம்.
- வயது 35 இற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தொழில் உயர்வுக்கேற்ப அதிசிறந்த வாய்ப்பு வளங்களும் வழங்கப்படுவுதோடு கம்பனி பராமரிப்புக்குட்பட்ட வாகனமொன்றும் வழங்கப்படுவதுடன் குடும்ப காப்புறுதி ஒப்பந்தம் ஆகியன வழங்கப்படும்.

### களஞ்சிய பொறுப்பாளர்

- க.பொ.த. (உ.த) பரீட்சையில் வெற்றிகரமாகச் சித்தியடைந்திருத்தலோடு, களஞ்சியப்படுத்தல் பற்றிய அறிவு இருக்க வேண்டும்.
- களஞ்சியப்பொறுப்பு, விலைப்பட்டியல் கட்டுப்பாடு மற்றும் களஞ்சிய ஆவணங்கள் தொடர்பான பூரண அறிவு இருத்தல் வேண்டும்.

### எழுதுவினைஞர்

- க.பொ.த. (உ.த) பரீட்சையில் வெற்றிகரமாகச் சித்தியடைந்திருத்தல்.
- வர்த்தக அலுவலக சூழலில் வேலை செய்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### கடன் அறவிடுவோர்

- க.பொ.த. (உ.த) பரீட்சையில் வெற்றிகரமாகச் சித்தியடைந்திருத்தல்.
- தான் நேர்மையும் நம்பிக்கையுமுடையவர் என்பதை தகுந்த முறையில் உறுதி செய்ய வேண்டும்.
- சம்பந்தப்பட்ட சகல கடன் அறவீடுகள் குறித்து முகாமைத்துவத்துக்கு அறியப்படுத்துவதில் ஈடுபடவேண்டும்.

### சாரதிகள்

- செல்லுபடியாகும் வாகன ஓட்டுநர் உத்தரவுப்பத்திரமொன்றை வைத்திருப்பதோடு, சிறந்த ஓட்டுநராக நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும்.

### விநியோக உதவியாளர்கள்/களஞ்சிய உதவியாளர்கள்

- தகுந்த சரீர சௌக்கியத்துடன் திடகாத்திரமாக இருப்பதோடு லாறிகளிலும் களஞ்சியங்களிலும் பணியாற்ற விருப்பம் உடையவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும், தமது உறவினரல்லாத மதிப்புக்குரிய இருவருடைய பெயர் முகவரியிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் தொழிலின் பெயரையும் குறிப்பிட்டு ஏழு தினங்களுக்குள் தபால் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

Manager HR & Administration,
**St. Anthony's Hardware (Pvt) Ltd**
516, Sri Sangaraja Mawatha, Colombo 10.
E-mail: vacancy@stanthonys.lk



# JOIN THE AWARD WINNER
(Vacancy in Jaffna)

## GENERAL MANAGER

Our Group originated in 1977 from Jaffna now turned in to a bi-national company with a fully owned subsidiary in India catering to local & Global markets.

Our operations include Manufacturing of Food &Dairy Processing Machinery & Equipment for multinational companies in India & Sri Lanka, Soap & Detergent Powders For international brands and Ice manufacturing to support the fisheries industries in Jaffna.

The Group has decided to diversify its business activities by embarking to establish Machinery manufacturing and Food & Dairy Industries in North of Sri Lanka.

Towards this objective we are looking for a General Manager who is prepared to take up the challenge to materialize the innovative vision of the management and establish these industries and make them viable and operate as independent units.

Ideal Candidate Should be:

*Around 40-45 years
*In possession of the first degree in Finance/Engineering/ Food Technology or in the relevant field. Post graduate education in Business Manage ment will be an advantage.
*Having proven track record in senior positions in similar industries
*Able to base himself in Jaffna

Foreign nationals of Sri Lankan origin also could apply.
Please forward your detailed Curriculum Vitae to
damayanthi@isfindustries.com or post to (94768)

Heritage
HERITAGE FOODS (PVT) LTD
¾ ROCKWOOD PLACE,
COLOMBO 07.



# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற இரசாயனவியல் ஆசிரியர்,
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி,
நைஜீரியா பல்கலைக்கழகம்)



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் பதிவாளர் வீதி, திருநெல்வேலி கிழக்கை (தலங்காவில் பிள்ளையார் கோயிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை நேற்று முன்தினம் (19.02. 2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்க மாணிக்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் துரைச்செல்வி, ஐங்கரநேசன், ஆறுமுகநேசன், பத்மினி அனுஷியா, ஸ்ரீ தத்தாத்திரேயநேசன், ரவிச்சந்திரநேசன், திருக்கேதீசரநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன், ஆனந்தமூர்த்தி, பாமினி, நந்தினி, ஏழிலரசி (பிரதேச வைத்தியசாலை, வேலணை), கெங்காதேவி, கோமதியா (இந்திரா) ஆகியோரின் மாமனாரும் அஞ்சலி, பைரவி, துஷ்யந்தி, துவாரகன், துஷ்யந்தன், நிலானி (வள்ளி), கம்பன், யுவேதா, திவ்யநேசன், நிதர்சன் பத்திரன், நிவேதா மாணிக்கம் சவரினா, எலிசபெத், பெஞ்சமின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பதிவுகாரர் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
(தலங்காவில் பிள்ளையார் கோயிலடி),
யாழ்ப்பாணம். (95285)

தகவல்:
பொ.ஐங்கரநேசன்,
பொ.ஸ்ரீதத்தாத்திரேயநேசன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org